# ...தக்க தேவர்

...ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
நிகழ்நிலைத் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# திருத்தக்க தேவர்

சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
நிகழ்நிலைத் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு 1977
**சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவு வரிசை 17**

பாரி அச்சகம், சிதம்பரம்.

# முன்னுரை

தமிழகத்தின் பெருமை மிக்க தலங்களில், சிதம்பரம், தலையாய தலம். இந்திய நாட்டின் பெருமை மிக்க பல்கலைக் கழகங்களில், தனி ஒருவரால் நிறுவப்பெற்றுள்ள நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிறந்த பல்கலைக் கழகம். சிதம்பரமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும், அருகருகே இருப்பது, தமிழர் செய்த தவப்பயன் ஆகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப்பல்கலைக் கழகம். இப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றிய பெருமக்களில், ஒருவராகிய சொல்லின் செல்வர், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் நாடெங்கும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்த செந்தமிழ்ச் சான்றோர் ஆவர் எனலாம். அவருடைய எழுத்திலும் பேச்சிலும் தென்தமிழ், தென்றல் தமிழாய் வெளிவரும். அவர்கள், தம் அன்னையார் சொருணம்பாள் நினைவாக, நம் பல்கலைக் கழகத்தில், ஓர் அறக்கட்டளை நிறுவினார்கள். இத்தகைய அறக்கட்டளையைச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் நிறுவியுள்ளார்கள். பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள், இவ் அறக்கட்டளைக்காக, நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இருபத்தைந்து ஆயிரம் ரூபாயும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இருபத்தைந்து ஆயிரம் ரூபாயும் வழங்கினார்கள். இவ்வாறு அவர்கள் வழங்கியது தமிழ்ப் புலவர்களுக்குப் பெருமை தந்தது மட்டுமல்லாமல், தமிழ்ப் புலவர் வரலாற்றிலேயே, பெரியதொரு மாறுதலையும் செய்துவிட்டது. புலவர்கள், புரவலர்களாக மாறிய பெருந்தன்மையைச் சொல்லின் செல்வர் வரலாறு காட்டுகின்றது.

பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களின் கொண்டையினைப் பாராட்டி, நம் பல்கலைக் கழகத்தில்தான், மிகப் பெரிய பாராட்டுவிழா, பேராசிரியர் பிள்ளை அவர்களுக்கு 12—12—1958ல் நடைபெற்றது. அவ்விழா, இப்போது என் நினைவுக்கு வருகின்றது. அவ்விழாவிற்கு நம் இணைவேந்தர் டாக்டர் ராஜா சர் முத்தையசெட்டியார் அவர்கள், தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். செட்டி நாட்டு அரசியார் மெய்யம்மை ஆச்சி அவர்களும் அவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். புலவர் களுக்கும், கவிஞர்களுக்கும், இசைப் பேரறிஞர்களுக் கும் பொன்னுடை போர்த்துப் போர்த்துப் பாராட்டிப் பாராட்டி முத்தமிழ் வளர்ச்சிக்கு முதன்மையும் ஆதர வும் வழங்கி, வளர்த்து வருகின்ற முத்தைய வேந்தர் அவர் கள், தம் திருக்கரத்தால், சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னுடையும் போர்த்துப் பெருமைப் படுத்தினார்கள். அப்பெருவிழாவில், அப்போது துணைவேந்தராக இருந்த திரு. தி. மூ. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள், வர வேற்புரை நிகழ்த்தினார்கள். அவ்விழாவில், நான் நன்றி கூறினேன். அக்காட்சி, இன்றும் என் நெஞ்சில் பசுமை யாக உள்ளது.

சொருணம்பாள் அறக்கட்டளையின் சார்பாக, ஆண்டு தோறும் புலவர் திருநாள் கொண்டாட வேண்டும் என்பது, சேதுப்பிள்ளை அவர்களின் வேட்கை. அவர் களின் சீரிய நோக்கத்திற்கு ஏற்ப, முதல் புலவர் திரு நாள், 1959-ல் நடைபெற்றது. பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், அத்திருநாளில் கலந்து கொண்டு, "இளங்கோவடிகள்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

இன்று தலைமை ஏற்றிருக்கும் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், புலவர் திருநாளின் ஐந்தாம் திருநாளில், கம்பரைப் பற்றிப் பேருரையாற்றி னார்கள். அப்போது, நான் தலைமை தாங்கினேன்.

இன்று தொடங்குகின்ற பதினேழாம் திருநாளினை நம் மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்கள், தொடங்கி வைத்துள்ளார்கள். இவர்கள், பேரறிஞர்களாலும் பெருந் தலைவர்களாலும், பாராட்டப் பெறுகின்ற உலகப்புகழ்

பெற்ற பேரறிஞர்; உயர்ந்த கல்வியாளர். உலகமொழி யான ஆங்கிலத்தில், புகழ் பெற்ற எழுத்தாளர். தலை சிறந்த பேச்சாளர்.

சொருணும்பாள் சொற்பொழிவின் முதல் திருநாளில் அப்போது துணைவேந்தராக இருந்த நாராயணசாமிப் பிள்ளை அவர்கள், பங்கு கொண்டு உரையாற்றினார்கள். அடுத்து; சொருணும்பாள் சொற்பொழிவிற்குத் துணை வேந்தர் அவர்கள் வந்திருந்து, தொடங்கி வைத்து உரை யாற்றுவது, இத்திருநாளே ஆகும். இவர்கள் தொடங்கி வைத்தது, தமிழிற்குப் பெருமை; தமிழின்பால் இவர்கள் கொண்டுள்ள பற்றின் விளைவு; மேலும் இவர்கள் கூறுவது போல், இவர்களுக்குப் பழைய நண்பனாகவும் புதிய நண்பனாகவும் எப்பொழுதும் நண்பனாகவும் நான் இருக் கின்றேன் என்பதற்கு இது ஒரு தக்க சான்றும் ஆகும். இவர்களுடைய அன்பிற்கு என் நன்றி.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினையும், தமிழ் இசைச் சங்கத்தினையும் தோற்றுவித்த அண்ணாமலை அரசர் அவர்களும், அவர்களின் திருமகனார் முத்தைய வேந்தர் அவர்களும் இவ்விரு நிறுவனங்களையும் கண்ணும் கருத்துமாக வளர்த்த-வளர்த்து வருகின்ற பாங்கினை நான் நன்றாக அறிவேன். அண்ணாமலை அரசர் அவர்கள், பெருங்கொடைக்கு இலக்கணமாகத் திகழ்கின் றவர்கள். கல்வி உலகிற்கு அவர்கள் செய்துள்ள அரும் பெரும் பணிகளை நாடு ஒருநாளும் மறக்கமுடியாது. முத்தைய வள்ளல் அவர்கள், எல்லோராலும் எப்போதும் மேலும் மேலும் உயர்வாக மதிக்கப் பெறுகின்ற பெருந்தலைவர். அவர்கள், அறிவின் திருவுருவாய் அருளின் உறைவிடமாய்ப் பொதுநலப் பணிகளையே தம் பொழுது போக்காகக் கொண்டு மகிழ்கின்றவர்கள். என் வளர்ச்சிகளுக்கெல்லாம் எப்பொழுதும் காரணமாக விளங்குகின்ற பெருந்தகையாளர். அவர்களைப் போலவே நம் துணைவேந்தர் அவர்களும், சிறியன சிந்தியாத பெருமனம் படைத்தவர்கள். இவர்கள் இருவரும், உள்ளத்தால் ஒருவராய் இணைந்து பணியாற்றுவது இப் பல்கலைக்கழகத்தின் பெரும்பேறு ஆகும். நம் துணை வேந்தராக டாக்டர் சந்திரசேகர் அவர்கள், பொறுப்பு

ஏற்றுக் கொண்டதனை அரசர் அவர்கள் பெருமையாக அடிக்கடி சொல்வதை நாம் அறிவோம். இத்தகு சீர்மை சான்ற இணைவேந்தர் அவர்களும், துணைவேந்தர் அவர்களும் தலைமை ஏற்க, இவர்களுடன் நாம் அனைவரும் சேர்ந்து கொண்டாடும் பொன்விழா, இப்பல்கலைக் கழகத்திற்கு நெருங்கி வருகின்ற இப்பொற்காலத்தில், சொருணும்பாள் சொற்பொழிவினை நான் நிகழ்த்துவது குறித்துப் பெருமகிழ்வு எய்துகின்றேன். சொருணம் என்பதற்குப் பொன் என்பதுதான் பொருள்.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கும் டாக்டர் மாணிக்கம் அவர்கள், என்றும் என்பால் பேரன்பு கொண்டவர்கள். நிறைந்த கல்வியும் சிறந்த பண்பும் உடைய இவர்கள் இப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக அமைந்திருப்பது, பெருமைக்கு உரியது.

இச்சொற்பொழிவு நிகழ்த்தும் வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காகத் துணைவேந்தர் அவர்களுக்கும், ஆட்சிக் குழுவினருக்கும், தமிழ்ப் பேராசிரியர் அவர்களுக்கும், தொடர்பு உடைய மற்றெல்லோருக்கும் என் நன்றி உரியதாகும்.

நான், இத்திருநாளில் பேச மேற்கொண்ட புலவர், திருத்தக்கதேவர். இவரைப் பற்றிப் பேசுவது என்றால், இவர் இயற்றிய காப்பியம் பற்றிப் பேசுவது என்பதுதான் பொருள். எனவே, திருத்தக்கதேவர் இயற்றிய சீவக சிந்தாமணியைப் பற்றி மூன்று தலைப்புக்களில், முறையே, மூன்று நாட்களில் பேசவுள்ளேன். காப்பிய அமைப்பு, காப்பிய அழகு, காப்பியப் பெருமை என அத்தலைப்புக்கள் மூன்றாயினும், இம்மூன்றாலும் திருத்தக்கதேவரின் அறிவாற்றலே வெளிப்படும்.

# 1

# காப்பிய அமைப்பு

இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும் பெற்ற மொழி நம் தமிழ் மொழி. பெருக்கத்தால் வளமும் திட்பத்தால் செம்மையும் ஏற்படும். தமிழில் காணப்படும் இலக்கியப் பெருக்கம், இலக்கிய வளத்தினைக் காட்டும். தமிழ் மொழிக்கண் அமைந்துள்ள வரையறை, இலக்கணச் செம்மையை வெளிப்படுத்தும். இலக்கிய வளமும் இலக்கணச் செம்மையும், ஒரு மொழியின் நிலைபேற்றுத் தன்மையையும் வளர்ச்சியையும் புலப்படுத்தும் இயல்புகள் ஆகும். கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, தமிழ் மொழியில், பற்பல இலக்கியங்களும் இலக்கணங்களும் தோன்றியுள்ளன. அவை, சிறந்தவைகளாகவும் பிற்கால வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் விளங்குகின்றன.

தமிழில் தோன்றிய பழைய இலக்கண நூல்களை நோக்கினால், எவ்வளவு இலக்கியங்கள் தமிழில் எழுந்தன என அறியலாம். இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பது, நம் முன்னோர் துணிபு ஆகும். தமிழ் இலக்கியங்கள், அமைப்பால் பலவகையின. தனிப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் முதலாக, அவை பலதிறப்படும். இவற்றில், தனிப்பாக்களே மிகுதி. அடுத்த நிலையில், சிற்றிலக்கியங்கள் மிகுதியாக உள்ளன. காப்பியங்கள், குறைவாகவே உள்ளன.

காப்பியமே புலவர் ஒருவரின் முழுத்திறமையையும் நிலைநிறுத்துவதற்கு ஏற்ற இலக்கிய வடிவம் ஆகும். காப்பியம் என்பது, கதை தொடர்ந்து வரும் செய்யுட்களின் தொகுதி. காப்பியத்தைப் பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்றும் கூறுவர். இத்தொடர்நிலைச்செய்யுளில், கவிஞர்கள் உலகத்தையே படைப்பர். அவ்வாறு படைக்கும்போது, மனித இனத்தின் பல்வேறு வாழ்வு தாழ்வுகளையும் எடுத்துக் காட்டுவர்; தம் அறிவு நுட்பங்களை அமைப்பர்.

தமிழில் தோன்றிய முதற்காப்பியம், சிலப்பதிகாரம். இது, தமிழ்நாட்டுக் கதையை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றது. இதனுடன் இணைந்த தொடர் காப்பியமாக வெளிவந்ததே மணிமேகலை. சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இணைத்து இரட்டைக் காப்பியங்கள் என்று கூறும் வழக்குப் பிற்காலத்தில் ஏற்பட்டுள்ளது. இக் காப்பியங்கள் இரண்டிற்குப் பின் தமிழில், பல காப்பியங்கள் தோன்றியுள்ளன. அவற்றில், சேக்கிழார் பெருமான் பாடிய பெரியபுராணம் நீங்கலாக, ஏனைய காப்பியங்கள், வடமொழியிலிருந்து தமிழாக்கப் பெற்றன.

## காப்பியங்கள்

காப்பியமாம் பொருள்தொடர் நிலைச் செய்யுளைப் பெருங் காப்பியம் என்றும் காப்பியம் என்றும் பகுப்பர். இதனைத் தண்டியலங்காரத்தினால் அறிகின்றோம். <u>பெருங்காப்பியம்</u> என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் உணர்த்துவது ஆகும். காப்பியம் என்பதனைச் சிறுகாப்பியம் என்றும் கூறுவர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது சிறு காப்பியம் என்பர். தமிழ் மொழியில் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, வளையாபதி, குண்டலகேசி, சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம், பெரியபுராணம், கம்ப ராமாயணம், கந்தபுராணம், வில்லிபுத்தூராழ்வார் பாரதம் முதலாகக் காப்பியங்கள் பல உள்ளன. இக் காப்பியங்களில் ஐந்து காப்பியங்களைப் பெருங்காப்பியம் என்றும், ஐந்து காப்பியங்களைச் சிறுகாப்பியம் என்றும் பகுத்துள்ளனர்.

## ஐம்பெரும் காப்பியங்கள்

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். ஐம் பெருங்காப்பியம் என்னும் சொல்லாட்சியை முதன் முதல் வழங்கியவர், நன்னூலின் முதல் உரை ஆசிரியராகிய மயிலை நாதரேயாவார்.

"ஐம்பெருங்காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் சிற்றிலக்கியங்களுள்ளும்"

என மயிலைநாதர்* குறிப்பிடுகின்றார். இவர் ஐம்பெருங்காப்பியம் என்ற தொகைப் பெயரைச் சுட்டுகின்றாரேயன்றி அவை எவை என்பதனை எடுத்துக் கூறவில்லை. மயிலைநாதர் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு என்பர். எனவே கி.பி. 14ஆம் நூற்றாண்டளவில் "ஐம்பெருங்காப்பியம்" என்னும் சொல்லாட்சி, வழக்குப் பெற்றுவிட்டது என்று கருதலாம். ஐம்பெருங்காப்பியங்களையும் புகழ வேண்டும் என்று விரும்பிய கந்தப்பையர் தாம் பாடிய தணிகையுலாவில், அக்காப்பியங்களைச் சிலேடை நயந்தோன்ற அமைத்துப் பாடுகின்றார்.

"சிந்தா மணியாம் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
திளையாத குண்டலகே சிக்கும்"

என்று, ஐம்பெரும் காப்பியங்களைக் குறிப்பிடுகின்றார். கந்தப்பையர் காலம், கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கூறுவர்.

ஐம்பெருங் காப்பியங்களைச் சொல்லும் முறையில் சீவக சிந்தாமணி, முதற்கண் வைத்துப்போற்றப் பெற்றுள்ளது.

## சீவக சிந்தாமணியின் சிறப்பு

சேக்கிழார் காலத்தில், சோழநாட்டினை ஆண்டு வந்தவன் அநபாயசோழன். இவன் சிந்தாமணியின் இலக்கிய நயத்தில் ஈடுபட்டு, அந்நூலினையே உயர்ந்தது எனப் போற்றினான்; பல்காலும் படித்து இன்புற்றான். இதனை அறிந்த அமைச்சரான சேக்கிழார், சைவனான சோழன், சமணக்காப்பியமான சிந்தாமணியைப் படிப்பதா என எண்ணித் தெய்வம் மணக்கும் செய்யுட்களைக் கொண்ட பெரிய புராணத்தைப் பாடி அருளினார் என்று, ஒரு வரலாறு கூறப் பெறுகின்றது. இவ்வரலாற்றுச் செய்தியைச் சேக்கிழார் பிள்ளைத் தமிழில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

---

* நன்னூல், நூற்பா, 387 உரை

"கார்கொண்ட அமணசிந் தாமணியை வளவர்கோன்
கங்குல்பகல் ஆராய்தரக்
கண்டொழித் தாவதிது வேயென்று தொண்டர்தம
கத்துவம் கருத உய்த்துப்
பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை
பரித்திடச்செயலமைச்சர்
பண்பெனல் தெரித்தகுன் றத்தூர் உதித்தஎம்
பரமன்"

என்பது சேக்கிழார் பிள்ளைத் தமிழ். சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு முற்பட்ட "சேக்கிழார் புராணத்திலும்" இச்செய்தி, கூறப்பட்டுள்ளது. சிவநெறிச் செல்வனை சோழன் ஒருவனின் உள்ளத்தினை இக் காப்பியம் தன்வயப்படுத்தியது எனின் இக் காப்பியம், வேற்றுச் சமயத்தாரையும் இன்புறுத்தும் இலக்கிய அழகு மிக்கது என்று கூறலாம்.

"கம்பனுரிடைப் பெருமையுளது" என்பர் வீரசோழிய உரை ஆசிரியர்* "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" என்று கம்பரின் கவிப்புலமையைச் சிறப்பித்துக் கூறுவர். இவ்வளவு புகழ் பெற்ற கம்பர், தாம் காப்பிய விருந்து படைத்தற்குச்"சிந்தாமணியில் ஓர் அகப்பையும், திருக்குறளில் ஓர் அகப்பையும் முகந்து கொண்டேன்" என்று குறிப்பிட்டதாகச் செவிவழிச் செய்தியால் அறிகின்றோம். இதனால், கம்பருக்குக் கருத்துக்கொடையும் காப்பிய நடையும் காட்டிய கவிஞர் பெருமகனாகத் திருத்தக்கதேவர் விளங்குகின்றார் என்று சொல்லலாம். திருத்தக்கதேவரின் கருத்துமணிகள் கம்பர் பாடிய பெருங்காப்பியத்தில் அமைந்து அழகு செய்யும் இடங்கள் பல. இவற்றால், சிந்தாமணியின் சிறப்பு வெளிப்படும்.

உரையாசிரியர்கள் என்பார், உயர்ந்த இலக்கிய ஆசிரியர்கள். அவர்கள், கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பிபோல இலக்கியச்சுவை கண்டு மகிழ்ந்தவர்கள்; அவ்வாறு மகிழ்ந்து பெற்ற இன்பத்தை, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பேருள்ளத்துடன், அனைவரும் அறிந்து துய்க்குமாறு எழுதி வைத்தவர்கள். இத்தகைய உரையாசிரியர்

* வீரசோழியம் நூற்பா, 17 உரை

களில் இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் உரை எழுதிய வராக நச்சினார்க்கினியர் திகழ்கின்றார். இவரால் உரை வரையப் பெற்ற பெருமையுடையது சீவகசிந்தாமணி. ஓர் இலக்கியம் உரை பெறுகிறது என்றால் அவ்விலக்கியம் கற்றோரிடையே நன்கு மதிக்கப் பெற்ற இலக்கியமாக இருத்தல் வேண்டும். சீவகசிந்தாமணி, கம்பர் போன்ற புலமைச் செல்வர்களை ஈர்த்த இலக்கியவளமிக்கது ஆதலின், இந்நூலுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டார்.

சீவகசிந்தாமணியில் 445 மிகைப்பாடல்கள் உள்ளன. இவை நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்பே தோன்றியவை. ஏனெனில் இம்மிகைப்பாடல்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை வரைந்துள்ளார். மேலும், சிந்தாமணிக்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர், "கொடிமாநகரும் பாடம்" (பா. 17) "ஆயவன் என்ற பாடத்திற்கு அரசனால் ஆயவன் எனக" (பா. 242)என்பன போலப் பலஇடங்களில் செய்யுட்களின் பாட வேறுபாடு குறிப்பிடுகின்றார். மிகைப்பாடல்களையும், நச்சினார்க்கினியர் காட்டும் பாட வேறுபாடுகளையும் நோக்கினால் சீவகசிந்தாமணி, தமிழகத்தில் பெருஞ்செல்வாக்குடன் பலரால் பயிலப்பட்டது என்பது வெளிப்படும். இதனால், சிந்தாமணிக் காப்பியம், புகழ் பெற்ற காப்பியமாக விளங்கியதை அறியலாம்.

ஒரு நூலின் செல்வாக்கு, அந்நூலின் வழி நூல்களால் நிலை நிறுத்தப்பெறும். தொல்காப்பியத்தின் பெருமை, அதற்குப்பின் தோன்றிய நூல்களாலும், திருக்குறளின் சீர்மை அந்நூலுக்குப் பின்எழுந்த இலக்கியங்களாலும் விளங்கிநிற்றல் யாவரும் அறிந்ததே. இவ்வாறே சீவகசிந்தாமணியை அடியொற்றிப் பல நூல்கள் தோன்றின. 18ஆம்நூற்றாண்டில் வாழ்ந்த பகழிக் கூத்தர், சிந்தாமணிக் கதையைச் சுருக்கி ஒரு நூல் பாடியுள்ளார். இந்நூலினைச் "சீவகசிந்தாமணிச் சுருக்கம்" என்பர். இச் செய்தி, பெருந்தொகையில் அமைந்த செய்யுள் ஒன்றினால் தெரிகின்றது.

"மாரனும் எனவடிவு கொண்டசீ வகசரிதை
மாமுனி உரைத்தசிந்தா
மணியிற் பெருங்கதை எவர்க்கும்அள விடவொணு
மற்றது தனைச் சுருக்கிச்

சேரநான் என்னுடைய புன்சொற்கள் ஆயினும்
செப்புவன் எனவிரும்பிச்
செந்தமிழ்ப் பாவாணர் திருவுளக் கருணையென்
சென்னியுற வைத்துரைத்தேன்" – (பெருந்தொகை 1665)

என்பதனுல் இதனை அறியலாம்,

மேலும் சிந்தாமணி மாலை, சிந்தாமணி அம்மானை, சிந்தாமணித் தெளிவு என்னும் நூல்களும் சிந்தாமணியை, அடியொற்றித் தோன்றியுள்ளன. இவற்றுள் "சிந்தாமணித் தெளிவு" என்னும் நூல், திரட்டு நூல் என்பர். இந் நூல்களால், சிந்தாமணிக் கதை, 'தமிழகத்தில் கற்ருராலும் மற்ருராலும் போற்றப் பெற்றமையை அறியலாம். கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டுக்குப் பின், தமிழகத்தில் சைனம் செல்வாக்குப் பெறவில்லை. இந்நிலையில் சைன சமய நூலான சிந்தாமணி, நன்கு பயிலப் பெற்றது எனின், அதற்குக் காரணம், அந்நூலின் இலக்கியவளமேயாகும்.

கவிமணி அவர்கள், தம் கட்டுரை ஒன்றில், "ஒரு காலத்தில் சிந்தாமணிக் கதை, நாஞ்சில் நாடுமுழுமையும் பயில வழங்கி வந்ததாகத் தெரிகிறது. கற்ருேரிடை மட்டுமன்றி, மற்றை யோரிடையிலும், இதற்கு ஆட்சியிருந்து வந்ததை அறியலாம். அன்ஞர் விரும்பிக் கற்கவும், கேட்கவும் தகுந்த முறையில், இக்கதைஅம்மானைப் பாடலாகப் பாடப்பட்டிருக்கின்றது. அழகிய பாண்டியபுரம் பெரிய முதலியார் வீட்டு ஏட்டுச் சுவடிகளின் கூட்டத்தில், அம்மானைப் பாடலாகப் பாடிய சிந்தாமணி இலம்பகங்கள் இருந்ததை நான் பார்த்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டு உள்ளார்கள் * இதனுல் நாட்டுப்புற இலக்கியங்களில் உருக்–கொள்ளும் அளவிற்குச் சிந்தாமணிக்கதை, சிறப்புப் பெற்றதை அறியலாம்.

சிந்தாமணியைக் கற்பதைத் தமிழ் அறிஞர்கள் பெரும் பேருகக் கருதினர். பழம்பாடல் ஒன்று அதற்குச் சான்ருக அமைகின்றது.

---

1. *சிந்தாமணிச் சொற்பொழிவு நினைவு மலர் பக்கம் 5

"திருத்தக்க தேவர்சிந் தாமணியும் கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு"

இப்பழம் பாடலில், சிந்தாமணியை முதற்கண்வைத்துப் பாராட்டி இருப்பது, நினைக்கத் தக்கது.

பெரும்புலவராக விளங்கிய சிவப்பிரகாச சுவாமிகள், "கற்பனைக் களஞ்சியம்" என்று போற்றப் பெற்றவர். அவர், தம் திருவெங்கைக்கோவையில்,

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவநீ
கொந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பம்
கொள்வதெங்ஙன்
சிந்தா மணியும் திருக்கோ வையுமெழு திக்கொளினும்
நந்தா உரையை எழுத லெவ்வாறு நவின்றருளே"

என்று பாடிய பாடல், அனைவரும் அறிந்ததே. இப்பாட்டால், சிந்தாமணிக்காப்பியம் வழி வழி எழுதிப் பயிலப்பட்ட சிறப்பினை அறியலாம்.

கம்பர், சேக்கிழார் போன்ற பெரும்புலவர்களேயன்றி விறலி விடு தூது, சோமேசர் முதுமொழிவெண்பா, வடமலை வெண்பா, வருணகுலாதித்தன் மடல், மயூரகிரிக்கோவை முதலிய இலக்கியங்களை யாத்தபுலவர்களும் சிந்தாமணியைப் பெரிதும் போற்றி, அதன் சொல்லையும் பொருளையும் தம் பாடல்களில் எடுத்தாண்டு உள்ளனர், இவற்றால், சிந்தாமணிக் காப்பியத்தின் சிறப்பு, நன்கு வெளிப்படும்.

## திருத்தக்கதேவர்

சிந்தாமணியினை இயற்றிய திருத்தக்கதேவர், தமிழ்ப்புலவர்களில் பெரும் புலவராகத் திகழ்பவர். இவர் சமண முனிவர். இவருடைய பிறப்பு, வளர்ப்பு, வரலாறுகள், ஏனைய தமிழ்ப்பெரும் புலவர் பலருடைய வரலாறுகள் போலவே, தெளிவாக அறிய முடியாத நிலையில் உள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் வாழும்

சமணர்களிடையே செவிவழிச் செய்தியாகத் திருத்தக்க தேவர் பற்றிய வரலாறுகள் வழங்கப்படுகின்றன என்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருத்தக்கதேவர், சோழர் குலத்தில் தோன்றியவர். சீவக சிந்தாமணியில் ''முந்நீர் வலம்புரி'' என்று தொடங்கும் பாடல் ஓம்படைப்பாடலாக உள்ளது. இப்பாட்டுக்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர், இப்பாடல், திருத்தக்க தேவரின் ஆசிரியர் பாடிய பாடல் என்றும், ''முந்நீர் வலம்புரி'' என்னும் தொடர், சோழ குலமாகிய கடலிலே பிறந்த வலம்புரி என்னும் பொருளில் திருத்தக்க தேவரைக் குறிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனால்,திருத்தக்கதேவர், சோழர் குலத்தில் தோன்றியவர் என்ற கருத்து, நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடாக இருந்ததை அறிகின்றோம். மேலும், நச்சினார்க்கினியர் இந்நூலுக்கு உரை எழுதிச் செல்லும்போது திருத்தக்கதேவர், சோழர் குலத்தில் பிறந்தவர் என்னும் கருத்தையும் அவர்பாடிய காப்பியம், சோழர் காலத்தில் இயற்றப்பெற்றது என்ற கருத்தையும் உட்கொண்டே உரை எழுதிச் செல்கின்றார். நூலாசிரியர் வாழ்ந்த காலத்தை நினைந்து நச்சினார்க்கினியர் உரை எழுதுகின்றார் என்னும் பேருண்மையை இதனால் அறியலாம். சீவகன் கட்டியங்காரனைக் கொன்றபின், சீவகனுக்குத் திருமஞ்சனம் ஆட்டினார்கள். இதனைத் திருத்தக்க தேவர், ''மண்ணுநீர் மருள ஆட்டி'' (2326) என்று பாடுகின்றார். மஞ்சனம் ஆட்டுகின்ற இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர், ''இது வீராபிடேகம்'' என்று குறிப்பு எழுதுகின்றார். வீராபிடேகம் என்பது, பகைவரை வென்ற வீரருக்குச் செய்யும் அபிடேகம் ஆகும். சோழமன்னன் ஒருவனுடைய ''திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்'' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியில், ''திசையது நிகழ வீராபிஷேகம் பண்ணி''என வருகின்றது. இதனால் சோழர் காலத்தில் திருத்தக்க தேவர் வாழ்ந்தார் என்னும் கருத்தினராக நச்சினார்க்கினியர் உரை எழுதுவதை உணரலாம்.

சோழர் குடியில் தோன்றிய திருத்தக்கதேவர், இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். தமிழ் இலக்கண இலக்கியப் புலமை நிரம்பப் பெற்றார். வடமொழிப்

பயிற்சியும் குறைவறப் பெற்றார். சமண சமயத்திற்கு உரிய மெய்ப்பொருள்களை நன்கு உணர்ந்தார். இளமையிலேயே துறவு மேற்கொண்டார். தமக்கு அறிவு நலம் நல்கிய ஆசிரியப் பெருமகனாருடன் வாழ்ந்தார். ஒருகால் தம் ஆசிரியருடன் மதுரையை அடைந்து சங்கப் புலவர்களுடன் பழகும் பேறு பெற்றார். இச்சங்கம், சங்க இலக்கியம் எழுந்த கடைச் சங்கம் அன்று. சங்கப் புலவர்களோடு பழகிய காலத்தில் அவர்கள் திருத்தக்கதேவரை நோக்கி "ஆருகத சமயத்தார், துறவறம் பாட வல்லவரேயன்றி, அகப்பொருட் சுவைகளைப் பாடும் ஆற்றல் அற்றவர்கள்" எனக்கூறினர். அதற்குத் திருத்தக்க தேவர், " ஆருகத சமயத்தார் இன்பச் சுவையும் பாடும் ஆற்றல் பெற்றவரே ஆயினும், அதனைப் பாராட்டிப் பாடுவதில் வெறுப்பு உடையவர்கள், ஆதலால், இன்பநூல் பாடாதிருந்தனர்" என்று மறுமொழி பகர்ந்தார். உடனே சங்கப்புலவர்கள், அவ்வாறாயின் காமச்சுவை மிகுமாறு நூல் இயற்றுக என்று கூறத் திருத்தக்க தேவர் சிந்தாமணியைப் பாடத்துணிந்தார். தம் ஆசிரியரிடம் இதனைக்கூற, அவர் திருத்தக்க தேவரின் திறமையை அறிந் திருந்தும் தேவரின் துறவுள்ளத்தை ஆராய எண்ணிய போது அவ்விருவருக்கும் இடையே நரி ஒன்று ஓடியது. அதுகண்ட ஆசிரியர், திருத்தக்க தேவரை நோக்கி இந்நரியை அடிப் படையாகக் கொண்டு, சிறுநூல் ஒன்று இயற்றுக என்றார். திருத்தக்கதேவர், அவ்வாணையை ஏற்று, நிலையாமைகளை வெள்ளிடைமலை போல் அமைத்து நரிவிருத்தம் என்னும் நூல் பாடினார். அதுகண்ட ஆசிரியர், திருத்தக்க தேவரின் துறவு உள்ளத்தை நன்கு உணர்ந்துகொண்டு, சிந்தாமணியைப் பாடப் பணித்தார். திருத்தக்கதேவர், அவ்வாறே பாடினார். பாடி முடித்த உடன், பாண்டியன் அவைக்களத்தில், சங்கப்புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றினார். அரசனும் புலவரும் பாராட்டினர். ஆனால் சிலர், திருத்தக்க தேவரின் துறவில் ஐயம் கொண்டனர். இதனை அறிந்த திருத்தக்கதேவர், பலரும் காணுமாறு இரும்பின் கட்டியைப் பழுக்கக்காய்ச்சி, வருவித்து, "யான் பாலசந்நியாசி யாகஇருத்தல் உண்மையாயின் இஃது என்னைச் சுடாதுஒழிக" என்று சூளுரைத்து அக்கட்டியை ஏந்தினார். அதனால் யாதொரு துன்பமும் அடையாமல் இருந்தார். இதுகண்ட புலவர்கள், தம் பிழை பொறுக்க வேண்டினர். இவ்வளவே, செவிவழிச்

செய்தியால் அறியும் திருத்தக்க தேவர் வரலாறு ஆகும். இவ்வரலாறு உண்மையா, புனைகதையா என்பதனை முடிவு செய்தற்குச் சான்றுகள் இல்லை. ஆயினும், சிந்தாமணியைப் படித்தவர்கள், திருத்தக்கதேவர் துறவில் ஐயம் கொண்டிருத்தல் வேண்டும் என்பது, ஓரளவு பொருத்தமாகவே தோன்றுகின்றது. "இலக்கிய நூல்களுள் வேறு எதனுள்ளும் காமநுகர்வைப் பற்றிய இவ்வளவு விரிவு இல்லை" என்பர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள். அந்த அளவிற்குக் காமச் சுவையை விரித்துப் பாடிய புலவராகத் திருத்தக்க தேவர் விளங்குகின்றார். அவ்வாறு அச்சுவையை விரித்துப் பாடினும் அவர், தூய்மையான துறவி என்பதனை முத்தி இலம்பகம் தெளிவாகக் காட்டும்.

## திருத்தக்க தேவர் காலம்

நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணிக்கு இலக்கணம் தொல்காப்பியம் என்று கூறியுள்ளார். இக்குறிப்பைக் கொண்டு திருத்தக்கதேவர் காலம், கடைச்சங்க காலம் எனச் சிலர் கூறுவர். இக்கூற்று ஏற்புடையதன்று என்பது கூறாமலேவிளங்கும். இனி, திருநாவுக்கரசர் "நரிவிருத்தமதாகுவர் நாடரே" என்று கூறியிருப்பது, திருத்தக்க தேவர் பாடிய நரிவிருத்தத்தையே எனச் சிலர் கருதுவர். எனவே, திருநாவுக்கரசர் வாழ்ந்த கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன், கி. பி. ஆறும் நூற்றாண்டில் திருத்தக்க தேவர் வாழ்ந்தார் என்று முடிவு செய்வர். திருநாவுக்கரசர் நரிவிருத்தம் என்று கூறியிருப்பது திருத்தக்க தேவர் பாடிய நரிவிருத்தத்தைக் குறிக்காது என்றும், அது நரியைப் பற்றிய ஒரு கதையைக் குறிப்பிடும் என்றும் கருதுவர்.

யாப்பருங்கலமும் அதன் உரையும் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன. அவ்வுரையில், சிந்தாமணியில் உள்ள விருத்தப்பாக்களும் சூளாமணியில் உள்ள விருத்தப்பாக்களும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் தம் கட்டுரை ஒன்றில் சூளாமணியின் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு; சூளாமணியில் விருத்தப் பாவின் அமைப்பு, தெளிவாக உள்ளது. சீவகசிந்தாமணியில் விருத்தப்பா தடைபெற்றுச் செல்லுகின்றது. எனவே சூளாமணிக்கு முற்பட்டது "சீவகசிந்தாமணி" எனக்குறிப்பிட்டுச்

சீவகசிந்தாமணியின் காலம் கி. பி. எட்டாம் நூற்றுண்டு என்பர். ஆனால் சிரவண பெள்குளம் என்னும் கல்வெட்டு ஒன்றில் "சிந்தாமணி ஆச்சாரியார்" என்று ஒருவர் குறிக்கப்பெறுகின்றார். இதனைத் துணையாகக் கொண்டு திருத்தக்கதேவர் காலம், கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி என்று பலர் கூறுவர்.

திருத்தக்க தேவர் வாழ்ந்த காலம், பிற்காலச் சோழப் பேரரசு தோன்றிய காலம் ஆகும். அடங்கிக் கிடந்த சோழர் கள், தக்க காலம் பார்த்துத் தலை எடுத்தனர். இதனை அறிந்த திருத்தக்க தேவர், அடங்கியிருந்து, வாய்ப்பு நேர்ந்த போது போரிட்டு வென்ற சீவகன் வரலாற்றினை எண்ணி மகிழ்ந்து,இக்காப்பியம் படைத்திருக்கலாம். சோழமன்னர்கள், பெண்கள் பலரை மணந்த வரலாறும் ஈண்டு நினைக்கத்தக்கது.

திருத்தக்க தேவரின் வரலாறுகள், தெளிவாகத் தெரியா விட்டாலும், அவர் இயற்றிய சீவக சிந்தாமணியைக் கொண்டு அவரது பண்பு நலன்களை அறிந்து கொள்ள முடிகின்றது.

### அருளாளர்

திருத்தக்க தேவர், துறவி என்பதற்கு ஏற்ப அருளாள ராகத் திகழ்கின்றார். அந்தணர் சிலர் தமக்கு ஆக்கிய சோற்றை, ஒரு நாய் வந்து கவ்வ, அதன் மீது சினம் கொண்டனர். கல்லையும், தடியையும் கொண்டு நாயைத் துரத்தி ஓடினர். அது, குளத்திலே பாய்ந்து நீந்தத் தொடங்கியது. அந்தணர்களோ அதனை வளைத்துக் காலொடிய அடித்தனர். அந் நாய், மேலும் ஓடமுடியாமல் அவர்களிடம் அகப்பட்டது. அவர்கள், அந் நாயை அவ்வளவில் விடாமல், கொல்லப் புகுந்தனர். அப் போது, நாய்க்கு உரிய களிமகன் அங்கே வந்து அந்தணர்களை வைதான். அதுகண்ட சீவகன், நாயை இழந்ததனால் களிமக னுக்கு உண்டான துன்பத்தை முதலில் போக்கினான்.அதன்பின், அந்தணர் படும் துயரத்தை நீக்கினான். பின், உயிரிழக்கும் நிலையினை நெருங்கிக் கொண்டிருக்கும் நாயினைக் கண்டான், கண்ட உடன் அழுதான். "காண்டலும் கட்கினியான் தலுழ்ந் திட்டான்" என்று (942) திருத்தக்கதேவர் கூறுவர். இதனால்

நாய்க்கும் இரங்குகின்ற அருள் உள்ளம், சீவகன்பால் இருத்தலைக் காண்கின்றோம். இதனால், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாத நெஞ்சத்தினைத் திருத்தக்கதேவர் வெளிப்படுத்துகின்றார். மணிமேகலையில், அந்தணர்களால் வேள்வியில் கொல்லப்பட இருந்த ஆவைக் காப்பாற்றிய ஆபுத்திரன் வரலாறு இங்கு ஒப்பிட்டு நினைக்கத்தக்கது. ஆபுத்திரன் போன்ற அருளாளனைச் சீவகனைத் திருத்தக்க தேவர் படைத்துள்ளார். சீவகன் அருளாளனாகக் காட்சி தருகின்றான் என்றால், அவனைப் படைத்த திருத்தக்க தேவர், அருள் பழுத்த நெஞ்சினராக விளங்கியமையே காரணம் ஆகும்.

கட்டியங்காரனையும் அவன் மக்கள் நூற்றுவரையும் கொல்லும் இடத்தில், திருத்தக்க தேவர் கொலையைப் பாடுகின்றார். அக்கொலை தீமையை அழிக்கும் கொலை ஆதலாலும், அக்கொலை இன்றிக் காப்பிய நிகழ்ச்சி தொடர்ந்து மேற்செல்லுதல் இயலாது ஆதலாலும் அவ்வாறு பாடினார். மேலும், சீவகன் காந்தருவதத்தையை மணம் செய்ய முற்படும் காலத்திலும், போர்க்காட்சி ஒன்றைத் திருத்தக்க தேவர் காட்டுகின்றார். இப்போரில் உயிர்க்கொலை ஏற்படுகின்றது. அப்போது சீவகன் பொன்னால் அருகப்பெருமான் உருவம் செய்து, களத்துப்பாவம் போக்குகின்றான். கோவிந்தையார் இலம்பகத்தில், சீவகன் வேடரோடு பொருதபோது, அவ்வேடர்களுக்கு வடுவொன்றும் படாமல், உயிர்க்கொலை இன்றியும் ஆநிரையைச் சீவகன் மீட்டான் எனத் தேவர் பாடுகின்றார். இதனாலும், திருத்தக்க தேவர் அருள் நெஞ்சம் படைத்தவராக விளங்குவதை அறியலாம்,

கோவலன் கடக்களிறு அடக்கிய கருணை மறவனாக விளங்குவதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காட்டுவர். கருணையும் மறமும் முரண்பட்ட குணங்கள் ஆயினும் கருணை உள்ளவரிடம் மறமும், மறம் வாய்ந்தவரிடம் கருணையும் அமைந்திருத்தல் இயல்பு. இதனையே, "கருணை மறவன்" என்று கூறிய இளங்கோவடிகளின் சொல்லோவியம் புலப்படுத்தும். சீவகனையும் திருத்தக்க தேவர் கருணைமறவனாகவே படைக்கின்றார். கட்டியங்காரனுடைய பட்டத்து யானையாகிய அசனிவேகம்,

ஊழித்தீ போல ஓடிவருகின்றது. மக்களெல்லாம் அதன் கண்ணில் படாமல் மறைகின்றனர். குணமாலையும் அவள் தோழியும் அஞ்சி நடுங்குகின்றனர். அப்போது, சீவகன் அக்களிற்றை அடக்குகின்றான். கருணை மறவனாகத் திகழ் கின்றான். இங்கும் மறத்துடன் கூடிய அருள் நெஞ்சத்தைத் திருத்தக்கதேவரிடம் காண்கின்றோம்.

சீத்தலைச் சாத்தனார், மணிமேகலையில், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்குகின்றார். திருத்தக்கதேவரோ சீவகன் பிறந்த இடமான சுடுகாட்டை அறச்சாலையாக மாற்றுகின்றார். சீவகனின் தோழர், ஐந்நூற்று நால்வர். அவர்களுக்கும் சீவகனுக் கும் ஆக ஐந்நூற்று ஐவருக்கு நலம் உண்டாக எண்ணிய விசயை அச்சுடுகாட்டில் ஐந்நூற்று ஐந்து குழந்தைகளுக்குப் பாலும் நெய் அமுதும் ஊட்டுமாறு கோவிந்தையின் தந்தைக்கு ஆணையிடுகின்றாள். இச்செயல், விசயையின் அருள் உள்ளத்தைக் காட்டும்.

இழந்த அரசை மீட்கும் தலைவன் ஒருவனின் காப்பியம் பாடும் திருத்தக்க தேவர், மறச் செயல் வகைகளை விரிவாகக் கூறி அவற்றிற்குத் தம் நூலில் பேரிடம் கொடாததற்குக் காரணம், இவர் அருள் 'நெஞ்சம் படைத்த செந்தண்மையாளராகத் திகழ்வது என்று கருதலாம்.

## அறநெறியாளர்

உயர்ந்த கருத்துக்களை உலக மக்களுக்கு எடுத்துக் கூறி நெறிப்படுத்துதல், இலக்கிய ஆசிரியர்களின் கடமையாகும். அவ்வாறு கூறும்போது, மறைநூல் ஆசிரியன் அறம் கூறுவது, தலைவன், தன்பணியாளனுக்கு இடும் கட்டளையை ஒக்கும் என்பர். அறநூல் ஆசிரியன் அறம் கூறுவது, ஓர் அன்பன், தன் நண்பனுக்குக் கூறுவதை ஒக்கும் என்பர். காப்பிய ஆசிரியன் கூறுவது, ஒரு காதலி, தன் இனிய காதலனுக்குக் கூறுவதை ஒக்கும் என்பர். எனவே, காப்பியம் பாடும் திருத்தக்கதேவர், தாம் பாடும் காப்பியத்தில், காதலி காதலனுக்குக் கூறுவது போல அறம் கூறியிருத்தல் வேண்டும். ஆனால், சில இடங்களில் அறங்களை அறநூல் ஆசிரியர் போலவே திருத்தக்க தேவர் பாடுகின்றார்.

## கலைவல்லார்

திருத்தக்க தேவர், சிறந்த கலைஞராகத் திகழ்கிறார். சீவகன் யாழ்ப்போரில் காந்தருவத்தையை வென்றான்; தன் இசையினால், சுரமஞ்சரியை மயக்கி மணம் புரிந்தான் என வரும் இடங்களில், இசைக்கலை வல்லவராகத் தேவர் விளங்குகின்றார்.

"கருங்கொடிப் புருவம் ஏறா; கயல்நெடுங் கண்ணும் ஆடா;
அருங்கடி மிடறும் விம்மாது; அணிமணி எயிறும் தோன்றா;
இருங்கடற் பவளச் செவ்வாய் திறந்திவள் பாடினாளோ
நரம்பொடு வீணை நாவில் நவின்றதோ என்று நைந்தார்"

என்று, காந்தருவதத்தை பாடும் திறத்தினை வியந்து கூறுவர். திருவிளையாடற் புராணத்தில், விறகு விற்ற படலத்தில் காணப் பெறும் இசைபற்றிய குறிப்புக்கள், இச்சீவகசிந்தாமணியின் பாடலைத் தழுவி அமைந்தனவே.

அநங்கமாலையின் ஆடற்கலையைக் குறிக்கும் இடத்தில், திருத்தக்கதேவரின் ஆடற்கலைப் புலமையை அறிகின்றோம்.

'தோற்பொலி முழவும் யாழும் துளைபயில் குழலும் ஏங்கக்
காற்குழைசி கொம்புபோலப் போந்துகைத் தலங்கள் காட்டி
மேற்பட வெருவி நோக்கித் தானையை விட்டிட்டு ஒல்கித்
தோற்றினாள் முகம்செய் கோலம் துளக்கினாள் மனத்தை
எல்லாம்" (675)

என்னும் பாடல், இதற்குத் தக்க எடுத்துக்காட்டு ஆகும். முழவும் யாழும் குழலும் ஒலிப்பக் காற்று வீசுதலால் அசைந்து சாய்கின்ற பூங்கொடியைப் போல ஆடல் அரங்கிற்கு வந்து அபிநயம் பிடித்துக் கைகளைக் காட்டினாள்; மேலே தெய்வத்தினை நோக்கினாள்; அலங்காரத் தோற்றத்துடன் தோன்றினாள்; அப்பொழுதே பார்ப்பவர் மனத்தையெல்லாம் வருத்தினாள் என, நடனம் ஆடும் அநங்கமாலை, அரங்கத்திற்கு வந்து தோன்றிய காட்சியைத் திருத்தக்கதேவர் கூறியுள்ளார். நுண்கலைகளில் மெய்ப்பாடு மிகுந்த நடனக்கலையை, இவ்வாறு, சொல்லில் ஓவியமாக்கிக் காட்டிய திருத்தக்கதேவரின் ஆற்றல், நம்மை இன்புறுத்துகின்றது.

மேலும் "ஆடவர் மனங்கள் என்னும் அரங்கின்மேல் அனங்கமாலை ஆடினாள்" (683) என்று அழகாகத் தேவர் கூறும் பகுதி, பலரும் அறிந்ததாகும்.

உடலில் பூசப்பெறும் நறுமணப் பொடிகளின் தன்மையை அறிதல், பாம்பின் நச்சினைப் போக்குதல், சோதிடம் முதலிய கலைகளிலும் திருத்தக்கதேவர், புலமை வாய்ந்தவராகத் திகழ்கின்றார்.

**வாழ்க்கை வழிகாட்டி**

துறவினை வலியுறுத்தும் திருத்தக்கதேவர் சாத்தனாரைப் போலத் துறவில் காப்பியம் தொடங்கவில்லை. சாத்தனாரின் படைப்பினால் மணிமேகலையின் இளமைக் கோலமே, துறவுக் கோலம் ஆகின்றது. ஆனால், திருத்தக்க தேவர், கடுந்துறவி ஆயினும், சச்சந்தனின் இல்லற வாழ்வில் காப்பியம் தொடங்குகின்றார். இல்லற வாழ்வே ஆயினும் ஒருவன் ஒருத்தி இணைந்து வாழும் கற்பு வாழ்வே ஆயினும் அவ்வாழ்வும் வரையறையுடன் அமையவேண்டும் எனக் கருதியவர் திருத்தக்கதேவர். இதனையே சச்சந்தனும் விசயையும் வாழ்ந்த இல்லறத்தின் வாயிலாகக் காட்டுகின்றார். சச்சந்தன், மன்னவனுக்கு உரிய கடமைகளை மறந்தான். கோவலன் தன்மனைவியான கண்ணகி இருக்க மாதவிபால் சென்று கடமைகளை மறந்ததற்கும் சச்சந்தன் தன் மனைவியே எல்லாம் என நினைந்து கடமைகளை மறந்ததற்கும் வேறுபாடு உண்டு. மனைவியுடன் கூடிவாழும் இன்பம் ஆயினும், அவ்வின்பம் அளவுடன் அமைய வேண்டும் என்பதனைச் சிறிதும் நினையாமல், "மன்னகம் காவலின் வழுக்கிப் பெண்ணாருங் கலத்தோடு சேர்ந்த கழிகண்ணோட்டம்" உடையவன் ஆயினான் சச்சந்தன். அதனால், அரச வாழ்வினை இழந்தான். இவ் வரலாற்றினால் திருத்தக்க தேவரின் குறிக்கோள், இல்லற இன்பம் ஆயினும், அதற்கும் அளவு வேண்டும் என்பதே ஆகும். எனவே, அளவு அறிந்து வாழும் வாழ்க்கையை வற்புறுத்தியவர் திருத்தக்கத்தேவர்.

திருத்தக்கதேவர், கதையைப் பாடிக் காப்பியச் சுவையை மட்டும் எழுப்பிய புலவர் அல்லர். அரசனாக இருந்தாலும்,

அவன் வாழ்வில் மேடு பள்ளங்கள் உண்டு என்று எடுத்துக் காட்டியவர். மனையறம் காத்து, இல்லற இன்பம் நுகர்ந்து, மக்கட்பேறுபெற்று, இறுதியில் துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று இல்லறத்தார்க்கு வழிகாட்டியவர். எல்லா வகையிலும் குறிக்கோள் வாழ்க்கை வேண்டும் என்பதனை வற்புறுத்தியகவிஞர்.

## காப்பியப் பெயர்

சிந்தாமணி என்னும் பெயர், இந்நூலுக்குத் தன்மையால் வந்த பெயர் என்பது மயிலைநாதர் கருத்து. அவர், நன்னூலில் "முதனூல்" என்ற தொடங்கும் நூற்பா உரையில், "தன்மையாற் பெயர் பெற்றன சிந்தாமணி, சூளாமணி, நன்னூல் முதலாயின" என்று குறிப்பிட்டுள்ளார். சிந்தாமணி என்பது தன்னை அடைந்தாருக்கு வேண்டுவனவற்றைத்தருவதோர் தெய்வ மணி ஆகும். அம் மணியினைப் போல் தம்மைக்கற்பாருக்கு வேண்டும் பொருள்களைத் தருதலால், இந் நூலும் சிந்தாமணி எனப்பெயர் பெற்றது. திருத்தக்கதேவரே, "சிந்தாமணி ஓதி உணர்ந்தார் கேட்டார்" (31 43)என்று இந்நூற் பெயரை எடுத்தாளுகின்றார். சீவகன் இடுகாட்டில் பிறந்த போது அவன் தாயான விசயை மகனை நோக்கி, "சிந்தாமணியே" ( 311 )என்று விளிக்கின்றாள். இப் பெயரே சீவகனுக்கு இடப்பட்ட முதற் பெயர் ஆகும். எனவே, சிந்தாமணி என்னும் நூற் பெயர், தன்மையால் பெற்ற பெயர் என்பதனைக் காட்டிலும் பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்தது என்பது, ஏற்புடைத்தாகும் என்பர்.

கந்துக்கடன் என்னும் வணிகன் இடுகாட்டில் கிடந்த குழந்தையைக் கண்டு அதனை எடுக்க முற்படும்போது அக்குழந்தை தும்மியது. அப்போது ஒரு தெய்வத்துடன் சேர்ந்து, விசயமாதேவியும் " சீவ " (323)என்று வாழ்த்தினாள். இதனால், அக் குழந்தைக்குக் கந்துக்கடன் சீவகன் என்று பெயரிட்டான். பின்னர், சீவகன் சிந்தாமணி என்னும் இவ் இருபெயரும் சேர்ந்து சீவகசிந்தாமணி என வழங்கப்பெற்றது எனலாம்.

சிலர், இந்நூலின் பெயர், சிந்தாமணி என்பதே என்றும், பிற்காலத்தில் சிந்தாமணி என்னும் பெயரால் நூல் பல

தோன்றியமையால் வேறுபாடு காட்டச் சீவக சிந்தாமணி என வழங்கப் பெற்றது என்றும் கூறுவர்.

சிந்தாமணிக்கு "மணநூல்" என்னும் பெயரும் உண்டு. சீவகன் மகளிர் எண்மரை மணம் புரிந்து கொண்டான். மேலும், தன் நண்பன் பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் செய்து வைத்ததுடன் இவன் வெற்றிச் செல்வியையும் மணந்தான். நாமகள், புவிமகள், திருமகள், கேவலமடந்தை ஆகிய நங்கையரையும் மணஞ்செய்து கொண்டான் என்னும் பொருள் தோன்றத் தேவர் பாடுதலால், அவர்களையும் மணம் செய்து கொண்டான். இவ்வாறு நூல் முழுதும் மணச் செய்தியே காணப்படுதலால், இந்நூல் மணநூல் என்றும் பெயர் பெற்றது.

சீவகசிந்தாமணி, சிந்தாமணி, மணநூல் என்னும் பெயர்கள் இந்நூலுக்கு இருந்தாலும், இந்நூல், சிந்தாமணி என்றே பெரிதும் வழங்கப்படுகிறது.

## சிந்தாமணிப் பாடல்கள்

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் சிந்தாமணிப் பதிப்பிலும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் சிந்தாமணிப் பதிப்பிலும் 3145 பாடல்கள் உள்ளன. சைவ சித்தாந்த மகா–சமாஜம் வெளியிட்ட பதிப்பில் 3154 பாடல்கள் உள்ளன. நச்சினார்க்கினியர் உரை, 3145 பாடல்களுக்கு உள்ளது. எனவே நச்சினார்க்கினியர் காலத்தில், சிந்தாமணியின் அளவு 3145 பாடல்கள் கொண்டதாக இருந்தது எனத் தெளியலாம்.

"முந்நீர் வலம்புரி" ( 3145 ) என்றுதொடங்கும் பாடலுக்கு உரை வரையும் நச்சினார்க்கினியர், "தேவர் அருளிச் செய்த செய்யுள் இரண்டாயிரத்து எழுநூறு என்றேகொள்க" என்று குறிப்பிடுகின்றார். இதனால்; சிந்தாமணிப் பாடல்கள் 2700 என்பதும் எஞ்சிய 445 செய்யுட்களும் பிறரால் எழுதிச் சேர்க்கப் பெற்றன என்பதும் வெளிப்படும். இவ்வாறு சேர்க்கப் பெற்ற காலம் நச்சினார்க்கினியருக்கு முற்பட்ட காலம் என்பதும்அறியத்தக்கது.

445 செய்யுட்களையும் பாடிச் சேர்த்தவர் கந்தியார் என்னும் பெண்பாற்புலவர் என்பர். அவர் பாடிச் சேர்த்த செய்யுட்கள் இன்னவை யென்று அறிய இயலவில்லை. நச்சினார்க்கினியரே அறியமுடியா அளவுக்கு அவை அமைந்துள்ளன.

(3145 பாடல்களில் கடவுள் வாழ்த்தாக 3 பாடல்களும் அவையடக்கமாக 2 பாடல்களும் பதிகமாக 24 பாடல்களும் உள்ளன. எனவே சிந்தாமணியின் முன் அமைப்பாக 29 பாடல்கள் இடம் பெறுகின்றன.)

## காப்பிய யாப்பு

"விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர்கம்பன்" எனக் கம்பரின் யாப்புப்புலமையைப் பிற்காலப் புலவர்கள் போற்றுவர். கம்பரின் விருத்த யாப்பு இனிமையும் உணர்ச்சியும் மிக்கது. சங்க காலத்தில், ஆசிரியப்பாவே பெருவழக்கில் இருந்தது. சங்கம் மருவிய காலத்தில் வெண்பா யாப்பு முதன்மை பெற்றது. இக் காலப் பகுதியில் தோன்றிய நீதி நூல்கள், வெண்பா யாப்பில் பாடப்பெற்றன. பல்லவர் காலத்தில், யாப்பில் இசைநயம் வேண்டும் என்ற கருத்து வலிமை பெற்றது. பண்ணுடன் பாட வேண்டும் என்று கருதிய பெருமக்களுக்கு, யாப்பில் இனிமை காணும் வேட்கை ஏற்பட்டது. துள்ளல் ஓசை மிக்க கலிப்பாவில் புதுமை கண்டனர். இத்தகைய புதுமையைச் சங்க காலத்தினை அடுத்து வாழ்ந்த இளங்கோவடிகளே தம் காப்பியத்தில் ஓரளவு புகுத்தியுள்ளார். இப்புதுமைப் பாக்கள், நான்கு வகைப் பாக்களின் இனம் என்று கூறப்பெற்றன. தாழிசை, துறை, விருத்தம் என, இவ் இனப் பாக்களுக்குப் பெயர் சூட்டினர். முதன்முதலில், இவ்விருத்தப் பாக்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட செய்யுட்களைக் கொண்ட காப்பியம் பாடியவர் திருத்தக்கதேவரே. சீவக சிந்தாமணியில் கலிவிருத்தம், ஆசிரியவிருத்தம், கலித்துறை, வஞ்சித்துறை, ஆசிரியத்துறை முதலான இனப் பாக்கள் வந்துள்ளன. யாப்பில் புதுமை புகுத்திய திருத்தக்கதேவர், கொச்சக ஒருபோகு, தேவபாணிக் கொச்சக ஒரு போகு முதலிய பா வகைகளையும் அமைத்துள்ளார்.

திருத்தக்கதேவரின் விருத்தயாப்பு, சுவைபெற அமைந்துள்ளதாயினும் சில இடங்களில் தடைப்பட்டுச் செல்லுகின்றது

என்பதனை முன்பு குறிப்பிட்டேன். விருத்தப்பாவுக்கு உரிய இலக்கணங்களில் முதன்மையானது, நான்கு அடியும் தம்முள் அளவொத்து இயங்குதல் ஆகும். இவ் இலக்கணம் வேறுபட்டு வருகின்ற இடங்களும் உண்டு. ஆயினும், பல்வேறு பொருளும் பல்வேறு சுவையும் கலந்து படைக்கப் பெறும் காப்பியத்திற்கு ஒருவகைப் பா ஏற்றது அன்று என்று கருதிப் புதுமையை மேற்கொண்ட திருத்தக்க தேவர், பாராட்டுக்கு உரியவர். அவர் காட்டிய வழியே, பிற்காலக் கவிஞர்களுக்குக் காப்பியம் பாட உதவியாயிற்று.

## இலம்பகங்களின் அமைப்பு

தண்டியலங்காரத்தில் காப்பிய உட்பிரிவுகள், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என அமையும் என்று கூறப்பெற்றுள்ளது. இவற்றில் இலம்பகம் என்னும் உட்பிரிவு கொண்ட காப்பியம், தமிழில் சீவகசிந்தாமணி ஒன்றேயாகும். சீவகசிந்தாமணியில் 13 இலம்பகங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| நாமகள் இலம்பகம் | 379 | பாடல் |
| கோவிந்தையார் இலம்பகம் | 84 | " |
| காந்தருவதத்தையார் இலம்பகம் | 358 | " |
| குணமாலையார் இலம்பகம் | 315 | " |
| பதுமையார் இலம்பகம் | 246 | " |
| கேமசரியார் இலம்பகம் | 145 | " |
| கனகமாலையார் இலம்பகம் | 332 | " |
| விமலையார் இலம்பகம் | 106 | " |
| சுரமஞ்சரியார் இலம்பகம் | 107 | " |
| மண்மகள் இலம்பகம் | 225 | " |
| பூமகள் இலம்பகம் | 51 | " |
| இலக்கணையார் இலம்பகம் | 221 | " |
| முத்தியிலம்பகம் | 544 | " |

சீவகசிந்தாமணியில் அமைந்த பதின்மூன்று இலம்பகங்களில், முத்தியிலம்பகமே செய்யுட்களின் எண்ணிக்கையில் பெரிய இலம்பகம் ஆகும். திருத்தக்க தேவரின் குறிக்கோள் நிறைவு பெறும் இலம்பகமாக இஃது இருத்தலால், இதனையே

பெரிதாகப் பாடினார். இவ் இலம்பகத்தில், 544 செய்யுட்கள் உள்ளன. இதற்கு அடுத்த நிலையில், பெரிய இலம்பகமாக அமைந்தது, நாமகள் இலம்பகமாகும். இவ் இலம்பகம், சீவகனின் பெற்றோர் வாழ்வையும், சீவகன் பிறப்பையும், சீவகன் கல்வி கற்றமையையும் விரித்துக் கூறுவது. மேலும், இவ் இலம்பகமே, காப்பியத்தில் முதல் இலம்பகமாக அமைந்திருத்தலால், இப்பகுதியில், நாட்டுவளம், நகர்வளம் முதலியன கூறப்படுகின்றன. எனவே, இவ் இலம்பகம், 379 பாடல்கள் கொண்டதாகக் காட்சி தருகின்றது. இவை இரண்டிற்கும் அடுத்தநிலையில், காந்தருவ தத்தையார் இலம்பகமும், (358 பாடல்கள்), கனகமாலையார் இலம்பகமும் (332 பாடல்கள்), குணமாலையார் இலம்பகமும் (315 பாடல்கள்) அமைகின்றன. மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள செய்யுட்களைக் கொண்ட இலம்பகங்கள், பூமகள் இலம்பகமும் (51 பாடல்கள்), கோவிந்தையார் இலம்பகமும் (84 பாடல்கள்) ஆகிய இரண்டு இலம்பகங்களே ஆகும்.

பதின்மூன்று இலம்பகங்களில், நாமகள் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம், முத்தி இலம்பகம் என்னும் நான்கு இலம்பகங்கள் நீங்கலாக ஏனைய இலம்பகங்கள் ஒன்பதும், உண்மையில், பெண்களைப் பற்றிய கதை நிகழ்ச்சிகள் கொண்டன. ஏனையநான்கு இலம்பகங்களில், சீவகன் கல்வி நலம் பெற்ற வரலாற்றினைக் கூறும் பகுதி, நாமகள் இலம்பகம் என்றும், நாடு கைப்பற்றிய செய்தியை விளக்கும் பகுதி, மண்மகள் இலம்பகம் என்றும், ஆட்சி செலுத்தும் நிகழ்ச்சியைக் காட்டும் பகுதி, பூமகள் இலம்பகம் என்றும் வீடுபேறு பெற்ற நிலையைச் சித்திரிக்கும் பகுதி, முத்தி இலம்பகம் என்றும் பெயர் பெற்றுள்ளன. இவற்றில் நாமகள் இலம்பகம், மண்மகள் இலம்பகம், பூமகள் இலம்பகம் என்பன மகள் என்னும் பெண்பாற் சொல்லுடன் முடிய, முத்தி இலம்பகம் மட்டும் அவ்வாறு முடியாமை நோக்கத்தக்கது. மேலும் மகளிரை உண்மையாக மணந்து கொண்ட இலம்பகங்களின் பெயர்கள், 'ஆர்' விகுதி பெற்றிருப்பதும், ஏனைய இலம்பகங்கள் "ஆர்" விகுதி பெறாமல் இருப்பதும் சிந்திக்கத் தக்கன. மணந்து கொள்ளப் பெற்ற மகளிருக்கும் மகளிராக உருவகம் செய்யப் பெற்ற மற்றவர்

களுக்கும் வேறுபாடு தோன்றத் திருத்தக்க தேவர், "ஆர்" விகுதி கொடுத்தாரோ என்று சிலர் கருதுவர்.

## முதல் இலம்பகமும் இறுதி இலம்பகமும்

திருக்குறளைத் தமிழ் இலக்கியங்களை இயக்கும் நூல் என்று கூறலாம். திருக்குறளின் சொல்லும் கருத்தும் படியாத தமிழ் இலக்கியங்கள் இல்லை. திருத்தக்கதேவர் திருக்குறளில், பயிற்சி மிக்கவர். இதனைச் சிந்தாமணிப் பாடல்கள் பல காட்டுகின்றன. இதற்குமேல் சிந்தாமணிக் காப்பிய அமைப்பிற்கும் திருக்குறளே வழிகாட்டியாகவுள்ளது என்பது, சிந்தாமணி அமைப்பினுல் தெரிகின்றது.

திருவள்ளுவர், கடவுள் வாழ்த்தில்

> கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்ருள் தொழாஅர் எனின் (2)

என்று வாலறிவனைப் போற்றுகின்ருர். கல்வியின் பயன் மெய்யுணர்வினுல் இறைவன் தாள் தொழுதலே என்பது அவர் கருத்து. இங்குக் கூறப் பெற்ற "வாலறிவன்" என்னும் சொல், எல்லாப் பொருளையும் அறியும் தூய அறிவையுடையவன் என்னும் பொருளில் அருகக் கடவுளைக் குறிக்கும் என்பர். இளங்கோவடிகளும், "அறிவன் அறவோன் அறிவு வரம்பிகந்தோன்" என்று, அருகக் கடவுளை, அறிவன் என்று கூறுவர். இதனுல் இத் திருக்குறள், சமண சமயக் கொள்கையாருக்கு, அக் கொள்கையைக் காட்ட அரண் போல் உதவும். இத் திருக்குறளைத் திருத்தக்கதேவர், நன்ருக அறிந்து, அதற்கு ஏற்பக் காப்பியம் படைத்துள்ளார்.

சீவக சிந்தாமணியின் முதல் இலம்பகம், நாமகள் இலம்பகம். இறுதி இலம்பகம், முத்தி இலம்பகம். முதல் இலம்பகத்தில், சீவகன் கல்வி கற்றமையைக் கூறினுர். இறுதி இலம்பகத்தில், அக் கல்வியின் பயனுய முத்தியை அமைத்தார். இதனுல் சிந்தாமணியின் முதலும் முடிவுமாய நிலைகள், திருவள்ளுவர் கருத்தினையொட்டி நிற்றல் காணலாம்.

## காப்பியக்கதை

ஏமாங்கத நாட்டை ஆண்ட சச்சந்த மன்னன் தன் மனைவி விசயையுடன் காதற் கடலில் மூழ்கினான். அதனால், அரசாட்சியைக் கட்டியங்காரன் என்னும் அமைச்சனிடம் ஒப்படைத்தான். ஆட்சியை ஏற்ற கட்டியங்காரன், அரசனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். ஒருநாள் வீரருடன் சேர்ந்து அரண்மனையை முற்றுகை இட்டான். அதனை அறிந்த மன்னன், கருவுற்றிருந்த தன் மனைவி விசயையை மயிற்பொறியில் ஏற்றி அனுப்பினான். ஏற்றி அனுப்பியதும், கட்டியங்காரனுடன் போர் புரிந்து மாண்டான். மயிற் பொறியினை இயக்கி, வானத்தில் சென்று கொண்டிருந்த விசயை, பகைவனது வெற்றி முரசு கேட்டு மயங்கினாள். அதனால் பொறி செலுத்தும் முறை தவறி, அப்பொறி, சுடு காட்டில் இறங்கியது. அங்கே விசயை மகனைப் பெற்றாள். அப்போது, இடுகாட்டுத் தேவதை, விசயையின் தோழிபோல் தோன்றி, அவளுக்குத் துணையாக அமைந்தது. இராசமாபுரத்து வணிகனான கந்துக் கடன், தன் இறந்த குழந்தையை இடுகாட்டில் புதைக்க வந்த போது, விசயையின் மகனைக்கண்டான். அவனை எடுத்துச் சென்று வளர்த்தான். தக்க பருவத்தில், அச்சணந்தி என்னும் ஆசிரியரிடம், சீவகன், எல்லாக் கலைகளையும் பயின்றான். அவ்வாசிரியரால், தன் வரலாற்றை அறிந்து அவர் கட்டளை யிட்டவாறு ஓராண்டுக் காலம் தன்னை வெளியாக்காமல் மறைந்து வாழ்ந்தான்.

இராசமாபுரத்து ஆயரின் நிரைகளை வேடர்கள் கவர்ந்து சென்றனர். கட்டியங்காரனுடைய படைவீரர்கள், வேடர் கூட்டத்தை வெல்லமாட்டாமல் புறமுதுகு காட்டினர். அப்போது, சீவகன், தன் தோழருடன் சென்று, வேடருடன் போர் செய்து ஆநிரையை மீட்டான். அதனால் ஆநிரையை மீட் பவருக்குத் தன் மகளை மணம் செய்து கொடுப்பதாகக் கூறிய நந்தகோபன், தன் மகள் கோவிந்தையை மணக்குமாறு சீவகனை வேண்டினான்.

ஆனால் சீவகன் தன் வீரத்திற்குப் பரிசாக அளிக்கப்பட்ட கோவிந்தையைத் தன் நண்பன் பதுமுகனுக்கு மணம் செய்து வைத்தான்.

பின் காந்தருவதத்தையை யாழில் வென்று மணந்தான். சில நாட்கள் சென்ற பின், மதங்கொண்ட யானையால் கொல்லப்பட இருந்த குணமாலையைக் காத்து அவள் மீது காதல் கொண்டு அவளையும் மணந்தான். குணமாலையைக் கொல்ல வந்த யானை கட்டியங்காரனுக்குரிய பட்டத்து யானையாகும். எனவே அதனை வென்றான் என்பதனை அறிந்த கட்டியங்காரன், சினங்கொண்டு, சீவகனைத் தன் ஏவலாளர்களால் சிறைப்படுத்தினான். வீரர்கள் சீவகனைக் கொண்டு செல்லுங்கால், வழியில் சுதஞ்சணன் என்னும் நன்றி மறவாத் தேவன் சீவகனைக் காப்பாற்றினான். அவன் சீவகனைத் தான் வாழும் இடத்திற்குக் கொண்டு சென்றான். சீவகன், இங்குச் சில காலம் தங்கியபின் நாடு காணும் வேட்கையால் மாறுவேடங் கொண்டு பல இடங்களுக்குச் சென்றான். பல்லவ நாட்டிற்குச் சென்று சந்திராபம் என்னும் நகரை அடைந்து அந்நகர மன்னன் மகள் பதுமையைப் பாம்பு தீண்ட, அந் நச்சினைப் போக்கி அவளையும் மணந்து கொண்டான். பின், தக்கநாட்டை அடைந்தான். அந் நாட்டில் கேமமாபுரத்தில் சுபத்திரன் என்னும் வணிகன் இருந்தான். அவன் மகள் கேமசரி. இவள், தனக்குக் கணவனாகவரும் ஆண்மகனைத் தவிரப் பிற ஆடவர்கள் தன் கண்ணுக்கு ஆடவராகத் தோன்றாமல் இருக்கும் இயல்புடையவள். சீவகன், சுபத்திரன் வீட்டு விருந்துக்குச் சென்ற போது இவனைக் கண்டு கேமசரி நாணினாள். எனவே, சுபத்திரன் கேமசரியைச் சீவகனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். சீவகன் சில நாட்கள் அங்கிருந்த பின், அவளைப்பிரிந்து சென்றான். செல்லும் வழியில், எதிர்ப் பட்ட வழிப்போக்கன் ஒருவனுக்குத் தன் அணிகலன்களைக் கொடுத்து, அறம் உரைத்தான். பின் சீவகன் மத்திம நாட்டிலுள்ள ஏமமாபுரத்தை அடைந்தான். அந்நகர வேந்தன் மக்களுக்கு வில், வாள் முதலிய படைப் பயிற்சியைக் கொடுத் தான். அறநெறியும் உணர்த்தினான். அப்போது, அவ்வரசன் மகள் கனகமாலைக்கும் சீவகனுக்கும் காதல் ஏற்பட்டது. இதனை அறியாத அரசன், சீவகன் தன்மக்களுக்குக் கற்றுக் கொடுத்த வித்தையின் சிறப்பைக் கருதிக் கனகமாலையைச் சீவகனுக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

இந்நிலையில் இராசமாபுரத்தில் இருந்த காந்தருவதத்தை, தன் விஞ்சையால் சீவகன் ஏமமாபுரத்தில் இருப்பதை அறிந்து,

சீவகனின் தம்பியான நந்தட்டனை ஏமமாபுரத்திற்கு அனுப்பினாள். நந்தட்டன் அவ்வாறே சீவகனைக் கண்டு அவனுடன் தங்கினான். பதுமுகன் முதலிய சீவகன் தோழர்கள், சீவகனைத் தேடி வரும்போது தண்டக வனத்தில் தவப்பள்ளியில் விசயையைக் கண்டனர். அவளுடன் உரையாடி அவள் சீவகனின் தாய் என்பதனை அறிந்த அவர்கள், ஏமமாபுரத்தை அடைந்து தாம் விசயையைக் கண்ட செய்தியினைச் சீவகனிடம் கூறினர். சீவகன், உடனே புறப்பட்டு விசயையை அடைந்தான். மகனைக் கண்ட விசயை மனம் மகிழ்ந்தாள். உடனே மாமனான கோவிந்தராசனைக் கண்டு அவன் துணைபெற்றுக் கட்டியங்காரனை வெல்லுமாறு சீவகனுக்குப் பணித்தாள். அப் பணியினைத் தலைமேற் கொண்ட சீவகன், தோழர்களுடன் இராசமாபுரத்தை அடைந்தான். தோழர்களை ஓரிடத்தில் தங்க வைத்துத் தான் வேற்றுருக் கொண்டு நகருக்குள் நுழைந்தான். அப்போது சாகரதத்தன் என்னும் வணிகன் மகள், பந்தாடிக் கொண்டிருந்தாள். அவள் சீவகனைக் கண்டு, காமவேட்கை உற்றாள். சீவகனும், காதல் கொண்டான். இதற்குள், சாகரதத்தனுடைய கடையில் விலையாகாமல் இருந்த பண்டங்கள் விலையாகி விட்டன. மகளுக்குக் கணவன் வரும்போது விலையாகாப்பண்டம் விலையாகிவிடும் என்று, விமலையின் சாதகம் கணித்தோர் கூறியிருந்தனர். இதனை எதிர்பார்த்திருந்த சாகரதத்தன் விமலையைச் சீவகனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். இரண்டு திங்கள், அவளுடன் இருந்த சீவகன் அவளைப் பிரிந்து, தன் தோழரை அடைந்தான். அவர்கள், குணமாலையுடன் கருத்து வேறுபட்ட சுரமஞ்சரி, “ஆடவரைப் பாரேன், அவர் பெயரைக்கேளேன்” என்று நோன்பு பூண்டதைக் கூறி, அவளை மணக்குமாறு சீவகனைத் தூண்டினர். சீவகன், கிழவேதியர் வடிவத்தில் சென்று சுரமஞ்சரியை அடைந்து, அவளுடன் காமன் கோட்டத்திற்கு வந்து தோழர்களின் சூழ்ச்சியால் அவளை மணந்தான்.

சுரமஞ்சரியுடன் சில நாள் வாழ்ந்த சீவகன், குதிரை வாணிகன் போல் வடிவம் கொண்டு, விதையநாடு சென்று, தன் மாமன் கோவிந்தராசனைக் கண்டான். கட்டியங்காரனை வெல்வதற்கு வேண்டிய செயல்களை அவனுடன் ஆராய்ந்தான். பின் கோவிந்தராசன் திரிபன்றி ஒன்றை நிறுவி, இதனை அம்பு

எய்து வீழ்த்துபவருக்கு என் மகள் இலக்கணை உரியவள் என்று ஓலை அனுப்பினுன். எல்லா நாட்டு மன்னர்களும் வந்தனர். கட்டியங்காரனும் வந்தான். பலர் முயன்றும் வெற்றி பெறவில்லை. சீவகன்,வெளிப்படையாகத்தோன்றித் திரிபன்றியை வீழ்த்தினுன். அதனுல் கட்டியங்காரன், சீவகனை எதிர்த்தான்; போர் ஏற்பட்டது. போரின் முடிவில், கட்டியங்காரன் இறந்தான். விசயை, கேட்டுமகிழ்ந்தாள். பின், சீவகன், இராசமாபுரம் சென்று முடி சூட்டிக் கொண்டு தன் மனைவியரை அங்கு அழைத்துக் கொண்டான். இலக்கணைக்கும் சீவகனுக்கும் திரு மணம் நடைபெற்றது.

சீவகன், தன் மனைவியர் சூழ இருந்து இன்புற்று நாட்டை நன்முறையில் ஆண்டான். சீவகனின் மனைவியர், நன்மக்களைப் பெற்றனர். விசயை, துறவு பூண்டாள்;சீவகனை வளர்த்தசுநந்தை யும் துறவு பூண்டாள். சீவகன் தன் நாற்பத்தைந்தாம் வயதில் மூத்த மகனை சச்சந்தனை அரசனுக்கி முனிவர்களைக் கொண்டு நல்லறம் கேட்டு முத்தி அடைந்தான். அவன் மனைவியரும் துறவு பூண்டு பொன்னுலகு அடைந்தனர். சீவகசிந்தாமணியின் கதை இதுவேயாகும்

## இலம்பகத் தொடர்பு

இக்காப்பியத்தின் முதல் இலம்பகம், நாமகள் இலம்பகம். இவ் இலம்பகத்தில் சீவகனின் தந்தையான சச்சந்தன் விசயையை மணந்த செய்தியும் அவன் நாடு இழந்த செய்தி யும் விசயை சீவகனைப்பெற்ற செய்தியும், சீவகன் கந்துக்கடனுல் வளர்க்கப் பெற்று, "குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்ந்த" நிலையும் கூறப் பெற்றுள்ளன. இவ் இலம்பகம், 379 பாடல்களைக் கொண்டது. இவ்இலம்பக அமைப்பை நோக்கினுல், இவ் இலம்பகமே ஒரு சிறிய காப்பியம் போல் அமைந்துள்ளது. இவ்இலம்பகத்தின் தொடக்கம் நாட்டு வளமாக அமைகின்றது. அதன்பின், நகர் வளம் பாடுகின்றுர். அதன்பின் மன்னவன் வீற்றிருக்கும் அரண்மனைச் சிறப்பை உரைக்கின்றுர். பின்னரே, அந்நாட்டு மன்னன், "சச்சந்தன் என்னும் தாமரைச்செங்கணுன்" (157) என்று தொடங்குகின்றுர். இத் தொடக்கம்

நமக்குக் கிடைத்த காப்பியங்களைக் கொண்டு பார்த்தால், சீவக சிந்தாமணியிலேயே முதன் முதல் காணப்படுகின்றது என்று கூறலாம். நாட்டு வளம் கூறத் தொடங்கும் ஆசிரியர், „கோவீற்றிருந்த குடிநாட்டு அணி கூறலுற்றேன்" (30) என்று அரசன் வீற்றிருந்த நாடு எனக் குறிக்கின்றார். எந்த அரசன் என்ற குறிப்பு இல்லாமல் தொடங்கியிருக்கும் திறம் நோக்கு நற்குரியது. 127 பாடல்கள் கழித்தே அக் கோ சச்சந்தன் என்பதைக் கூறுகின்றார். காப்பியத்தைக் கூறிச் செல்லும் இப் புதுமை, தேவரின் படைப்பாற்றலைக் காட்டுகின்றது. அரசன் சிறந்தவனாயினும் அவன் மாறலாம். அவன் ஆளும் நாடு, நகரம் என்பன மாரு. ஆதலின் மாருதனவற்றை முன்னே கூறி, மாறும் அரசனைப் பின்னே கூறினாரோ என எண்ணத் தோன்றுகின்றது.

முதல் இலம்பகத்திலேயே சீவகனின் பிறப்பு, சீவகனுக்கு அச்சணந்தி ஆசிரியரால் உணர்த்தப்பட்டு விடுகின்றது. அவ்வாறு உணர்த்தப்படாமல் இடையில், சீவகன் தன் வரலாற்றை உணர்ந்தான் என்று கூறியிருக்கலாம். அவ்வாறு கூறின், சீவகனின் மணங்கள், அவனைக் காமக் களியாட்டத்திற்கே இட்டுச் செல்லும். அவ்வாறில்லாமல் தன் தந்தை இழந்த நாட்டைத் தான் பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் சீவகன் வாழ வேண்டும் என்பதற்காகத் தொடக்கத்திலேயே அவன் பிறப்பு வரலாற்றினை அச்சணந்தி ஆசிரியர் உணர்த்துகின்றார். தன் வரலாறு உணர்ந்த சீவகன், சிங்கக்குட்டிபோலச்சீறி வில்லோடும் பகழி ஏந்திக் கூற்றெனத் தோன்றுகின்றான். அவனை அச்சணந்தி ஆசிரியர், ‘‘ஓராண்டு பொறு" என்று கூற உடனே சீவகன் அதற்கு உடன்படுகின்றான். இதனைத் திருத்தக்க தேவர்,

‘‘யாண்டுநேர் எல்லையாக அவன்திறத்து அழற்சி இன்மை
வேண்டுவல் என்றுசொன்னான், வில்வலான் அதனை நேர்ந்தான்"
(393)

என்று கூறியுள்ளார். ஆசிரியர் கூறியதும், மாணவன், எத்தகைய சீற்றத்தையும் அடக்குகின்ற அக்கால ஒழுங்கு முறையையும் இதனால் அறிகின்றோம். இம் முதல் இலம்பகத்தில் சீவகனின் ஆசிரியரான அச்சணந்தி, தம் பழவினை கெடும்படி தவம் செய்வதற்குச் செல்கின்றார். பின், அவர் திருமேனியுடன் மறைந்தார் என்பதனை அடுத்த இலம்பகத்தின் தொடக்கத்தில் தேவர் காட்டுகின்றார். இதனால் நூலின் தொடக்க இலம்பகம்,

ஆசிரியரின் முத்தி பற்றியும், இறுதி இலம்பகம், மாணவனின் முத்தி பற்றியும் கூறும் திறத்தைக் காணலாம்

சீவகசிந்தாமணியில் அமைந்த இலம்பகங்கள், சீவகன், என்னும் பொன் நாணுல் கட்டப்பெற்ற மாலை போன்று உள்ளன. ஒவ்வொரு இலம்பகமும் அவ் விலம்பகத்தைப் பொறுத்த மட்டில், தனிக் கதை அமைப்பு உடையது. ஆயினும், ஆசிரியர், கதைத் தொடர்பு அறுவண்ணம் இலம்பகங்களை இணைத்துச் செல்கின்ருர். ஒவ்வொரு இலம்பகத்திலும் சிறுகதை யின் அமைப்புக் காணப்படுகின்றது. அந்த அமைப்புக்கு இடை யறவு ஏற்படாவண்ணம் கதையினைத் தொடர்பு படுத்தியுள்ள தேவரின் கைவண்ணம், அவருக்குள்ள காப்பியப் படைப்பாற் றலைக் காட்டும்.

நாமகள் இலம்பகத்தில், முன்னே கூறியதுபோல், அச்சணந்தி ஆசிரியர் தவம் செய்வதற்குச் செல்வதுடன் கதை முடிகின்றது. அடுத்த இலம்பகம், கோவிந்தையார் இலம்பகம். அதனை எவ்வாறு தொடங்குவது? ஆசை என்னும் பிறவி வேரை அறுத்துக் கொண்டு சென்ற அச்சணந்தி, பிறவி நீங்கினுர் என்று தொடங்குகின்ருர். இவர் பிறவி நீங்கினுர் என்ற பின், கதையை எவ்வாறு மேலும் வளர்ப்பது? இங்குத்தான் தேவர், பழங்காலத்தில் கதை சொல்வதுபோல் காப்பியத்தை அமைக்கின்ருர். கதை சொல்லும் பாட்டியர் "இது இவ்வாறிருக்க அங்கே அவ்வாறு நடந்தது" என்று தொடங்குவார்கள். அதுபோலவே, "நம்பன் இத்தலை" (410) என்று கதையைத் தொடங்குகின்ருர் இத்தொடக்கத்திலேயே சீவகன் வாழ்க்கை எவ்வாறு அமையப் போகிறது என்பதனையும் சுட்டிவிடுகின்ருர். காப்பிய நிகழ்ச்சிகளைக் காப்பியத்தின் தொடக்கத்தில் குறிப்பாகச் சுட்டுதல், சிறந்த காப்பிய மரபு என்பர். இக்காப்பிய மரபு, திருத்தக்கதேவரால் நன்கு பின்பற்றப் படுகின்றது.

நம்பன் இத்தலை நாக நன்னகர்ப்
பைம்பொன் ஓடைசூழ் பருமயானையும்
செம்பொன் நீள்கொடித் தேரும் வாசியும்
வெம்ப ஊர்ந்துலாம் வேனிலானினே (410)

இப்பாடலில், சீவகன், காமனைப் போல மகளிர்க்கு வேட்கை விளைத்தான் என்று கூறப்படுகின்றது. இதிலிருந்தே, அவனுடைய வாழ்வு நிகழ்ச்சிகள் எவ்வாறு நடைபெறப்போகின்றன என்பதனை உணர்ந்து கொள்ளலாம். சீவகனை அறிமுகப்படுத்தும் இப்பாட்டுடன்,

> மண் தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
> பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
> கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலால்
> கொண்டேத்தும் கிழமையால் கோவலன் என்பான்
> மன்னோ''

என்னும் கோவலன் அறிமுகப்பகுதியும் ஒப்பிட்டு நோக்குதற்குரியது. கோவலனை அறிமுகப்படுத்தும் ஆசிரியர் ''மடவார் பாராட்டினர்'' என்றுகூறி, அவன் மகளிர்க்கு இனியனும் தன்மையைக் காட்டுகின்றார். கோவலனின் இவ்வறிமுகத்தால் கோவலன் வாழ்வு ஒருத்தியோடு இணைந்த வாழ்வாக இல்லாமற் போகப் போவதை ஆசிரியர் குறிப்பாகக் காட்டி விடுகின்றார். இவ்வாறே சீவகனும் பலரை மணந்தவன் என்பதனை ''வேனிலானே போல'' என்பதனால் தேவர் உணர்த்துகின்றார்.

கோவிந்தையார் இலம்பகத்தின் இறுதி, பதுமுகனும் கோவிந்தையும் இன்பம் துய்த்ததையும், பதுமுகன் இன்ப வேட்கையால் அறிவு மயங்கியதையும் கூறி நிறைவு பெறுகின்றது. இந்நிறைவுடன் இவ்விலம்பகத்தைப் படித்தால், சீவகனுக்கு இவ் இலம்பகத்தில் என்ன தலைமை என்ற எண்ணம் ஏற்படலாம். ஆதலால், இதனை நினைந்த நச்சினார்க்கினியர், இவ் இலம்பகம் ''வீரமகளைச் சேர்ந்தமை கூறிற்று'' என்று சீவகனின் தலைமைக்குச் சிறப்புக் காட்டுகின்றார்.

மூன்றாவது இலம்பகம், காந்தருவதத்தையார் இலம்பகம் ஆகும். இதனைத் தொடங்கும் போது, ''இங்கிவர்கள் இவ்வாறு இருந்து இனிது வாழ'' என்று சீவகனையும் அவன் சுற்றத்தாரையும் முதலடியில் கூறி, அதன்பின் சீதத்தன் வரலாற்றைத் தொடங்குகின்றார். இவ் இலம்பகத்தில் சீவகன் காந்தருவதத்தையை யாழிசையில் வென்று மணக்கப் போகின்றான். அவர், சீதத்தனுடைய மகள் அல்லள். காந்தார நாட்டின்

மன்னனுன கலுழவேகன் மகள். அவளுக்கு இராசமாபுரத்தே திருமணம் நடைபெறும் என்பதால் அவள் கலுழவேகனுல் சீதத்தனுடன் அனுப்பி வைக்கப் பெற்ருள். இத் திருமணம், சுயம் வரமாகும். காந்தருவதத்தையை மணக்க மன்னர் பலரும் வருகின்றனர். ஆனுல், அவர்கள் அனைவரும் வீணைப்போரில் தோற்றனர். இந்நிலையில் சீவகன், வீணைப் போருக்குச் செல்ல முற்படுகின்ருன். அப்போது, சீவகனின் வளர்ப்புத் தந்தையான கந்துகன், நாகமாலை என்பவளால் கட்டியங்காரனின் சூழ்ச்சியை அறிந்து, சீவகன் படை அமைத்துக் கொண்டு வீணைப் போருக்குச் செல்லவேண்டுமெனச் சீவகனின் நண்பனுன புத்திசேனன் வழியாகச் சீவகனுக்குக் கூறியனுப்புகின்ருன். சீவகன் சச்சந்தனின் மகன் என்பதனை அறியாமல் கந்துக்கடனின் மகன் என்றே கட்டியங்காரன் நினைத்துப் பகை கொள்கின்ருன். கோவிந்தையார் இலம்பகத்தில் கோவிந்தையின் தந்தையான நந்தகோன், சச்சந்தனின் சிறப்பையும் சச்சந்தனுக்கு மகன் பிறந்து ஆலம் வித்துப்போல் தெறித்துப் போய் மறைந்ததையும் கட்டியங்காரனுக்கு அஞ்சி வாழ்வதையும் சீவகனுக்குக் கூறுவதாகத் தேவர் அமைக்கின்ருர். காந்தருவதத்தையார் இலம்பகத்தில் நாகமாலை வாயிலாக அறிந்து கந்துகன் கூறுவதாக அமைக்கின்ருர். முதல் இலம்பகத்தில் அச்சணந்தி ஆசிரியர் அவன் வரலாறு கூறுவதாகக் காட்டுகின்ருர். இவ்வாறு சீவகனுக்கு அவனுடைய குறிக்கோள் எது என்பதனை ஒவ்வொரு இலம்பகத்தும் தேவர் நினைவுபடுத்தச் செய்கின்ருர்.

காந்தருவதத்தையை யாழிசையில் வென்றவுடன் சீவனுக்குக் காந்தருவதத்தை மணமாலை சூட்டினுள். அதுகண்ட கட்டியங் காரன், மனங்கொதித்து, "வேலால் போர் செய்து வென்ருர்க்கு இவள் உரியாள்" என்று கூறி, மன்னரைத் தூண்டுகின்ருன். போர் நடைபெறுகின்றது. போரில் எதிர்த்த மன்னர்கள் பலர் மாண்ட னர். பின் காந்தருவ தத்தைக்கும் சீவகனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது. இருவரும் இனிது வாழ்ந்தனர். இந்நிலையில், சீவகனுக்குக் கட்டியங்காரன்மேல் வெறுப்புத் தோன்றுவது இயல்பே. ஆதலின், அவ் வெறுப்புத் தோன்ரு வண்ணம், காந்தருவ தத்தையின் தந்தையான கலுழவேகன், சீவகனுக்குத் திருமுகம் அனுப்புகின்ருன். ஆக்கமாகும் பொருள்களை யாராலும்

அழிக்க முடியாது. அவ்வாறே அழியும் பொருள்களும் ஊழின் வழியே அழியும் என்று குறிப்பிடுகின்றான். அது கண்டு சீவகன் மன நிறைவு பெறுகின்றான்.

நாமகள் இலம்பகத்தில் சீவகன் போர்ப் பயிற்சி பெற்றான். கோவிந்தையார் இலம்பகத்தில் வேடருடன் கன்னிப்போர் செய்தான். காந்தருவ தத்தையார் இலம்பகத்தில் சீவகன் பெரும் போர் நிகழ்த்தினான். இவ்வாறு சீவகனின் வீரவாழ்வினை ஏற்றமுற அமைத்துக் காட்டுவர்.

காந்தருவதத்தையார் இலம்பகத்தின் இறுதியில், இராசமாபுரத்தில் நடைபெற்ற நீர் விளையாட்டையும் அப்போது சீவகனிடம் நிகழ்ந்த செய்திகளையும் "இனி மொழிவாம்" என்று இலம்பகத்தை முடிக்கின்றார். நீர் விளையாட்டு என்பதற்கேற்ப அடுத்த இலம்பகமாகிய குணமாலையார் இலம்பகத்தை இளவேனிற் காட்சியோடு தொடங்குகின்றார். இவ் இலம்பகத்தில் சீவகன் கட்டியங்காரனுடைய பட்டத்து யானையை வென்று குணமாலையைக் காத்த திறம் கூறப்படுகின்றது. பட்டத்து யானையை வென்றமையால் கட்டியங்காரனின் சினம் மிகுகின்றது. அவனால், சீவகன், சிறைப்படுகின்றான். அப்போது சுதஞ்சணனால் சிறையிலிருந்து விடுபடுகிறான். ஆனால், கட்டியங்காரனின் மைத்துனன் மதனன் என்பவன், சீவகன் தப்பி விட்ட செய்தியினைக் கட்டியங்காரன் அறிந்தால், அவன் சினப்பான் என்று அஞ்சிச் சீவகனைக் கொன்று விட்டதாகக் கூறுகின்றான். கட்டியங்காரன் மகிழ்கின்றான். குணமாலையார் இலம்பகத்தில், களிறுதரு புணர்ச்சி என்னும் அகப்பொருள் இலக்கணத்திற்கேற்பச் சீவகனுக்கும் குணமாலைக்கும் திருமணம் நடைபெற்றாலும், அக் களிறுதரு புணர்ச்சியில் சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் பகையே வளர்கின்றது. இவ் இலம்பகத்தைக் கட்டியங்காரனின் மன மகிழ்ச்சியோடு ஆசிரியர் முடிக்கின்றார். அதன்பின், பதுமையார் இலம்பகத்தில், சுதஞ்சணனால் கொண்டு போகப்பட்ட சீவகன், என் செய்கின்றானோ என்று கதையைத் தொடங்குகின்றார். இவ் இலம்பகத்தில் சீவகன் பாம்பு தீண்டிய பதுமையைக் காத்து அவளை மணந்த செய்தியே அமைகின்றது. இவ் இலம்பகத்தில் கட்டியங்காரன் இடம்பெற இல்லை. சீவகன் பதுமையைப் பிரிந்து சென்றான். அப்போது பதுமையின் தந்தையான தனபதி

சீவகனைத், தேடுமாறு ஏவலரை அனுப்புகின்றார். அவர்கள் தேடிவரும்போது சீவகன் தன்னை வெளிப்படுத்தாமல் சோதிடன் ஒருவன் கூறுவது போல அவர்களுக்குக் கூறி அனுப்பிவிடுகின்றான். இவ்வளவில், இவ் இலம்பகம் நிறைவு பெறுகின்றது. பதுமையார் இலம்பகம், சீவகனின் மருத்துவப் புலமையை எடுத்துக் காட்டுகின்றது. கட்டியங்காரனை வெல்வதற்குப் பலரையும் சேர்த்துக் கொள்ளுதல் என்னும் பொது நோக்கில், பல்லவ நாட்டு மன்னன் மகளான பதுமையை மணந்து, அம்மன்னனின் துணையைப் பெற்றான் என்னும் கருத்து இவ் இலம்பகத்தால் விரிவுபடுகின்றது.

அடுத்து, கேமசரியார் இலம்பகத்தில், பதுமையைப் பிரிந்த சீவகன் "காட்டில் காலால் ஏகினான்" என்று தேவர் தொடங்குகின்றார். சீவகன் தன்னைக்கண்டு நாணிய கேமசரியை அவள் தந்தை கொடுக்க மணந்து கொள்கின்றான். பின், அவளைப் பிரிந்து செல்லுங்கால், வழியிடையில் வழிப்போக்கன் ஒருவனைச் கண்டு, அவனுக்கு அறிவுரை கூறுகின்றான். பதுமையார் இலம்பகத்தில் வேடனுக்கு அறிவுரை கூறியதுபோல், கேமசரியார் இலம்பகத்தில் வழிப்போக்கனுக்குச் சீவகன் அறிவுரை கூறுகின்றான். மேலும் இவ் இலம்பகத்தின் தொடக்கத்தில், சித்திரகூட முனிவர்க்கு உண்மைப் பொருளை அறிவுறுத்துகின்றான். கேமசரியார் இலம்பகத்தின் தொடக்கமும் முடிவும் சீவகனை அறம் கூறும் சான்றோனாகக் காட்டுகின்றன. வழிப்போக்கனுக்கு அறிவுரை கூறியபின், சீவகன், காட்டில் சென்றான் என்பதுடன் இவ் இலம்பகம் முடிகின்றது.

அடுத்து, கனகமாலையார் இலம்பகம், சீவகனின் வழிச்–செலவில் தொடங்குகின்றது. இவ் இலம்பகத்தின் தொடக்கத்திலும் பவதத்தனுக்கு அறிவுரை கூறக் காண்கின்றோம். இவ் இலம்பகத்திலேயே சீவகனைப் பிரிந்த நந்தட்டன், காந்தருவ தத்தையின் விஞ்சையால், சீவகனை அடைகின்றான். குணமாலை இலம்பகத்தில் அறுபட்ட கதை நிகழ்ச்சி, கனகமாலை இலம்பகத்தில் மீண்டும் தொடர்கிறது. நந்தட்டன் சீவகனை அடைந்தபின், சீவகனின் தோழர்கள் சீவகனைக்காணப்புறப்பட்டுச் செல்கின்றனர். வழியில், விசயையைக் காண்கின்றனர். அவளிடம், தம் வரலாற்றைக் கூறத் தொடங்கி, சீவகனைப் பற்றிக் கூறி,

" அவனைக்கொல்ல " என்று தொடங்கியவுடன் நிகழ்ச்சியை அவர்கள் முழுமையாகக் கூறுதற்குமுன், அவன் கொல்லப் பட்டதாகவே விசயை எண்ணி வீழ்ந்து அரற்றினாள். அப்போது, தோழர்கள், விசயை சீவகனின் தாய் என்னும் உண்மையறிந்து அவளைத் தேற்றினர். நாமகள் இலம்பகத்தில் விடுபட்ட விசயையை மீண்டும் தேவர் கனகமாலையார் இலம்பகத்தில் கொண்டு வருகின்றார். எனவே அறுபட்ட கதை நிகழ்ச்சிகள், கனகமாலையின் இலம்பகத்தில் மீண்டும் கூடு கின்றது. இவ் இலம்பகத்தினைக் காப்பியத்தின் உச்சநிலை என்று கூறலாம். இனிமேல்,காப்பியக்கதை நிறைவு பெறப்போகின்றது; காப்பியச் சிக்கல்கள் அறுபடப் போகின்றன என்னும் மன நிலையைத் தேவர் இவ் இலம்பகத்தில் ஏற்படுத்துகின்றார். இவ்வாறு இன்றியமையாக் கதை நிகழ்ச்சிகள் பல, இவ் இலம்பகத்தில் வருகின்றன. சீவகன், கனகமாலைக்குப் பிரிவு அறிவித்துப் பிரிகின்றான். அப்போது, நன்னிமித்தமாகச் "சங்கம் முழங்கின" என்று தேவர் இவ் இலம்பகத்தினை முடிப்பர். இதனால் காப்பியம் இனிது முடியப் போகின்றது என்ற குறிப்பு நமக்குப் புலனாகின்றது.

அடுத்து விமலையார் இலம்பகத்தில், சீவகன் குதிரைமீது இவர்ந்து செல்லும் போது நந்தட்டன் பதுமுகனுக்குக் குறிப்பாகச் சிலவற்றைக் கூறுகின்றான் என்று ஆசிரியர் கதையைத் தொடங்குகின்றார். இவ் இலம்பகத்தில், தாயின் கட்டளையைச் சீவகன் ஏற்கின்றான். விசயை தன் தமையனிடத்திற்கும், சீவகன் இராசமாபுரத்திற்கும் செல்கின்றனர். இராசமா புரத்திற்குச் சென்ற சீவகன், பந்தாடிய விமலையைக் கண்டு காதல் கொண்டு மணந்து அவளைப் பிரிகிறான். இவ் இலம் பகத்தின் முடிவில், சீவகன் விமலையைப் பிரிந்தான் என்று முடிக்கின்றார். தன்னுடைய தலைநகரமான இராசமாபுரத்திற்கே வந்து வணிகன் ஒருவன் மகளை மணந்தான் என்னும் செய்தி, இவ் இலம்பகத்தில் கூறப்படுகிறது. கட்டியங்காரன், எவனை இறந்துபட்டான் என்று தவறாக எண்ணினானோ அவனே இராசமாபுரத்திற்கு வந்து மணமகனாகின்றான்.

அடுத்து, சுரமஞ்சரியார் இலம்பகத்தில் விமலையை மணந்து வந்த சீவகன் தோழர்களைக் காண்பதுடன் இலம்பகம் தொடங்கு

கின்றது. இவ் இலம்பகத்தில், தோழர்களின் சூளால் சுரமஞ்சரியைச் சீவகன் மணக்கின்றான். சுரமஞ்சரியின் மணம் மட்டுமே அவனுடைய தோழர்களால் சீவகனுக்கு அமைகின்றது. சுரமஞ்சரியை மணந்தபின் தன் இல்லமான கந்துக்கடனின் இல்லத்திற்குச் சென்றான். அங்கே சீவகன் தன்னை வளர்த்த தாயான சுநந்தையும் மனைவியரான காந்தருவதத்தையும் குணமாலையும் அழக்கண்டு அவர்களைத் தேற்றிக் குதிரை வாணிகன் வேடங்கொண்டு தன் மனையினின்றும் புறப்பட்டான்.

அடுத்து, மண்மகள் இலம்பகம், சீவகன் தன் தோழர் முதலியோருடன் விதைய நாட்டிற்குப் புறப்பட்டுச்செல்லும் நிகழ்ச்சியுடன் தொடங்குகின்றது. இவ் இலம்பகத்தில், சீவகனின் மாமனை கோவிந்தராசன் மகள் இலக்கணையின் சுயம்வர ஏற்பாடு நடைபெறுகின்றது. மன்னர் பலரும் கூடுகின்றனர். கட்டியங்காரனும் அவன் மக்களும் வருகின்றனர், அப்போது, கோவிந்தராசன் சீவகனை அறிமுகப்படுத்துகின்றான். கட்டியங்காரன் சினந்தெழுந்து போருக்கு முற்படுகின்றான். சீவகனுக்கும் கட்டியங்காரனுக்கும் பெரும் போர் நடைபெறுகின்றது. சீவகன் கட்டியங்காரனைக் கொன்று, நாட்டு உரிமையைப் பெறுகின்றான். இவ்வளவில், மண்மகள் இலம்பகம் முடிகின்றது.

அதன்பின் சீவகன், இராசமாபுரம் சென்றான் என்று பூமகள் இலம்பகத்தில் தொடங்குகின்றார். இங்கே சீவகன், மன்னர்கள் ஏத்திப்போற்ற அரசுரிமை பெற்றதைக் கூறுகின்றார். இவன் அரசுரிமை பெற்றதால்,ஏமாங்கத நாடு இன்பம் எய்திற்று என்று இவ்விலம்பகத்தை முடிக்கின்றார்.

அடுத்து, இலக்கணையார் இலம்பகத்தின் தொடக்கத்தில் சீவகன் தான் மணந்த மகளிரைக் கொண்டு வருக என்று சொல்லத் தோழர்கள் கொண்டு வந்தார்கள் என்று கதையைத் தொடங்குகின்றார். மண்மகள் இலம்பகத்தில் நடைபெற வேண்டிய சீவகன் இலக்கணை திருமணம், இலக்கணையார் இலம்பகத்தில் நடைபெறுகின்றது. இவ் இலம்பகத்தில் திருமணச் சடங்குகள் மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றன. சீவகன் மணம் முடிந்ததும், உலாவருகின்ற காட்சியைத் தேவர் அழகுறப் பாடுகின்றார். உலாவினைக் கண்ட மகளிர் பலருடைய நிலையையும் இவ் இலம்பகத்தில் விரித்துப் பேசுகின்றார். உலா என்னும்

சிற்றிலக்கியத்திற்குரிய அடிப்படை நிலைகள் இப்பகுதியில் தேவரால் படைக்கப் பெறுகின்றன. இவ் இலம்பகத்தின் இறுதியில், காமத்தை இனிது நுகர்ந்தான் என்று முடிக்கின்றார். காமஞ் சான்ற கடைக்கோட் காலை, துறவு கொள்ள வேண்டும் என்பது, தொல்காப்பிய விதி. ஆதலின், இதனை அடுத்து, முத்தி இலம்பகத்தை அமைத்துக் காப்பியத்தை நிறைவு செய்கின்றார்.

பதின்மூன்று இலம்பகங்களையும் ஒருசேர நோக்கினால் சில இலம்பகங்கள் கட்டியங்காரனின் தொடர்பு இல்லாமல் சீவகனைப் பற்றிய நிகழ்ச்சிகளாக உள்ளன. சில இடங்களில் திருத்தக்க தேவரே தம் கூற்றாகக் காப்பிய நிகழ்ச்சிகளைக் காட்டிக் கதையினை இணைத்துக் காட்டுகின்றார்.

## திருத்தக்க தேவரின் துறவுள்ளம்

சமண சமயத்தின் அடிப்படைக் கொள்கை, நிலையாமை என்பதனை யாவரும் அறிவர். திருத்தக்க தேவர், வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் நிலையாமையாகிய அறத்தை வலியுறுத்தத் தயங்குவதில்லை. சீவகன், கேமசரியுடன் இன்பம் நுகர்தற்கு மாலைப் போதில் அவளுக்கு மாலை சூட்டி அவளுடன் அமளி சேர்ந்தான். இவ் இன்பக்காட்சியைப் பாடும் தேவர், இயற்கைக் காட்சியில் நிலையாமையை அமைக்கின்றார். இது ஒரு வகையில் முரண்போல் தோன்றினும், இம் முரண்பட்ட கவிதை அமைப்பே திருத்தக்க தேவரின் கொள்கைக்குச் சான்றாகின்றது. திருத்தக்க தேவர், இன்பமே பாடினும் அவர் இன்ப நாட்டத்தினர் அல்லர் என்பதற்கு இத்தகைய இடங்கள் சான்றாகும்.

ஞாயிறு, காலையில் குழவியாய்ப் பிறக்கிறது. நண்பகலில் குமரனாய் வெம்மைமிக்குத் தோன்றுகிறது. மாலையில் ஆசை நீங்கிய முதியவனாய்க் கதிர்கள் கெட்டு மறைகின்றது. இவ்வாறு ஞாயிற்றின் தோற்றம் வளர்ச்சி மறைவு ஆகிய நிலைகளில் மனித வாழ்வின் நிலையான உண்மையைக் காண்பர். இங்கே, நண்பகலில் ஞாயிறு குமரனாய்க் காட்சி தரு கின்றது என்பதற்கேற்ப, 'முறுகி' என்னும் வினையை அமைத்த நயம் நினைக்கத்தக்கது. குழந்தைப் பருவம், அறியாப் பருவம்; முதுமைப் பருவம், தளர்ந்த பருவம். இடைப்பட்ட குமரப்பருவமே, ஆற்றல் மிக்க வலிமைப் பருவம்; சினப் பருவம். அதனால்

"வெய்யோன் குமரனுய் முறுகி" என்று குறிப்பிடுவார். ஞாயிறு, சின ஆற்றல் மிக்கது என்று பாடும் மரபினை "உரவுச் சினம் திருகிய உருகெழு ஞாயிறு" (25:3) எனப் புறநானூற்றுப்புலவர் பாடுவதாலும் அறியலாம். கிழப்பருவத்தினைக் குறிப்பிடும்போது "விழைவு தீர் கிழவனுகி" என்பர்.

"குழவியாய்ப் பிறந்து வெய்யோன் குமரனுய் முறுகியிப்பால்
விழைவுதீர் கிழவனுகி விழுக்கதிர் உலந்து வீழ
மழலைவண் டுழலநக்க மல்லிகையலங்கல் சூட்டிக்
குழல்புரை கிளவி யோடும் கொழும்தகை அமளி சேர்ந்தான்"

என்பது செய்யுள். (1503)

இனி, மற்ருெரு செய்யுளைக் காண்போம். அன்னப்பெடை யோடு அன்னச் சேவல் ஊடியது. ஊடிய அன்னச்சேவல் வண்டுகள் ஆர்க்கும்தாமரை மலரில் போய்த்தனியே தங்கியது. இக்காட்சி, சுற்றத்திலிருந்து நீங்கி மும்மலங்கள் நீங்கத் தீயிடையே நின்று யோகத்தோடு தவம் செய்யும் முனிவரை ஒத்திருந்தது. இங்கேயும் அன்னங்களின் ஊடற் காட்சி, அகப் பொருளாம் சிற்றின்ப நிகழ்ச்சியாகும். முனிவரின் தவக்காட்சி பேரின்ப நிகழ்ச்சியாகும். இவ்வாறு சிற்றின்பம்பாடும் இடங் களில், அவ்வின்பம் நிலையானது அன்று என்று குறிப்பிடுவார் போலப் பேரின்பம் காட்டும் கலைத்திறம், உணரத்தக்கது.

"சிறையனப் பெடையினேடு ஊடிச் சேவல்போய்
அறுபத வண்டினம் ஆர்ப்பத் தாமரை
உறைவது குழுவினில் நீங்கி யோகொடு
கறையற முயல்வதோர் கடவுள் ஒத்ததே" (96)

இப்பாட்டில், உள்ள "சேவல் தாமரை உறைவது" என்பதற்கு நச்சினர்க்கினியர் சேவல் தாமரைப் பூவிலே குவிந்திருக்கின்றது என உரை எழுதுவர். குவிந்திருக்கின்றது என்னும் வினைமுற்றே, இங்குப் பொருத்தமான வினைமுற்ருகும். தீயிடை நின்று தவம் செய்வார், யோக நிலையில் இருப்பர். யோக நிலையில் நிற்றலாவது, உடல் ஓர் அமைப்பிற்கு உட்படு மாறு அடங்கி நிற்றலாகும் இதனையே "யோகொடு கறையற முயல்வதோர் கடவுள்" என்று குறிப்பிட்டுள்ளார். இங்கே

உவமையில் "யோகொடு" என்று கூறியது கொண்டு நச்சினார்க்கினியர் "குவிந்திருக்கின்றது" என, உவமிக்கப்படும் பொருளை விளக்கி எழுதியிருப்பது, அவரின் உரைப்புலமையின் ஒட்பத்தைக் காட்டும்.

## திருத்தக்க தேவர் போற்றும் பெண்மை

சீவகசிந்தாமணியின் குறிக்கோள், முற்றத்துறத்தலே ஆகும். இக்கருத்து, முழுமையடையும் இலம்பகமே முத்தி இலம்பகம். எனவே ஏனைய இலம்பகங்களில் காணப்பெறும் காமவின்பம், முத்தியின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதற்கு அமைக்கப் பெற்ற முரண் நிலையே எனலாம். தொடக்கமுதல் பன்னிரண்டு இலம்பகங்களிலும் விரித்துக் கூறப்பெற்ற காமச் சுவையெல்லாம் துறவறத்தின் சிறப்பினைக் காட்டப் பாடப் பெற்றனவே. இதனை உணராதார், இளமைத் துறவு பூண்ட திருத்தக்க தேவரின் துறவொழுக்கத்தில் ஐயம் கொண்டனர் என அறிகின்றோம்.

திருத்தக்க தேவரின் குறிக்கோள், துறவாக இருந்தாலும் அத் துறவிற்காகப் பெண்ணினத்தை அவர் பழிக்கவில்லை. பிற்காலப் புலவர்கள் சிலர், பெண்களைப் பெரிதும் பழித்தும், குறைத்தும் பாடியுள்ளனர். இப்போக்குத் திருத்தக்க தேவரிடம் இல்லை. ஆனால் சிந்தாமணியில்,

"பெண்ணெனப் படுவ கேண்மோ
பீடில, பிறப்பு நோக்கா;
உண்ணிறை உடைய அல்ல;
ஓராயிர மனத்த ஆகும்;
எண்ணிப்பத் தங்கை இட்டால்
இந்திரன் மகளும் ஆங்கே
வெண்ணெய்க்குன்று எரியுற் றுற்போல்
மெலிந்துபின் நிற்கும் அன்றே (1597)

எனத் திருத்தக்க தேவர், பெண்களை மிக இழித்துக் கூறுகின்றார். இவ் ஒரு பாடல் கொண்டு திருத்தக்கதேவர், பெண்ணினத்தைக் குறைத்துக் கூறினார் என முடிவு கட்டுதல் கூடாது. இப்பாடல், எவ்விடத்து, எச் சூழலில் வருகின்றது என்று நோக்கி ஆழ்ந்து இருக்கும் கவியுள்ளம் காணுதல் வேண்டும். காப்பியத்தினைக்

கற்கும்போது, முன்னும் பின்னும் நோக்கிக் கதைப் போக்கினை முழுமையாக அறிந்து துய்க்க வேண்டும்.

மனைவியான அநங்கமாவீணையைப் பிரித்த பவதத்தன் வருந்துவதைக் கண்ட சீவகன், "நீர் என்ன வருத்தமுற்றீர்" என்று கேட்க, அவன், மனைவியைக் காணாமல் வருந்தினேன் என்றான். அது கேட்ட சீவகன், வனசரிதன்பால் காமுற்ற அநங்கமாவீணைதான் அவன் மனைவி என்பதனை உணர்ந்து, அத்தகு மனைவியை அவன் துறக்க வேண்டுமென்பதற்காகவே "பெண்ணெனப்படுவ கேண்மோ" என்று பெண்ணினை இழித்துக் கூறினான். இதற்கு அடுத்த பாடல், கற்புடைப் பெண்ணின் பெருமை கூறுவதாக அமைந்திருப்பது, இங்கு அறியத்தக்கது.

"சாமெனில் சாதல் நோதல் தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைதல் இன்றிப் பொற்புடன் புலம்பி வைகிக்
காமனை என்றும் சொல்வார் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோடு ஒப்பார் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்" (1598)

இப்பாட்டினை நோக்கினால், பெண்ணின் பெருமையே பெறப்படுகின்றது. எனவே இரு மனப் பெண்டிரைக் கடிதல் "வாழ்க்கையறம்" என்னும் கருத்திலேயே, "பெண்ணெனப் படுவ கேண்மோ" என்னும் செய்யுளைத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார். தனிப்பாக்களைப் படித்துத் துய்த்து அப்பாட்டளவில் நின்று பொருள் கூறுதல் போல், காப்பியப் பாடல்களில் தனித்தனிப் பாடல்களை எடுத்துக் கொண்டு விளக்கம் சொல்லுதல், சுவையாக இருப்பினும் மூல நூல் ஆசிரியரின் கொள்கைக்கு முரணாக அமையும்.

தமிழ்க் காப்பியங்கள், பெண்மையை உயர்த்திப் பேசிய காப்பியங்கள். ஆதலின், அவ்வழி வந்த திருத்தக்க தேவர், கற்புக்குப் பெரிதும் மதிப்புக் கொடுத்துப் பெண்மையைப் போற்றுகின்றார்.

சீவகன், தன் தாயான விசயையைக் கண்டவுடன், சீவகன் அவள் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றான். அவள், அவனை

மார்புறத் தழுவிக் கொண்டாள். தாயான விசயை, தன் மகனுன சீவகனைத் தழுவிக் கொண்ட காலம், சீவகன், இளமைப் பருவம் உற்ற காலம். அதனைக்கூட நினையாமல், தாயன்பு மேலிட, அவனைத் தழுவிக் கொண்டாள். இதனைத் திருத்தக்க தேவர்,

"காளையாம் பருவம் ஓராள் காதல்மீக் கூர்த லாலே
வாளைஆம் நெடிய கண்ணுள் மகனைமார்பு ஒடுங்கப் புல்லித்
தாள்ஐயாமுன்பு செய்த தவத்தது விளைவி லாதேன்
தோள்அயாத் தீர்ந்தது என்ருள் தொழுதகு தெய்வம் அன்னுள்" (1912)

என்று கூறியுள்ளார். இப்பாட்டில், விசயையைத் தேவர், "தொழுதகு தெய்வம் அன்னுள்" என்று போற்றுகின்ருர். பெண்ணை இழிப்பதே திருத்தக்கதேவர் நோக்கமாயின், "தொழு தகு தெய்வமன்னுள்" என்று கூறுவாரா? எனவே, கற்பென்னும் திண்மை வாய்க்கப்பெற்ருல் பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்று போற்றுவதே திருத்தக்க தேவர் குறிக்கோளாகும்.

# 2

# காப்பிய அழகு

இலக்கியக் கலையின் முழு வடிவம், காப்பியம் என்று கூறலாம். இலக்கியம் என்பது, தனிப்பாடலையும் குறிக்கும், சிற்றிலக்கியத்தையும் குறிக்கும், காப்பியத்தையும் குறிக்கும். ஆயினும் காப்பியத்திலேயே, இலக்கியத்திற்குக் கூறுகின்ற இலக்கணங்களை முழுமையாகக் காணலாம். காப்பியம் என்பது, அளவாலும், பொருளாலும் பொருளை வளர்த்துச் செல்லும் நிகழ்ச்சி அமைப்பாலும் பெரியது. ஆதலின், காப்பியத்தில், இலக்கியத்திற்கு உரிய கலைக்கூறுகள் அனைத்தும் அடங்கி இருக்கக்காணலாம். இலக்கியக் கலைக்கு இன்றியமையாத உறுப்புக்கள், உணர்ச்சி, கற்பனை, வடிவம், கருத்து என்னும் நான்கு என்பர். இந்நான்கும், ஓர் இலக்கியத்திற்குச் சிறந்து காணப்படுதல் மிகவும் அரிது. மிகச்சிறந்த புலவரிடத்தில், நான்கும் ஒருங்கே சிறந்து அமைதல் உண்டு. மற்றவர்களின் செய்யுளில், உணர்ச்சி நன்கு அமைந்து இருந்து, அழகிய வடிவம் அமையாதிருத்தல் உண்டு. அழகிய வடிவம் அமைந்து, கற்பனை வளமுற அமையா திருத்தலும் உண்டு. இவ்வாறு ஒன்று சிறப்புற்று மற்றொன்று நன்கு அமையாதிருத்தலே பெரும்பாலான செய்யுட்களின் இயல்பாகும். * தனிப்பாட்டில், இந்நான்கில் ஒன்றோ பலவோ சிறக்காமல் இருப்பினும் குற்றமில்லை. படிப்பவர்கள் சிறப்பாகக் காணப்படும் ஒன்றனை விரும்பிக் கற்பர். ஆனால், காப்பியங்களில், இவை நான்கும் சிறப்புற்று விளங்கினாலேயே, அவை கற்றவர்களால் பெரிதும் மதிக்கப்படும்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம் போன்ற காப்பியங்கள், தமிழ் அறிஞர்களால் பெரிதும் போற்றப்பெறும் இலக்கியங்கள் ஆகும். இவைகள், இலக்கியங்களுக்கு உரிய நுட்பமான இலக்கணங்கள் அனைத்தும் பெற்றமையாலேயே போற்றப்பெறுகின்றன. திருத்தக்கதேவர்

---

* இலக்கியத்திறன் – டாக்டர் மு. வரதராசன்; பக்கம் 67

பாடிய சீவகசிந்தாமணியிலும், இலக்கியக் கலைக்குரிய உறுப்புக்கள் நன்கு அமைந்துள்ளன. இவ்வுறுப்புக்கள், சிறப்பாக அமைந்துள்ளமையால், சிந்தாமணிக் காப்பியம் காப்பிய அழகுடையதாகத் திகழ்கின்றது.

காப்பிய அழகுகளில், கற்பனை உவமை என்னும் இரண்டும் குறிப்பிடத்தக்கன. இவைகள் படிப்பாருக்கு விளங்கித் தோன்றுவன. காப்பியத்தில் அமையும் உணர்ச்சியும் அழகு தரும் ஆயினும், பாடியவர் பெற்ற உணர்ச்சியைப் படிப்பவரும் அவ்வாறே பெறுதல் மிகவும் அரிது. காப்பியத்தில் அமைந்த கற்பனையின் அழகினைக் கண்டு துய்க்கும் அளவிற்கு, உணர்ச்சியை அறிந்து துய்த்தல் இயலாது. ஆதலின், காப்பியங்களில் அமைந்த கற்பனையே, காப்பிய அழகு என்று போற்றுதற்குரிய தலைமை உடையதாகும்.

கலை என்பது, கற்பனை இன்றிப் பிறவாது. கலையும் கற்பனையும் நெருங்கிய உறவுடையன. கற்பனைத் திறன் அமைந்த புலவர்களே, மனம் கவரும் இலக்கியங்களை இயற்ற முடியும். கற்பனை என்பது, ஒன்றன் துணைகொண்டு மற்றொன்றைக் கற்பித்துக் கொள்வதாகும். இத்தகைய திறம் பெற்றமையாலேயே, இளங்கோவடிகள், திருத்தக்க தேவர் போன்ற துறவிகள், காதலைப் பற்றிப் பாட முடிந்தது. அவர்களிடத்தில் அமைந்த அருள், அன்பு போன்ற நெகிழ்ச்சி அனுபவங்கள், காதல் போன்ற மென்மையான அனுபவங்களைக் கற்பனை செய்ய வாய்ப்பளித்தன. எனவே, கற்பனை உள்ளம் வாய்ந்த கவிஞர்கள், தம் புறக்கண்ணால் கண்டு மகிழ்ந்து அறியும் அனுபவங்களை அகக்கண்ணால் கண்டு புனைந்து கூறுவர். இக்கற்பனையைப் புனைந்துரை என்றும் கூறலாம். வருணனை என்பது, இக் கற்பனையில் அடங்கியது ஆகும். ஒரு கருத்தை விளக்கமுற எடுத்துக் கூறுவாருக்கும் கற்பனை வேண்டுமெனின், கவிஞருக்கு இக் கற்பனை, எவ்வளவோ இன்றியமையாதது. திருத்தக்க தேவர், கற்பனையில் சிறந்த புலவராகக் காணப்படுகின்றார். அவருடைய கற்பனைகள், சிந்தாமணிக் காப்பியத்திற்கு அழகு சேர்க்கின்றன.

சீவகன், அச்சணந்தி ஆசிரியரிடம் கல்வி கற்றவன். அதனால், அவன் பெற்ற கல்வி, நலம் நிறைந்த கல்வியாகும். மேலும், சித்திரகூட முனிவர்க்கும் பவதத்தனுக்கும் வழிப்போக்கனுக்கும்

சீவகன் கூறிய அறவுரைகளை நோக்கினால், சீவகன் துறவு மேற்கொள்வான் என்பது, உறுதியாகத் தெரிகின்றது. மேலும், சீவகனின் தாயான விசயையும் ஆவணை வளர்த்த தாயான சுநந்தையும் துறவு பூண்பதைக் காண்கின்ற நிலை, சீவகனுக்கு ஏற்படுகின்றது. அவர்கள் துறவு பூண்பதைக் கண்டு, சீவகன் அழுகின்றான். இந்நிலைக்கு ஆட்பட்ட சீவகன், துறவு பூண்பானோ என்ற ஐயம் அமைச்சர்களுக்கு ஏற்படுகின்றது. ஆதலால், அவர்கள் நீரணி விளையாட்டிற்கு ஏற்பாடு செய்து, சீவகன் மனத்தை மாற்றுகின்றனர். இவ்வாறு துறவு பூண வேண்டிய சீவகன், மனம் மாறி மகிழ்ச்சியால் ஈடுபட்டமையைத் திருத்தக்க தேவர் காட்டுகின்றார். அவ்வாறு காட்டிய திருத்தக்க தேவர், சீவகனின் துறவுக்கு, இயற்கையில், ஒரு கற்பனைக் காட்சியைப் படைக்கின்றார். இக்காட்சியே, சீவகனைத் துறவு கொள்ளச் செய்ததாகப் பாடுகின்றார்.

சீவகன் தன் மனைவியரோடு சோலையில் இன்பம் நுகர்ந்தான். அவன் மனைவியர் மலர் போன்றவர். சீவகன் களிவண்டு போன்றான். அவன், தன்னுடன் கூடிய மங்கையரின் நலமெல்லாம் நுகர்ந்து, அவர்களைப் பிரிந்து ஒரு பலாமரத்தின் அடியில் தங்கினான். அந்த இடத்தில், திருத்தக்கதேவர், அருமையான கற்பனை ஒன்றை அமைக்கின்றார்.

களவு ஒழுக்கத்தை விரும்பிய கடுவன் ஒன்று, ஒரு மந்தியை அழைத்தது. அக்கடுவன், அம் மந்தியைச் சோலையில் ஒருபால் அழைத்துச் சென்று இன்புற்றது. பின்பு, அவை, அங்கிருந்து நீங்கித் தத்தம் கூட்டத்தைச் சேர்ந்தன. கடுவனின் களவுக் கூட்டத்தைக் கண்டிருந்த அதன் மனைவியாகிய மந்தி, தன் கணவனை நோக்கி, "பரத்தையர்த் தோய்ந்த மார்பம் தகவுடையது அன்று; ஆதலால், பத்தினிப் பெண்கள் தீண்டார். எனவே நீர் தெளிந்த நீரில் ஆடி வம்மின்" என்று கூறியது. அதுகேட்ட கடுவன், "நீ கூறியதை யான் மனத்திலும் நினைத்ததில்லை. உயர்ந்த மலைத்தேனைப் பருகியவர், துன்பம் தரும் காஞ்சிரங்காயையும் வேப்பங்காயையும் தின்னார். ஆதலின், "நானும் காஞ்சிரமும் வேம்பும் போன்ற பரத்தையர் இன்பம் நுகரேன்" என்று கூறியது. இது கேட்ட மந்தி, மறுமொழி கொடாமல், கடுவனை ஊடல் கொண்டு நோக்கியது. அது

கண்ட கடுவன், அஞ்சி, "நீ இவ்வாறு என்னை நோக்கி என்ன செய்யப் போகிறாய். எனக்கு உயிர் போயிற்று. நீ இங்கே சிறிது நேரம் நிற்பின் அதனைக்காண்பாய்", என மந்தியின் மனம் நடுங்குமாறு சொல்லியது. அதனைக் கேட்ட மந்தி நடுங்கி, "உனக்கு ஏவல் தொழில் செய்தற்கு உரிய நான் இப்போது செய்த பிழையைப் பொறுப்பாயாக" என்று கூறிக் கடுவனைத் தழுவிக் கொண்டது. மேலும் தன்னைத்தானே பழித்தும் கொண்டது. கடுவன் செய்த குற்றத்தைத் தன் கண்ணினால் கண்டும், தன் காதலன் ஊடலைத்தணிவிக்கத் தன் பெண்மை யால் தன்னைப் பழித்துக் கொண்டு, ஊடல் நீங்கிய மந்தியைக் கடுவன், இன்புறுத்த எண்ணியது. எனவே, சோலையில் இருந்த பலாப்பழம் ஒன்றை எடுத்துப் பிளந்து நல்ல சுளைகளை ஆய்ந்து எடுத்து, அக் கடுவன், மந்தியின் கையில் கொடுத்தது. சோலையைக் காக்கும் காவலன் ஒருவன் இதனைக் கண்டு மந்தியையும் கடுவனையும் துரத்தினான். அப் பலாக் கனியைத் தான் உண்டான். இதனைச் சீவகன் கண்டான். இவ்வாறு, சோலையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றினைத் திருத்தக்க தேவர் கற்பனை செய்கின்றார். இந் நிகழ்ச்சி, சீவகன் காமத்தையும் செல்வத்தையும் துறந்து செல்வதற்கு ஏது-வாயிற்று. இக் காட்சியைக் கண்ட சீவகன், உடலுடன் தோன்றிச் செறிந்த காமத்தையும் பின் வருகின்ற மூப்பையும் வெறுத்தான். மேலும், அச் சோலைக்காட்சி, அவன் வாழ்க்கை நிகழ்ச்சியை உணர்த்துவது போல் இருந்தது. கைப்பழம் இழந்த மந்தி, அரசினை இழந்த கட்டியங்காரனைப் போன்றது. மந்தியையும் கடுவனையும் துரத்திப் பழத்தைக் கவர்ந்த சோலைக் காவலன், கட்டியங்காரனிடமிருந்து அரசைக் கைப்பற்றிய சீவகனைப் போன்றவன். அப் பலாப்பழம், சீவகன் நுகர்கின்ற இன்பத்தை நிகர்க்கும். இவ்வாறு, சீவகனுக்கு மெய்யுணர்வு தோன்றியது. மேலும், அக்காட்சி அவனுக்கு மற்றொரு நினைப்பையும் உண்டாக்கியது. மெலியவர் பெற்ற செல்வத்தை வலியவர் கவர்ந்து கொள்ளும் துன்பம் வாய்ந்தது இப்பிறவி. ஆதலால், இச் செல்வத்தைக் கைவிட்டுத் துறத்தற்கு உரிய காலத்தில் துறவினை மேற்கொண்டு, தவம்புரிந்து, ஐம்பொறிகளையும் அடக்கி, வீட்டுலகம் அடைவதே நல்லது என எண்ணினான். எனவே, சீவகன், காம நுகர்ச்சியிலிருந்து உள்ளத்தைமீட்டான்;

துறவை நாடினான். இதனால் திருத்தக்க தேவர் படைத்த இவ் இயற்கையின் கற்பனைக் காட்சி, சீவகனின் துறவுக்குப் பெரிதும் துணை செய்தது. திருத்தக்க தேவர் படைத்த இக் கற்பனை, அவர், தம் கண்ணால் கண்ட உண்மைக் காட்சியாகவும் இருக்கலாம். அல்லது, அவர் கண்ட உண்மை நிகழ்ச்சியின் அடிப்படையில், அவரால் படைக்கப் பெற்றதாகவும் இருக்கலாம். இக் கற்பனையினை ஒருவனின் மன வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையுமாறு படைத்த திருத்தக்க தேவரின் திறம் பாராட்டுக்கு உரியது. திருத்தக்க தேவர் சமண முனிவர் என்பதும், அவர் காட்டில் வாழ்ந்தார் என்பதும் உண்மை என ஏற்றுக் கொள்ளும் வகையில் சீவகசிந்தாமணியில், பல இடங்களில், மலைக்காட்சி கானகக் காட்சி சோலைக்காட்சி ஆகியவற்றைக் கற்பனை தவழத் திருத்தக்க தேவர் படைத்து உள்ளார்.

## வருணனைத் திறம்

சீவகசிந்தாமணியில் வரும் வருணனைகள் சுவைமிக்கன. குறிப்பாக, நாமகள் இலம்பகத்தில் அமைந்த வருணனைகள், நெஞ்சம் விட்டு நீங்காதன. காப்பியப்புலவரின் கற்பனைத்தேர் ஓடும் நிலம், நாட்டுவளமும் நகர் வளமும் பாடும் பகுதியே எனின், அது மிகையன்று. இப்பொது நிலைக்கு ஏற்பவே, தேவரின் நாமகள் இலம்பகம் அமைந்தாலும், இவ் இலம்பகத்தால், தேவரைக் "கற்பனைக் களஞ்சியம்" என்று கூறும் அளவிற்குப் பாடல்கள் உள்ளன.

அகழியைப் பற்றிப் பாடும் போது, அவ் அகழியைப் பெண்களுக்கு ஒப்பிடுகின்றார். தம்மிடம் அகப்பட்டவரைக் கரை ஏறாமல் கொல்வதால், அகழி, பரத்தையரை நிகர்க்கும்; மலர்ந்த பூக்களைக் கொண்டிருத்தலால், மணம் செய்த குலமகளை ஒக்கும். காவல் செய்யப் பெற்றிருத்தலால், கன்னியரைப் போலாகும்.

"பட்டவர்த் தப்பலில் பரவை யேந்தல்குல்
அட்டொளி அரத்தவாய்க் கணிகை அல்லது
மட்டுடை மணமகள் மலர்ந்த போதினால்
கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே" (98)

இப்பாடல் ஒன்றிலேயே மூவகைப்பட்ட மகளிரை உவமை ஆக்கி அகழியை வருணித்த திறம், பாராட்டுக்குரியது. இப் பாட்டில், "காவலிற் காமர் கன்னி" எனக்கூறியிருத்தல், நோக்கு தற்கு உரியது. இங்கே, காவல் என்பது, பெற்ருேரின் காவலைக் குறிக்கும். அகப்பொருள் மரபுப்படி, கன்னியர் உரிய பருவத்தில் களவொழுக்கத்தில் ஈடுபட, அவளின் வேறுபாடுகண்ட பெற்ருேர், அவளை இற்செறிப்பர். இவ் இற்செறிப்பே கன்னிப் பருவத்துக் காவல் ஆகும். இதுவே இதன் பொருள் என்பதனை,

"பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரியளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவொடு மன்னிய
துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென
அகிலார்நறும்புகை ஐதுசென் றடங்கிய
மனைச்செறிந் தனளே வாணுதல்". (புறம் 337)

என்பதனுல் தெளிவாக உணரலாம். இப்புறப்பாடலில், "பாரி பறம்பிற் பனிச்சுனைபோலக் காண்டற் கரியள்" என்று கூறப் பெற்றிருத்தல் நோக்கத்தக்கதாம். பாரியின் காவற் கடுமையால், அவனது சுனை, பிறரால் காணுதற்கு அரியதாயிற்று. அதுபோல் பாரிமகளிரும் காணற்கு அரியர் என்பதாம். இங்கே இற்செறிக்கப் பெற்ற மங்கையருக்குப் பாரியின் சுனை உவமையாதல் காணலாம். இச் சங்க மரபு அறிந்தே தேவர், "காவலிற் காமர் கன்னி" எனப் பாடினுர். மேலும், கபிலர் பாடிய புறப் பாடலையும் தேவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும் என்பது, மற்ருெரு பாடலால் வெளிப்படுகின்றது. கன்னிப் பெண்களுக்குச் சுனையை உவமை கூறிய கபிலரின் திறமறிந்த தேவர், பதுமையாரிலம் பகத்தில்,காட்டிலுள்ள காணமுடியாத வாவிகளுக்குக் கன்னியரை உவமை கூறுகின்ருர். கபிலர் கூறிய உவமையை உவமிக்கப் படும் பொருளாகவும் உவமிக்கப்படும் பொருளை உவமையாகவும் மாற்றிய நயம் அழகு மிக்கது.

பொன்னணி திகிரியஞ் செல்வன் பொற்புடைக்
கன்னிய மகளிரிற் காண்டற் கரியன
நன்மணி புரிந்தனவாவி நான்குள
கன்னவில் தோளினுய் காட்டு வாயவே (1203)

இச் செய்யுளில், கன்னிப் பெண்கள் காணுதற்கு அரியர் எனக் கூறப்பெற்றுள்ளது. "காண்டற்கு அரியள்" என்னும் புறநானூற்றுத் தொடர், "காண்டற்கு அரியன" எனத்தேவர் வாக்கில் வெளிவந்துள்ளது எனலாம். தேவர் உவமையாகக் காட்டும் கன்னிப்பெண்கள், "திகிரியஞ் செல்வனின்" மகளிர். இங்கே திகிரியஞ் செல்வன் என்பதற்கு நச்சினார்க்கினியர், சக்கரவர்த்தி என உரை வரைந்துள்ளார். இதனால் அரச குலக் கன்னிப்பெண்கள், மிகுகாவல் உடையர் என்பதும், பிறரால் பார்க்கத் தகாத அளவிற்குப் பாதுகாவலினர் என்பதும் பெறப் படும். இவ்வாறு, தேவர் சங்க இலக்கியப் பயிற்சி மிக்கு அகழியைப் புனைந்த திறத்தினை, அவர் செய்யுள் காட்டுகின்றது.

## உவமை அழகு

உவமையில் காப்பிய உவமை என்பது, தனிச்சிறப்பு உடையது. இத்தகைய உவமைகள், காப்பியத்திற்கு வனப்புத் தருவன. பின்னே நடக்கப்போகும் நிகழ்ச்சியை முன்னே உவமையாகக் கூறுதல், முன்னே நடந்த நிகழ்ச்சியைப் பின்னே உவமையாகக் கூறுதல், ஓர் உவமையை முன்னே கூறி அவ் உவமையைப்பின்னும் பல பாடல்களில் காட்டுதல், முன்னே கூறிய உவமைக்கு ஏற்பப் பின்னே உவமை அமைத்தல் என்பன காப்பிய உவமைகள் ஆகும். இத்தகைய காப்பிய உவகைள் சில, சிந்தாமணியில் அமைந்து சுவைபயக்கின்றன.

விதைய நாட்டு அரசன்மகள், விசயை ஆவாள். இவள், தன் தந்தையின் அரண்மனையில் ஐவகைத் தாயரும் அவர்களின் மக்களும் போற்ற வளர்ந்தாள். இவ்விசயை, அவ் ஐவகைத் தாயரும் அவர்களின் மக்களும் சூழ்ந்து வரச் செல்லும் காட்சி, ஆயிரம் வலம்புரிச் சங்குகளால் சூழப்பெறும் சலஞ்சலம் என்னும் உயர்ந்த சங்குபோல் தோன்றியது.

> "கலம்புரி அகல்அல்குல் தாயர் தவ்வையர்
> சிலம்புரி திருந்தடி பரவச் செல்பவள்
> வலம்புரி சலஞ்சலம் வளைஇய தொத்தனள்
> குலம்புரிந் தனையதோர் கொடியின் நீர்மையாள்" (184)

வலம்புரிச் சங்குகளைக் காட்டிலும் சலஞ்சலம் என்னும் சங்கு, மிக உயர்ந்தது என்பர். இச் சங்கு போல விசயை இருந்தாள்.

இவ்வாறு விசயைக்குச் சலஞ்சலம் என்னும் சங்கினை உவமை கூறிய திருத்தக்கதேவர், இவ் உவமையை மறவாமல் பின்னும் இரண்டிடங்களில் எடுத்தாளுகின்றார்.

விசயை, இடுகாட்டில் சீவகனை ஈன்றாள். கூனி என்னும் தெய்வத்தின் அறிவுரையால், சீவகனும் குழந்தையை ஒரு பள்ளியில் கிடத்தி விசயை மெல்ல மறைகின்றாள். குழந்தையைப் பெற்று அவனை விட்டுவிட்டு மறையும் விசயைக்கு, முத்தை ஈன்று விட்டுக் கடலில் புகும் சலஞ்சலத்தினை உவமை கூறுகின்றார்.

சின்மணி மழலை நாவில் கிண்கிணி சிலம்பொ டேங்கப்
பன்மணி விளக்கின் நீழல் நம்பியைப் பள்ளி சேர்த்தி
மின்மணி மிளிரத் தேவி மெல்லவே ஒதுங்கு கின்றாள்
நன்மணி ஈன்று முந்நீர்ச் சலஞ்சலம் புகுவ தொத்தாள்
(317)

விசயையைப் பெதும்பைப் பருவத்தில் சலஞ்சலம் என்று கூறிய ஆசிரியர், அவள் மகனைப் பெற்றுமறையும் இடத்திலும் அவளுக்குச் சலஞ்சலத்தினை உவமை கூறியிருக்கும் திறம், காப்பியம் பயில்வாருக்கு நினைவோட்டத்தினையும் சுவையையும் மிகுவிக்கும்.

சீவகசிந்தாமணியில் இருநிகழ்ச்சிகள், இன்றியமையாச் சிறப்பு நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சிகளே காப்பியத்தின் அடிப்படை நிகழ்ச்சிகள் என்று கூறலாம். சச்சந்தனைக் கட்டியங்காரன் கொன்றது முதல் நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியே காப்பியக் கதையினை வளர்க்கும் வித்தாகும். இவ்வித்து மரமாகி, பூத்து, காய்த்து, கனியாக நிற்கும் நிகழ்ச்சி, கட்டியங்காரனைச் சீவகன் கொன்றதாகும். இது காப்பியத்தின் முடிநிலை நிகழ்ச்சி என்று கூறலாம். கட்டியங்காரனின் வெற்றி, தீமையின் வெற்றி. சீவகனின் வெற்றி, நன்மையின் வெற்றி. இந்திய நாட்டுக் காப்பியங்கள் நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறுகின்ற போராட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டவை. காப்பியத் தொடக்கத்தில் தீமை வெற்றி பெறும். ஆனால் அவ் வெற்றி, என்றும் நிலையான வெற்றி அன்று. முடிவில், நன்மையே வெல்லும்; தீமை அழியும். இப்பொதுப் போக்கினையே "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்பர். இப் பொது விதி

கொண்டு நோக்கினால், சீவகசிந்தாமணியில் சச்சந்தனின் வீழ்ச்சியும், சீவகனின் எழுச்சியும் எவ்வளவு பெரிய இன்றியமையா நிகழ்ச்சிகள் என்று அறியலாம். இவ்விரு நிகழ்ச்சிகளையும் பாடும் திருத்தக்க தேவர், இரண்டு இடங்களிலும் மிகச் சிறந்த உவமைகள் இரண்டனை அமைக்கின்றார். இவ்வுவமைகள் தொடர்புடைய உவமைகளாக அமைந்திருப்பது, நம் மனத்தினை மகிழ்விக்கின்றது.

வானவர் நாடு என்று போற்றப் பெறும் ஏமாங்கத நாட்டில், பெரியோர்கள் மயங்கவும், மகளிரெல்லாம் வாய்விட்டு அரற்றவும், கொடுங்கோல் ஆகிய இருள் பரவவும், அறச்செங்கோல் நடத்தும் சச்சந்தனைக் கட்டியங்காரன் கொன்றான். இதனைத் திருத்தக்க தேவர்,

> தோய்த்த விசும்பு என்னும் தொன்னாட் டகந்தொழுது
> புலம்பெய்தி மைந்தர் மாழ்க
> ஏந்து முலையார் இனைந்து இரங்கக் கொடுங்கோல்
> இருள்பரப்ப வேளபாவம்
> ஆய்ந்த குருகுலமாம் ஆழ்கடலின் உள்முளைத்த
> அறச்செங் கோலாய் கதிரினை
> வேந்தர் பெருமானைச் சச்சந்தனை மந்திரிமா
> நாகமுடன் விழுங்கிற்று அன்றே — 290

என்று பாடுகின்றார். குருகுலமாம் கடலில் தோன்றி அறச்செங்கோல் செலுத்தும் ஞாயிறு என்று சச்சந்தனைக் குறிப்பிடுகின்றார். இஞ் ஞாயிற்றைக் கட்டியங்காரனென்னும் அமைச்சனாகிய பெரிய நாகம், விழுங்கியது என்றும் கூறுகின்றார். இப்பாடலில் அமைந்த உவமை, சிறந்த காப்பிய உவமை ஆகும். ஞாயிறு போலும் சச்சந்தனை நாகம் போலும் அமைச்சன் விழுங்கினான் என்று கூறுவது, சச்சந்தனின் பெருமையையும் கட்டியங்காரனின் இழிவையும் காட்டும். ஞாயிற்றைப் பாம்பு விழுங்கினால் உலகமெல்லாம் இருள்பரவும்; இதனையும் உட்கொண்டு "கொடுங்கோல் இருள்பரப்ப" என்று கூறுகின்றார். சச்சந்தனைக் கட்டியங்காரன் கொன்றான் என்று கூறாமல், கட்டியங்காரனைப் பாம்பு என்று கூறியதற்கேற்ப, விழுங்கிற்று என்று கூறிய நயம், நினைந்து இன்புறத் தக்கது. கொன்றான்

என்ற வினைச்சொற்கும் விழுங்கினான் என்ற வினைச்சொற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. நாம் ஒருவரிடம் ஒரு பொருளைக் கொடுத்துவைக்க, அவர், அப்பொருளை நம்மிடம் தராமல், அப்படியே எடுத்துக் கொண்டால், அப்போது விழுங்கி விட்டான் என்று கூறுவோம். இதனையே திருத்தக்கதேவர், உவமைக்கு ஏற்பவும் அமைத்து, "மந்திரிமாநாகம் விழுங்கிற்று" என்று பாடுகின்றார். விழுங்கிற்று என்னும் சொல்லே மிகப் பொருத்தமானது என்று அறிந்த திருத்தக்க தேவர், பின்னும் ஓரிடத்தில் இச்சொல்லையே ஆட்சி செய்கின்றார்.

அச்சணந்தி முனிவர் சீவகனுக்குப் பிறன் வரலாறு போல அவன் வரலாற்றைக் கூறும்போது கட்டியங்காரன் சச்சந்தனைக் கொன்றான் என்பதனைக் குறிக்குமிடத்தில், விழுங்குதல் என்னும் வினையையே ஆண்டுள்ளார்.

> வையகம் உடையமன்னன் சச்சந்தன் அவற்குத்தேவி
> பைவிரி பசும்பொன் அல்குல் பைந்தொடி விசயை என்பாள்
> செய்கழல் மன்னன் தேர்ந்து தேவியைப் பொறியிற் போக்கி
> மையல்கொள் நெஞ்சில் கல்லா மந்திரி விழுங்கப்பட்டான்
> (385)

என்று திருத்தக்க தேவர் கூறுகின்றார். இங்கே, கல்லா மந்திரியால் விழுங்கப்பட்டான் என்று கூறியிருப்பதையும், மந்திரி மாநாகம் என்று முன்னே கூறியிருப்பதையும் ஒப்பு நோக்கின் இப் பாட்டிலும் முன்னே கூறிய உவமையை மனத்திற் கொள்ள வேண்டும் என்னும் திருத்தக்க தேவர் கருத்து வெளிப்படும்.

பின்னர்க் கட்டியங்காரனைச் சீவகன் கொன்றதாக அமையும் நிகழ்ச்சியிலும் இவ்வுவமையைத் திருத்தக்கதேவர் பொருத்திக் காண்கின்றார். கடல் சூழ்ந்த உலகம் அஞ்சுமாறு ஒளி பரப்பும் ஞாயிற்றைக் கொடிய பாம்பு விழுங்கிப் பல நாள் கழிந்த பின், அப்பாம்பின் வாயைப் பிளந்து கொண்டு ஞாயிறு நிற்பதுபோல இளஞாயிரும் சீவகன் நின்றான். இவ்வாறு கட்டியங்காரனைக் கொன்ற நிகழ்ச்சியைத் தேவர் விளக்குகின்றார்.

ஒல்லைநீர் உலகம் அஞ்ச ஒளிஉமிழ் பருதி தன்னைக்
கல்லெனக் கடலின் நெற்றிக் கவுட் படுத் திட்ட நாகம்
பல்பகல் கழிந்த பின்றைப் பன்மணி நாகந் தன்னை
வல்லைவாய் போழ்ந்து போந்தோர் மழகதிர் நின்றது
ஒத்தான் (2324)

இப்பாட்டில் கட்டியங்காரனைப் பாம்பாகவும், சீவகனை ஞாயிரு கவும் கூறியுள்ளார். காப்பியத் தொடக்கத்தில், 290 ஆம் பாடலில் கட்டியங்காரனைப் பாம்பாகக் காட்டிய ஆசிரியர், ஏறத்தாழ 2000 பாடல்கள் கழித்துக் கட்டியங்காரன் என்னும் பாம்பின் வாயைச் சீவகனும் ஞாயிறு பிளந்தது என்று கூறி இருக்கும் திறம், காப்பியப் படைப்பின் ஆற்றலை வெளிப்படுத்து கின்றது. எவ்வளவு சிந்தனையோட்டம் காப்பியப் புலவருக்கு வேண்டும் என்பதனை, இவ் உவமையால் அறிகின்றோம். மேலும் சீவகன் கட்டியங்காரனைக் கொன்றான் என்று கூறுமிடத்தில் சீவகனை இளஞாயிறுகக் கூறியுள்ளார். இந்நயம், நினைத்து மகிழத் தக்கது. கட்டியங்காரன் சச்சந்தனைக் கொன்ற நிகழ்ச்சியைக் கூறுமிடத்தில், "ஆழ்ந்துபடு வெஞ்சுடரின் ஆண்தகை அவிந்தான்" (289) என்று சச்சந்தனை நிறைஞாயிறுகக் காட்டு வார். அவ்வாறு காட்டியவர், சீவகனைக் குறிப்பிடும்போது இள ஞாயிறுகப் படைக்கின்றார். இவ்வுவமை அழகினைக் கண்ட நச்சினார்க்கினியர், "அவன் புதல்வன் அவனே ஆம் ஆதலின் மீண்டும் சீவகனைச் செய்யோன் என்று ஞாயிருக்கினார்" (2322) எனவும், "தந்தை புதல்வனுய்ப் பிறப்பன் என்னும் விதி பற்றிக் கூறினார்" (2324) எனவும் கூறியுள்ளார். இவ்வாறு சில நிகழ்ச்சி களுக்கு உரிய காட்சிகளை உவமையாகக் கூறி இவ்வுவமைகளை மீண்டும் பொருத்திக்காட்டும் திருத்தக்கதேவரின் திறம், காப்பி யத்தின் இலக்கியச்சுவைக்கு ஏதுவாகின்றது.

திருத்தக்க தேவர், தம் பெருங்காப்பியத்தில், மிகப்பல உவமைகளை அமைக்கின்றார். பொதுவாகவே, தமிழ்ப் புலவர்கள் உவமை அமைத்துப்பாடுவதில் மிக வல்லவர்கள். சங்க இலக் கியங்களை நோக்கினால், எவ்வளவோ உவமைகள், விண்மீன்கள் என ஒளி வீசுகின்றன. அம் மரபில் தோன்றிய திருத்தக்க தேவர்—சங்க இலக்கியம் போன்ற இயற்கை இலக்கியங்களை நன்கு அறிந்த திருத்தக்கதேவர், தம் காப்பியத்தில் எவ்வளவோ

உவமைகளை அமைத்து அழகு செய்கின்றார். ஒருபாட்டின் சுவை, அப்பாட்டின் வடிவாலும், சொல்லும் முறையாலும்,கருத்து வளத்தாலும் சிறக்கின்றது என்பது உண்மையே. ஆயினும், அப்பாட்டில் உவமையும் அமையுமானால், அப்பாடல், அழகுஎனும் அதுவும் ஓர் அழகு பெற்றதாக அமையும். படிப்பவருக்குத்தெளிவையும் அறியாததை அறிந்து கொள்ளும் விளக்கத்தையும் துய்த்து மகிழும் இன்பத்தையும் உவமைகள் தரும்.

சீவக சிந்தாமணியில் நீர்வளம் பாடுகின்ற திருத்தக்க தேவர் வயல் விளைவைக் கூறுகின்றார். நெற்கள் கருக்கொண்டன; கருக்கொண்ட நெற்களில் கதிர்கள் வெளிவந்தன; அவை நிமிர்ந்து நின்றன. நன்கு விளைந்த உடன் அக்கதிர்கள் சாய்ந்தன என்று கூறுகின்றார். இக்கருத்துக்கள் மிகமிக இயல்பானவை; நெற்பயிரைப் பற்றி அறியாதவர்க்கு இவை புதுமையாக இருக்கலாம். இவ்வளவு எளிய கருத்தை நாட்டு வளத்தில் பாடுகின்றார். ஆனால், இப்பாடல், மிகவும் அருமையான பாடலாக அமைகின்றது. இப்பாடல் இவ்வளவு சிறந்த பாடலாக அமைவதற்குக் காரணம், இப்பாட்டில் அமைந்த உவமைகளே ஆகும்.

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரில் இறைஞ்சிக் காய்த்தவே (53)

நெற்பயிர் கருத்தாங்கியுள்ளது. இத்தோற்றம், சூல்கொண்ட பச்சைப் பாம்பின் தோற்றம் போல் உள்ளது. கருக்கொண்ட பயிர்கள் நிமிர்ந்து நிற்கின்றன. இது, செல்வத்தையுடைய கீழ் மக்கள் போல் காட்சி அளிக்கின்றது. பயிர்கள் விளைந்து முற்றிய உடன், வளைந்து சாய்கின்றன. இது, மெய்ப்பொருள் நூல்களை ஆராய்ந்த மக்களைப்போல் தோற்றம் அளித்தது. நெற்பயிரின் மூன்று நிலைகளுக்கு மூன்று உவமைகள் கூறியுள்ளார். பயிர்கள் கருக்கொண்டமைக்குப் பாம்பின் சூல் என்று கூறாமல், பசும் பாம்பின் சூல் என்று கூறியதே, தேவரின் அறிவு நுட்பத்தை வெளிப்படுத்தும். எஞ்சிய இரண்டு உவமைகளும் வாழ்வியல் உவமைகள். இவ்வுவமைகளுக்கு அடிப்படை திருக்குறள் என்று சொன்னால் அது மிகை அன்று.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

என்று திருவள்ளுவர் பணிவுடைமையைக் கூறுவார். பெருமை உள்ளவர்கள், பணிவார்கள். இப்பெருமை கல்வியாலோ செல்வத்தாலோ பதவியாலோ வந்த பெருமையாக இருக்கலாம். பெருமை மிகமிகப் பணிவு, மிக வேண்டும். இவ்வாறு பணியும் தன்மை ஏற்பட்டால், புகழ் பெருகும். பெருமை இல்லாத சிறுமை படைத்தவர்களே தம்மைப் புகழ்வர். தலை நிமிர்ந்து நிற்பர். இவ்வாறு திருவள்ளுவர் பெருமைக்கும் சிறுமைக்கும் அளவுகோல் காட்டுவர். இக்கருத்தை உள்ளங்கொண்ட திருத்தக்க தேவர், நெற்பயிரின் வளர்ச்சியில் வைத்துக் காட்டுகின்றார். நெற்பயிர்கள் நிமிர்ந்து நிற்கின்ற தோற்றம், செல்வம் நிறைந்த மேலலார் தோற்றம் போல் உள்ளதாம். நெற்பயிர்கள் விளைந்து சாய்ந்து கிடப்பது. கல்விசேர் மாந்தர்போல் உள்ளதாம். திருத்தக்க தேவர் பாடிய இப்பாடல், வளம் உணர்த்தும் பாட்டாக இருந்தாலும், வாழ்க்கை நெறி உணர்த்தும் பாட்டாகும். கல்வியின் பயன் பணிதல் என்பதனை எவ்வளவு அழகாகக் காட்டுகின்றார். மேலும் செல்வத்தின் பயனும் பணிதலே என்பதனையும் விளக்குகின்றார்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

என்னும் திருக்குறளையும் இங்கே நாம் நினைவுகொள்ள வேண்டும். பாட்டோ காப்பியமோ இவைகள் அவ்வளவில் மகிழும் இன்பத்தைத் தருதற்காகப் படைக்கப் பெற்றன அல்ல. அவைகள் வாழ்வாங்கு வாழத் துணை செய்வன. இப்பெரு நோக்கத்திலேயே தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளார்கள். தமிழ்ப் புலவர்களின் குறிக்கோள் நெறியான வாழ்க்கையே என்பதனைத் திருத்தக்க தேவர் பாடிய இத்தகைய உவமைப் பாட்டுக்களும் உணர்த்துகின்றன.

சீவகசிந்தாமணியில் அமைந்த பாடல்களில் பல, பொருள் கொள்வதற்கு அரியன. நச்சினார்க்கினியரின் சிறந்த உரை இருந்தாலும், பாடல்களின் பொருளை அவ்வளவு எளிதாக அறிந்து கொள்ளுதல் இயலாது. சொற்களைக் கொண்டு கூட்டியும் மொழிமாற்றியும் பொருள் கொள்ள வேண்டிய

இடங்கள் உள்ளன. ஆனால், "சொல்லருஞ் சூற்பசும்" எனத் தொடங்கும் இப்பாடல், பொருள் கொள்வதில், இடர்ப்பாடு இல்லாமல் இயல்பாக அமைந்துள்ளது. இதனை உணர்ந்த சங்கர நமச்சிவாயர் நன்னூலுக்குத் தாம் எழுதிய உரையில், இப் பாட்டினை, யாற்றுநீர்ப் பொருள் கோளுக்கு எடுத்துக் காட்டாகக் காட்டுகின்றார். ஆற்றுநீர் செல்லுதல் போல், பாட்டில் பொருள் தொடர்ந்து செல்லுதல் ஆற்றுநீர்ப் பொருள் கோளாம். இப்பொருள்கோள் பொருந்த, இயல்பாக அமைந்த இப்பாட்டில், உவமைகள் இடம் பெற்றிருக்கும் திறத்தை நோக்கினால், திருத்தக்கதேவரின் கவிபாடும் ஆற்றலை நாம் நன்கு உணர முடியும்.

வழிப்போக்கனுக்குச் சீவகன், அறிவுரை கூறுமிடத்தில், துறவிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"படநாகம் தோல்உரித்தால் போல்துறந்து கண்டவர்மெய்
பனிப்ப நோற்றிட்டு
உடலுகை ஐம்பொறியும் வென்றார்" (1546)

என்று சொல்கின்றான். இங்கே, துறவிகள் துறப்பதற்குப் "படநாகம் தோல் உரித்தால் போல்" என்னும் உவமை வந்துள்ளது. இவ் உவமை, துறத்தலுக்குக் கூறிய மிகச்சிறந்த உவமையாகும். படம் உடைய நாகம், தன் தோலை உரித்தல் போல், துறக்க வேண்டும் என்பது இதன் பொருள். இதற்கு விளக்கம் எழுதும் நச்சினார்க்கினியர், "படநாகம் தோல் உரித்தாற் போல அகமும் புறமும் தூயவாகத் துறந்து" என்பர். பாட்டில், தோல் உரித்தலாகிய செயல் ஒன்று மட்டுமே உள்ளது. இது, புறத்தூய்மையைக் காட்டும். அகமும் தூய்மையாகத் துறத்தல் என்பது, அவ் உவமையில் வெளிப்படையாக அமையவில்லை. ஆயினும், நச்சினார்க்கினியர், இவ் உவமையின் நுட்பம் தெரிந்து உரையெழுதுகின்றார். உவமையின் சிறப்பினை எடுத்துக் கூறுவோர், உவமிக்கப் படும் பொருளின் இயல்பினை அறிந்தால் மட்டும் போதாது; உவமையாகக் கூறப்பெறும் பொருளின் தன்மையையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

நச்சினார்க்கினியர், நல்ல பாம்பின் தன்மையை அறிந்து, "நாகம் தோல் உரிக்கும் போது நஞ்சும் காலும்" என்று விளக்கவுரை எழுதுகின்றார். இதனால், நாகம் தோல் உரிக்கும் போது, தோல் உரித்தலாகிய புறத்தூய்மையும், நஞ்சு காலுதலாகிய அகத்தூய்மையும் பெறும் என்பது விளங்கும். எனவே, துறப்பாரும் புறத்தூய்மையும் அகத்தூய்மையும் அமையுமாறு துறக்க வேண்டும்.

புறப்பற்று என்பது, யான் என்னும் செருக்கு அறுத்தல், அகப்பற்று என்பது எனது என்னும் செருக்கு அறுத்தல்.

> "யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்" (346)

என்னும் திருக்குறளில், இவ் இருவகைப் பற்றுக்களும் விடுதல் வேண்டும் எனக் கூறப்பெற்றுள்ளது. எனவே, புறப்பற்றும் அகப்பற்றும் நீங்குதலே புறத்தூய்மையும் அகத்தூய்மையும் ஆகும். திருத்தக்க தேவர், துறவுநெறி நின்றவர் ஆதலின், இத் துறவின் நிலைக்கு இவ்வாறு அழகிய உவமை கூறியுள்ளார் எனலாம். இவ் உவமையைத் திருத்தக்கதேவர், மற்றோரிடத்தும் எடுத்தாண்டுள்ளார். நந்தட்டனும் சீவகனின் தோழரும் துறத்தலைப் பற்றிக் கூறும்போது.

> "பற்று ஆர்வம் செற்றம் முதலாகப் பாம்புரிபோல்
> முற்றத் துறந்து". (3039)

என உரைப்பர். துறவுக்குத் திருத்தக்க தேவர் உரைத்த இவ் உவமை, தோலா மொழித்தேவரால், சூளாமணியில், "வாளரவு தோலும் விடமும் நீத் தென்ன நீத்த" எனக் கூறப்படுகின்றது. திருத்தக்க தேவர், பாம்பு தோல் உரித்தலை மட்டுமே துறவுக்கு உவமையாகக் கூறி, நஞ்சு காலுதலைக் குறிப்பாகக் கொள்ள வைத்தார். ஆனால், தோலாமொழித் தேவர், தோல் உரித்தலையும் நஞ்சு காலுதலையும் துறவுக்கு உவமையாக்கினார். தோலாமொழித் தேவரின் இவ் விளக்க உவமையே, "நாகம் தோல் உரிக்கும் போது நஞ்சும் காலும்" என்று நச்சினார்க்கினியர், அறிந்து எழுதுதற்குத் துணையாயிற்று

என்றும் கருதலாம்.

துறவுக்குத் தேவர் கூறிய உவமையை அறிந்த அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரத்தில், பின்வருமாறு எழுதுவர்.

"இனித் துறவறமாவது, நாகம் தோல் உரித்தாற் போல அகப்பற்றும் புறப்பற்றும் அற்று, இந்திரியவசம் அறுத்து முற்றத் துறத்தல்" (ஊர்காண்காதை அடி. 11).

இவ்வாறு அடியார்க்கு நல்லார் கூறும் உரைக்கு மூலமாய் அமைந்தது, சீவகசிந்தாமணியில் அமைந்த உவமையே ஆகும். துறவுக்குக் கூறிய இவ் அருமையான உவமை, அறிவுக்கு விருந்தாகும் சீரிய உவமையாகும்.

இவ் உவமை, துறத்தலுக்காகத் திருத்தக்க தேவர் காட்டும் அரிய உவமை ஆயினும், இவ் உவமை, புறநானூற்றில், வடமோதங்கிழார். என்பவரால் கூறப்பெற்றுள்ளது. தோல் உரித்த பாம்பு போல, வீரன் ஒருவன், உடம்பை ஒழித்து, உயிருடன் தேவருலகம் சென்ருன் என, அச் சங்கப் புலவர் பாடியுள்ளார்.

"உரிகளை அரவ மானத் தானே
அரிதுசெல் உலகில் சென்றனன் உடம்பே. (புறம். 260)

என்னும் இப்புறநானூற்று உவமையே, திருத்தக்க தேவருக்கு அடிப்படை ஆயினும் திருத்தக்கதேவர், இவ் உவமையை மிகச் சிறப்பாகப் பொருத்தியுள்ளார்.

திருத்தக்கதேவர் உவமை கூறும்போது, பாத்திர இயல்பு அறிந்தும் உவமை சொல்லுகின்ருர். தொல்காப்பியர், அகப் பொருள் மாந்தர்கள் எவ்வாறு உவமை கூற வேண்டும் என்பதனை வரையறுத்துக் கூறுவார். புலவரின் திறமைக்கு ஏற்ப உவமை அமையலாம். ஆனல் பாத்திரங்கள் உவமை கூற வேண்டுமாயின், பாத்திரங்களின் நிலைகளுக்கு ஏற்பவே உவமை அமைய வேண்டும். அப்பொழுதுதான், பயில்வோருக்கு அப்பாத்திரத்தின் மனநிலை வருதல் இயலும்.

கோவிந்தனின் தந்தை நந்தன் ஆவான். இவன், தன் மகளை மணந்துகொள்ள வேண்டும் என்று சீவகனை வேண்டுகின்றான். அப்போது, நந்தன் கோவிந்தையின் வனப்பினைச் சீவகனுக்கு எடுத்துரைப்பதாகத் திருத்தக்கதேவர் பாடும் இடத்தில் நந்தன் இடையர் குலத்தான் என்பதற்கு ஏற்ப, அவன் கூறும் உவமைகளையும் திருத்தக்கதேவர் அமைக்கின்றார்.

"வெண்ணெய் போன்று ஊறு இனியள்
மேம்பால் போல் தீஞ்சொல்லள்
உண்ண உருக்கிய ஆன்நெய்போல் மேனியள்" (480)

என்று நந்தன் கூறுகின்றான். வெண்ணெய் போல் குழைந்து இனிமை உடையவள், பால் போல் நலம் பயக்கும் சொல்லள், உண்ண உருக்கிய நெய்போல் மேனியள் என்றான். இங்கே வெண்ணெய் பால் நெய் முதலிய பொருள்களை இடைக்குலத்துக்கு ஏற்ப உவமை கூறியிருப்பது பொருத்தம் மிக்கதாகும்.

சீவகனுக்கு வேடர்கள் தோற்றனர். வேடர்கள் தோற்றமைக்குக் காட்டும் உவமைகள், வேடர்களின் சூழலுக்கு ஏற்பவே அமைந்துள்ளன.

"ஆழியான் ஊர்திப் புள்ளின் அஞ்சிற கொலியின் நாகம்
மாழ்கிப்பை அவிந்த வண்ணம் வள்ளல்தேர் முழக்கி
னும்
சூழ்துகள் மயக்கத் தானும் புளிஞருள் சுருங்கிச் சேக்கைக்
கோழிபோற் குறைந்து நெஞ்சின் அறமென மறமும்
விட்டார்"

வேடர்கள், மனஎழுச்சி குன்றி, வலைப்பட்ட கோழி போலச் செயல் குறைந்தனர். தம்நெஞ்சில் அறம் புகுதாமல் கைவிட்டாற் போல மறத்தையும் கைவிட்டனர். எவ்வளவு அழகான உவமைகள். இலங்கையில், அறம் புகவில்லை என்பதனையும், வேடர்கள் நெஞ்சில், அறம் புகவில்லை என்பதனையும் ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும்.

அணியின் வகைகளில், தற்குறிப்பேற்ற அணியும் ஒன்று. பொருள்களில் நிகழும் இயல்பான தன்மையைத் தன் கருத்திற்கு ஏற்பக் கவிஞன் பயன் படுத்துதல், தற்குறிப்பேற்றம் ஆகும். இத் தற்குறிப்பேற்றம் கருத்து வகையால் அமைந்த அணி எனலாம்.

கவிஞரின்கற்பனைக்கு இவ்அணி, பெரிதும் பயன்படும்.காப்பியங்களில், இத் தற்குறிப்பேற்ற அணியால், கவிஞர்கள், தம் உள்ளக் கருத்தினை நன்கு வெளியிடுவர்.

சீவகன், கேமசரியை மணந்து, அவளுடன் இரண்டு திங்கள் தங்கினான். பின்,அவளிடம் கூறாமல், அவளைப் பிரிந்து தனியனாய் இரவில் புறப்பட்டுச் சென்றான். காரிருளில் அவன் செல்வதைக் கண்டு, கைவிளக்கு ஏந்தியது போல் மதி தோன்றியது. இயல்பாக மதி தோன்றும் நிகழ்ச்சியை, காட்டில் காரிருளில் சீவகன் செல்லும் துயர் கண்டு தோன்றியதாகத் திருத்தக்க தேவர் பாடுகின்றார்.

"ஏறனாற்கு இருளை நீங்கக் கைவிளக்கு ஏந்தி யாங்கு
வீறுயர் மதியம் தோன்ற விரைவொடு போய பின்றை
மாறிலாப் பருதி வட்டம் வருதிரை முளைத்த ஆங்கண்
ஆறுசெல் ஒருவற்கு அண்ணல் அணிகலம் அருளல் உற்றான்
(1542)

என்பது சிந்தாமணிப் பாடல். சீவகனுக்குக் கைவிளக்கு ஏந்தியாங்கு, இருள் நீங்க மதியம் தோன்றியது என்பது, கவிஞரின் தற்குறிப்பேற்றம் ஆகும். இக் கற்பனை, கம்பரின் உள்ளத்தைக் கவர்ந்தது. திருத்தக்க தேவர், தாம் இயற்றிய காப்பியத்தின் தலைமகனான சீவகன், காட்டில் காரிருளில் செல்லும் போது இவ்வாறு கூறுவதை அறிந்த கம்பர், தம் காப்பியத்திலும் தம் காப்பியத் தலைவனான இராமன், தன் தம்பி இலக்குவனோடு இரவுப் பொழுதில் காட்டில் செல்வதைக் குறிப்பிடும்போது திருத்தக்கதேவர் கையாண்ட கற்பனையையே படைக்கின்றார்.

"பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை
அரக்கரைப் பொருந்தி அன்னார்
செய்வினைக்கு உதவு நட்பால்
செல்பவர்த் தடுப்ப தேய்க்கும்
மைவிளக் கியதே யன்ன
வயங்கிருள் துரக்க வானம்
கைவிளக் கெடுத்த தென்ன
வந்தது கடவுட் டிங்கள்".

(தைலமாட்டுப் படலம்–49)

என்று கம்பர் கூறுகின்றார். இராமனும் இலக்குவனும் காட்டிற் செல்லும் போது இருள் தோன்றியது. அவ் இருள், நிறத்தால் அரக்கரை ஒத்திருந்தது; எனவே இராம இலக்குவரைச் செல்லாமல் தடுத்தது. அப்போது, கைவிளக்கு எடுத்ததுபோல் வானத்தில் திங்கள் எழுந்தது என்பது கம்பர் கருத்து. "கைவிளக்கு ஏந்தியாங்கு" என்னும் திருத்தக்க தேவரின் கற்பனையே, கம்பருக்குக் "கைவிளக்கு எடுத்தது என்ன" என்னும் கற்பனையைப் பாடத் தூண்டிற்று எனலாம்.

இது போன்ற அணிகளும் சீவகசிந்தாமணியில் அமைந்து, அக்காப்பியத்தினை அழகு செய்கின்றன.

### சொல்லாட்சி

ஓவியத்திற்குச் சுவரும் சிற்பத்திற்குக் கல்லும் போன்றவை படைப்புப் பொருளாக இருத்தல் போலக் கவிதைக்குச் சொல், படைப்புப் பொருளாக உள்ளது. சொற்களைக்கொண்டு படைக்கப் பெறுவதே கவிதை. இச் சொற்களைக் கவிஞர்கள் பயன் படுத்தும் போது, அவைகள், மிகச்சிறந்த ஆற்றலைப் பெறு கின்றன. சொற்களின் இயல்பு, பொருள் உணர்த்தல் ஆகும். ஆனால், அச்சொற்கள், கவிஞர்களின் சொல்லாகும்போது, உணர்ச்சியும் பெறுகின்றன. சிறு சிறு சொற்களில்கூட, மிகப்பெரிய உணர்ச்சிகளைக் கவிஞர்கள் அமைக்கக் காணலாம். "செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்வியகவிஞர்" எனக்கம்பர், சொல்லின் சிறப்பினையும் இனிமை யையும் ஆழத்தினையும் காட்டுவர். இச்சொற்களைக் "கவிச் சொற்கள்" என்று கூறலாம்.

யாழ்ப்போரில் காந்தருவத்தை, சீவகனுக்குத் தோற்றமை யால் அவள் சீவகனுக்கு மாலை சூட்டினாள். அதுகண்ட கட்டியங்காரன், மனம் புழுங்கினான். "கள்ளரால் புலியை ஏறு" காண்கின்ற கதைபோல் கட்டியங்காரன், சுயவரத்திற்கு வந்திருந்த மன்னர்களைச் சீவகனோடு போர் செய்யச் செய்து, சீவகனைக் கொல்ல எண்ணினான். இங்கே கட்டியங் காரனின் சூழ்ச்சியை, "கள்ளரால் புலியையேறு காணிய காவல்மன்னன்" (741) என்று திருத்தக்கதேவர் கூறுவர். கள்ளரால் புலியை ஏறு காணுதல் என்பது, சூழ்ச்சிக் கதை

யாகும். ஒருவன், பண மூட்டையுடன் காட்டுவழிச் சென்றான்; அப்போது, திருடன் ஒருவன், அவனைக் கண்டு துரத்தினான். எதிரில் ஒரு புலி, உறுமிக் கொண்டு வந்தது. திருடன், புலி ஆகிய இரண்டு தொல்லையிலிருந்தும் தப்ப, வழிப்போக்கன் சூழ்ச்சி செய்தான். திருடனை நோக்கி, "அப்புலியைக் கொன்று விட்டால், உனக்குப் பண முடிப்பினைத் தருகின்றேன்" என்றான். திருடன், அவ்வாறே புலியை எதிர்த்தான். புலி திருடனை அடித்துத் தின்று பசி தீர்ந்தது. வழிப் போக்கன் தப்பினான். இதனையே "கள்ளரால் புலியை ஏறு காணிய" என்னும் தொடர் குறிக்கின்றது. சூழ்ச்சியில் வல்ல கட்டியங்காரன், மன்னர்கள் பிறரை ஏவிச் சீவகனைக் கொல்ல முயன்றான். மன்னர்கள், போருக்கு எழுந்தனர். அப்போது, பதுமுகன், அவர்களை நோக்கி அறிவுரை கூறுகின்றான்.

> "பண்ணியல் யானை மேலான் பதுமுகன் பரவைத் தானை
> கண்ணிய துணர்ந்து கல்லாக் கட்டியங் காரன் நெஞ்சில்
> எண்ணியதெண்ணி மன்னர் இகன்மலைந் தெழுந்த போழ்தில்
> தண்ணிய சிறிய வெய்யதழற் சொலால் சாற்றுகின்றான்"
> (747)

என்பர் திருத்தக்கதேவர். பதுமுகன் கூறிய சொற்களைத் "தண்ணிய சிறிய வெய்யதழற் சொல்" என்று குறிப்பிடும் நயம், நோக்குதற்கு உரியது. இச் சொற்களை விளக்கும் நச்சினார்க் கினியர், இவை: சாம பேத தான தண்டம் என்பர். "சாமம் இனிதாகக் கூறுதல்; அது குளிர்ந்திருத்தலின், "தண்ணிய" என்றார்; பேதம்–மென்மையானும் வன்மையானும் மனத்தினைப் பேதித்தல்; அது, பொய்யும் மெய்யும் கூறிப் பேதித்தலின் சிறிய என்றார். தானம்–பகைவர் மனம் மகிழக் கொடுத்தல்; அஃது, அவர் விருப்பப்படுதலின், "வெய்ய" என விருப்பத்தாற் கூறினார். தண்டம்–பின்பு, அவர் ஆகாமல் அழித்தே விடுதல்; அது, தழல்போல் இருத்தலின், "தழல்" என்றார் என நச்சினார்க் கினியர், மேலும் விளக்கவுரை செய்வர். இவற்றிற்கு ஏற்ப, இப்பாடலின் பின் வரும் பத்துப் பாடல்களை நச்சினார்க்கினியர் பிரித்துக் காட்டுவர்.

சாம பேத தான தண்டம் என்பன, அரசியல் நெறிமுறைகள், இவற்றை மேற்கொண்டு ஆட்சி செலுத்துதல் வேண்டும் என்பது அரசியல் நெறி. ஆதலின், பதுமுகன் இந்நெறி அறிந்து பேசுகின்றான் என்பதனைத் திருத்தக்கதேவர், தண்ணிய,சிறிய, வெய்ய, தழற்சொல் என்னும் நான்கு அடைச் சொற்களால் வெளிப்படுத்துகிறார். எவ்வளவு பெரிய அரசியல் கொள்கை, நான்கு சொற்களில் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதனை நோக்கினால், திருத்தக்க தேவரின் சொல்லாற்றல் வெளிப்படும். பதிகத்தில் பாடப்பெற்ற பொருளை நூலின் உள்ளே விரித்துக் கூறுதல் மரபாகும். அதுபோல் "தண்ணிய சிறிய வெய்ய தழல்சொல்" என்று கூறிய நுட்பத்தினை, இப்பாடலுக்குப் பின்னே வரும் பாடல்களில் திருத்தக்கதேவர் விரித்து உரைக்கின்றார்.

கவிஞர்களின் உள்ளத்தினைக் காட்டும் கண்ணாடி சொல்லே ஆகும். சொல்லின் அமைப்பினைக் கொண்டு, கவிஞர்கள் கருத்தினை உணர்ந்து கொள்ளலாம். காப்பியம் பாடும் புலவர்களுக்குக் காப்பியத்தில் வரும் மாந்தர்கள் யாவரும் அக்காப்பியப் புலவர் பெற்ற பிள்ளைகள் போன்றவர்களே. ஆயினும், காப்பியப் புலவர்களின் உள்ளம், காப்பியத் தலைமகனின் மீதே பெரிதும் பற்றுக்கொள்ளும். இது, காப்பிய இயற்கையாக இருத்தல் காணலாம். சீவகன் காட்டுவழியே நடந்து சென்றான் என்பதனைக் குறிக்கும் இடங்கள், சீவக சிந்தாமணியில் மூன்று வருகின்றன.

"தோடேந்து பூங்கோதை வேண்டேம் கூந்தல் தொடேல் எம்மில்
பீடேந்து அரிவையரில் பெயர்கென்று ஊடு மடவார்போல
கோடேந்து குஞ்சரங்கள் தெருட்டக் கூடா பிடிநிற்கும்
காடேந்து பூஞ்சாரல் கடந்தான் காவிற் கழலானே" – 1229

"வானின் வழங்கும் வண்கை மணிசெய் ஆர மார்பில்
தேனும் வழங்கும் பைந்தார் விசயை சிறுவன் தேங்கொள்
நானம் வழங்கும் கோதையை வெய்ய வாய
கானம் வழங்கல் மேவிக் காவின் ஏகினானே" – 1412

"பையர விழுங்கப் பட்ட பசுங்கதிர் மதிய மொத்து
மெய்யெரி துயரின் மூழ்க விதிர்விதிர்த்து உருகி நையும்
மையிரு குழலி ளுள்தன் மைந்தனை வலையிற் சூழ்ந்து
கையரிக் கொண்டும் காணுள் காளையும் காலிற்
சென்ருன் " –1540

இம் மூன்று பாடல்களிலும் சீவகன், காலிற் கடந்தான், காலின் ஏகினுன், காலிற் சென்ருன் எனத் திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார். மன்னன் மகன் நடந்து செல்கின்ருனே என்ற இரக்க உணர்வு, தேவருக்கு ஏற்படுகின்றது. அதனுலேயே "காலின்" என வேண்டாச் சொற்பெய்து, அச்சொல் வாயிலாகத் தம் மனக் குறிப்பினை வெளிப்படுத்துகின்ருர்.

அரிய சொல்லாட்சிகள் சிலவற்றையும் திருத்தக்கதேவரிடம் காண்கின்ருேம். "நும்" என்னும் சொல், நீயிர் எனமுழுவதும் திரியும் என்பது இலக்கணவிதி. ஆனுல் திருத்தக்க தேவர் "நீம்" என்று ஆட்சி செய்கின்ருர்

"அன்றைப் பகலே அடியேன்வந் தடைவன் நீமே
வென்றக் களிற்ருன் உழைச்செல்வது வேண்டும் என்ருன்
1932

என்பதில் இச்சொல் வடிவினைக் காணலாம்.

"பிறவிகள்" (1595) பிறகளும் (2158) என்னும் சொற்களில் "கள்" என்பது அசையாக வந்துள்ளது. இவ்வாறு வருதல், இலக்கண அமைப்பில் புது நிலையாகும். இதுபோன்ற சொல்லாட்சிகளும் சீவகசிந்தாமணியில் வருகின்றன.

# 3

# காப்பியப் பெருமை

முன்னோர் மொழிபொருளே அன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்ற வேண்டும் என்று வழிநூலின் அமைப் பினைக் கூறுவர். வழிநூல் செய்யும் புலவர் ஒருவர், முன்னோர் நூலின் மொழி பொருளையும் மொழியையும் பொன்னே போல் எடுத்தாண்டால், அந்நூலினைக் கற்பார், இந்நூல் மரபு வழிச் செல்லும் பெற்றியது என அந்நூலினைப் பெருமையுடையதாகக் கருதிப் போற்றுவர். அத்தகைய வழிநூலினைப் பின்வந்தோரும் மதித்து அந்நூலின் பொருளினையும் மொழியினையும் தம்நூல்களில் மேற்கொண்டு போற்றினால் அந்நூல் பெருமையுடையதாய் விளங்குகின்றது என்று தெளிவாகச் சொல்லலாம். முன்னோரை மதிப்பதும் பின்னோரால் மதிக்கப் பெறுவதும் பெருமையின் இலக்கணம். திருத்தக்கதேவர், இத்தகைய பெருமைக்கு உரிய வராக இருந்ததலைப் பன்னூற் பயிற்சி உடைய புலவர்கள் அறிவர். இக்காரணத்தால், தேவர் இயற்றிய காப்பியம், பெருமை மிக்க காப்பியமாக விளங்குகின்றது. சிந்தாமணியை நோக்கினால், தமிழில் முன் தோன்றிய இலக்கியங்களை உரமாகக் கொண்டு தோன்றிய தமிழ்ப் பயிர் சிந்தாமணி என்பதும், பின் தோன்றிய இலக்கியங்களைப் படித்தால் சிந்தாமணி தாயூற்று என்பதும் வெளிப்படும். இவ்வாறு முற்சார்பும் பிற்சார்பும் கொண்டு சிந்தாமணிக்காப்பியம் பெருமை பெற்றுத் திகழ் கின்றது. இதனைப் புலப்படுத்தும் எடுத்துக் காட்டுக்கள் சில வற்றைச் சங்கத் தமிழும் திருத்தக்க தேவரும், திருக்குறளும் திருத்தக்கதேவரும், திருத்தக்கதேவரும் பின்வந்தோரும் என்னும் மூன்று தலைப்புக்களில் கூறுவேன்.

## சங்கத்தமிழும் திருத்தக்கதேவரும்

திருத்தக்கதேவர், தமக்கு முன் தோன்றிய இலக்கியங்களில் தேர்ந்த பயிற்சியுடையவர் என்பதனைச் சிந்தாமணிக் காப்பியம் நன்கு காட்டுகின்றது. புலவர் ஒருவர் தேர்ந்த புலமையாள

ராகவும், சிறந்த கவிஞராகவும் திகழ வேண்டுமாயின், முன்னே தோன்றிய இலக்கிய இலக்கணங்களை ஊன்றிப் பயின்றிருத்தல் வேண்டும். வரகவி என்று சிறப்பாகச் சொன்னாலும் அக்கவிக்கும் ஊழ்வினைத் தொடர்பால், கல்வி நலம் நிறைந்திருக்க வேண்டும். திருத்தக்கதேவர் நன்கு பயின்றவர். பொதுவாகவே பழங்காலச் சமயத்தார்கள் அனைவரும் ஆழ்ந்து கற்ற புலமையுடையவர்கள். குறிப்பாகச் சமண சமயத்தாரும், பௌத்த சமயத்தாரும் பன்னூற் புலமையும் பன்மொழிப் புலமையும் பெற்றிருந்தனர் என்பதை அவர்கள் வரலாற்றால் அறிகின்றோம். தேவரும், இதற்கு விதிவிலக்கானவர் அல்லர். சீவக சிந்தாமணியின் பல பாக்களில், பழைய இலக்கிய அடிகள், புதிய வடிவமும் வனப்பும் பெறுகின்றன.

பட்டினப்பாலையில், கடல் அலையோடு காவேரி கலப்பதை உருத்திரங்கண்ணனார், இரண்டு அழகான உவமைகளால் புலப் படுத்துகின்றார்.

மாமலை யணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு ஆறுதலை மணக்கும்

(பட்டினப்பாலை 95–97)

கரிய நிறமான மலையைச் சேர்ந்த சிவந்த மேகம் போலவும், தாயினுடைய முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும் கடல் அலையோடு காவிரி கலக்கும் என்பது, இதன் பொருளாகும். சீவகசிந்தாமணிக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியரே பத்துப் பாட்டுக்கும் உரையெழுதியவர் என்பதனை யாவரும் அறிவர். அவர், மலை தழுவிய மேகம் என்ற உவமையை விரித்து எழுதும் போது, கருமையான உயர்ந்த அலையின்மீது சிவந்த ஆற்றுநீர் பரந்ததற்கு இது உவமையாகும் என்று குறிப்பிடுகின்றார். தாய்முலை தழுவிய குழவி என்பதற்கு இஃது ஒன்றுபடுதற்கு உவமை என்று குறிப்பிடுகின்றார். எனவே, முதல் உவமை, நிறம் பற்றியது எனவும், இரண்டாவது உவமை, வினை பற்றியது எனவும் அறியலாம். இவ் அழகிய உவமைகளைத் திருத்தக்க தேவர், பல்காலும் பயின்று துய்த்திருக்க வேண்டும். எனவே, இராசமாபுரத்து மதிலைப் பாடும்போது, இவ் உவமைகள்

இரண்டனையும் மதிலுக்குப் பொருத்திக்காட்டுகின்றார். அவ்வாறு காட்டும்போது, பட்டினப்பாலையில் முதல்உவமையாக அமைந்த தனை இரண்டாவது உவமையாகவும், இரண்டாவது உவமையாக அமைந்ததனை முதல் உவமையாகவும் மாற்றுகின்றார்.

தாய்முலை தழுவிய குழவி போலவும்
மாமலை தழுவிய மஞ்சு போலவும்
ஆய்முகில் தழீஇய அசும்பருத நெற்றிய
சேய்உயர் மதில்வகை செப்பு கின்றதே ( 100 )

மதில், நீர்சுமந்த மேகத்தை அணைத்துக்கொண்டு விளங்குகின்றது. இது, குழவியை அணைத்த தாய்முலைபோலத் தோன்றுகின்றது. மேலும், மேகத்தைத் தன்னிடத்தே அணைத்துக் கொண்ட பெரிய மலைபோலவும் தோன்றுகின்றது. இங்கே, தேவர், தாய்முலை தழுவிய குழவிபோல என்ற உவமையை ஒன்றுபடுதற்குக் காட்டியுள்ளார். மேகத்தை அணைத்த பெரிய மலைபோல என்பதை உருவுவமைக்குக் காட்டியுள்ளார். பட்டினப்பாலையில் உள்ளவாறே "தாய்முலைதழுவிய குழவி போல" என்னும் அடி அமைந்திருப்பது, தேவரின் சங்க நூற்பயிற்சியைத் தெள்ளிதின் வெளிப்படுத்தும். சங்கப்பா, ஆசிரியப்பா. தேவர், இங்குப் பாடிய பாவோ கலிவிருத்தம். ஆசிரியப் பாவிற்குரிய ஈரசை நாற்சீர்கள், கலிவிருத்தத்திலும் அவ்வாறே வருவதற்கு ஏற்றன. ஆதலின் பட்டினப்பாலையின் அடியை மாற்றாமல் அவ்வாறே எடுத்தாண்டுள்ளார். ஆனால், "மாமலை அணைந்த கொண்மூப் போலவும்" என்னும் அடியை, "மாமலை தழுவிய மஞ்சு போலவும்" என்ற ஒரு சொல்லில் மட்டும் மாற்றம் செய்கின்றார். பட்டினப்பாலையில் "கொண்மூ" என இருப்பது, சிந்தாமணியில் "மஞ்சு" எனக் காணப்படுகின்றது. கொண்மூ என்னும் சொல்லுக்கு மேகம் என்பதே பொருளாயினும் மாமலையை அணைதலால் அது, செக்கர் மேகம் என்று பொருள் காண்கின்றார்-நச்சினார்க்கினியர். ஆனால் திருத்தக்கதேவர், இருவகையான மேகங்களைக் காட்டுகின்றார். தாய்முலை தழுவிய குழவி போலவும் என்னும் உவமையில் அமைந்த மேகம், நீர் சுமந்த கருமேகம். ஆதலின் மாமலை தழுவிய மேகத்தை வெண்-மேகமாக ஆசிரியர் காட்ட நினைக்கின்றார். எனவே, வெண்மேகத்திற்குரிய மஞ்சு என்னும் சொல்லினை ஆண்டுள்ளார். மேலும், மாமலை தழுவிய மஞ்சுபோலவும்

என்பதில், பிற்கால யாப்பு வளர்ச்சிக்கு ஏற்ற பொழிப்பு மோனை அமைந்திருப்பதையும் உணரலாம். சங்ககாலம், யாப்பில், மிகுதியாக இசை இனிமையை விரும்பாத காலம் என்பதனையும் தேவர் காலம், யாப்பில் சந்தநயம் கண்டு மகிழ்ந்த காலம் என்பதனையும் நினைவுகூர்ந்தால், தேவர் மாற்றிக் கொண்ட பாவண்ணம் புலப்படும்.

பட்டினப்பாலையில் அமைந்த சிறப்பான மற்றொரு பகுதி சீவக சிந்தாமணியிலும் அமைந்திருக்கின்றது. செல்வம் நிறைந்த விடுகளின் முற்றத்தைப் பட்டினப்பாலை ஆசிரியர் மிக அழகாகக்காட்டுகின்றார்.

நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்கால் புதல்வர் புரவியின்று உருட்டும்
முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும் (பட்டினப்பாலை 22–25)

மகளிர் காய்கின்ற நெல்லைத் தின்னும் கோழியைத் தம்பொன்னால் செய்த மகரக்குழையால் எறிந்து ஓட்டுகின்றார்கள். அம்மகரக் குழை, சிறுவர்கள் கையால் உருட்டி விளையாடும் சிறுதேரின் வழியை விலக்குகின்றது என்பது, இதன் கருத்தாம். கோழியை ஓட்டக் குழையை எறிந்தார்கள் என்பது, செல்வ மிகுதியைத் தான் காட்டும். தேவர், இக்கருத்தினைக் காணுகின்றார். தாம் பாடும் இராசமாபுரத்தின் செல்வவளத்தை விளக்குவதற்கு இந் நிகழ்ச்சியைப் பயன்படுத்துகின்றார்.

பொற்சிறு தேர்மிசைப்பைம்பொன் போதகம்
நற்சிறார் ஊர்தலின் நங்கைமார் விரீஇ
உற்றவர் கோழிமேல் எறிந்த ஒண்குழை
மற்றத்தேர் உருள்கொடா வளமை சான்றவே (89)

இராசமாபுரத்தில், சிறுவர்கள் பொன்னாலான சிறுதேரிலுள்ள யானையின்மேல் ஊர்ந்து செல்லுகின்றனர். அப்போது நெல்லுப் பார்த்திருக்கும் நங்கையர், கோழி மேல் எறிந்த காதணி, அத்தேர் உருளா வணணம் தடுக்கின்றது.

உருத்திரங் கண்ணனாரும் திருத்தக்க தேவரும் பாடிய இவ்வருணனை, பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். உருத்திரங் கண்ணனார், சோழநாட்டின் செல்வ வளத்தினை இவ்வாறு காட்டுகின்றார். திருத்தக்க தேவர், இராசமாபுரத்தின் செல்வ வளத்தினைச் சிறப்பிக்கின்றார். கம்பர், கோசலநாட்டைப் புகழ்ந்தாலும் சரயு நதியைச் சிறப்பித்தாலும் அவர் நெஞ்சத்தில் இடம் பெற்றவை, சோழநாடும் காவிரியுமே ஆகும். திருத்தக்கதேவர் சோழர் குலத்தைச் சேர்ந்தவர் என்ற வரலாறு இங்கு நினைத்தற்குரியது. இவர் சோழர் குலத்தைச் சேர்ந்தவராக இருத்தலால் ஏமாங்கத நாட்டைப்பாடும் போது, சோழநாட்டுப் பாட்டான பட்டினப்பாலை, அவர் மனக்கண்ணில் தோன்றிப் பாட்டாக உருவெடுத்துள்ளது. இங்குப் பட்டினப்பாலையில் எடுத்துக் காட்டிய நாட்டுவளம், நகர்வளம் கூறும் பகுதிகள், அவ்வாறே சிந்தாமணியிலும் வளம் பாடும் பகுதிகளில் அமைந்திருக்கும் ஒப்புமை, நினைந்து இன்புறத்தக்கது.

திருத்தக்கதேவர் பத்துப்பாட்டில் பயிற்சி மிக்குடையவர் என்பதனைப் பட்டினப்பாலை ஒன்றே நன்கு காட்டும். தேவர் எட்டுத் தொகையிலும் ஆழ்ந்தபுலமையுடையவர் என்பதனைப் பல பாட்டுக்கள் காட்டுகின்றன.

வரையாது வந்து ஒழுகும் தலைமகன், சிறைப்புறமாக நிற்கின்றான். அப்போது, தோழி தலைவிக்குக் கூறுவதாக, நல்லந்துவனார் ஒரு பாடல் யாத்துள்ளார். அப்பாட்டில், அத்தோழி "நாம் செய்த பழவினையை நினைக்காமல் நீ ஏன் மயங்குகிறாய். தலைவன் நம்மிடத்துச் செய்த கொடுமையை நினைத்து அவன் நாட்டுக் குன்றமும் தன் கண்ணீரை அருவியாக்கி அழுகின்றது; அதனைப் பார்" என்று தலைவிக்குத் துன்பம் தணிக்கின்றாள்.

> கண்ணீர் அருவியாக
>
> அழுமே தோழி அவர் பழமுதிர் குன்றே (நற்றிணை 88)

இவ் அடிகள், திருத்தக்கதேவரின் உள்ளத்தை ஈர்த்துள்ளன. சீவகன், தன் தோழர்களையும் காந்தருவதத்தை, குணமாலை என்னும் மனைவியர் இருவரையும் பிரிந்து செல்கின்றான். அவன் செல்வதைக் கண்டு குன்றம் அழுதது என்று தேவர் பாடுகின்றார்.

வாளுழலைப் பாய்ந்திளைய வளநா கிட்டி னமென்னுந்
தாளொழியப் போரேறு தனியே போந்த தெனவெண்ணி
நீளருவிக் கண்ணீர்வீழ்ந் தலறி வண்ணங் கரிந்துருகிக்
கோளுழுவை யன்னாற்குக் குன்றமு நின்று அழுதனவே 1226

இப்பாட்டில், சீவகன் தான் ஒருவனாகவே தனித்துச் செல்வதைக் கண்டு குன்று அழுதது என்று தேவர் குறிக்கின்றார். எனவே, சீவகன்பால் இரக்கம் கொண்டு மலை அழுதது என்பது தேவர் கருத்தாம். ஆனால் நல்லந்துவனார் தலைவிமீது இரக்கங் கொண்டு குன்று அழுததாகப் படைத்து மொழிகின்றார். மலையின்மீது தம் குறிப்புகளைப் புலவர் இருவரும் ஏற்றிக் கூறியிருக்கும் திறம் அறிந்து மகிழத்தக்கது. சங்ககாலத் தற்குறிப்பேற்றம், தேவர் பாடும் காப்பியத்தில் அமைந்து அழகு செய்கின்றது.

புலவர் ஒருவர், தமக்கு முன்தோன்றிய இலக்கியத்தை நன்கு பயின்று, அதனைத் தாம் பாடும் இலக்கியத்தில் அமைக்கும் போது பெரும்பாலும் முன்னோர் பாடிய உண்மைகளையே எடுத்தாள்வர். இது, இலக்கியத்தில் காணப்பெறும் பொது மரபு என்று கூறலாம். திருத்தக்கதேவர், முன்னைய இலக்கியங்களைத் தம் காப்பியத்தில் அமைக்கும்போது, பெரிதும் உவமையாக அமைந்த பகுதிகளையே எடுத்துச் சிறப்புச் செய்கின்றார். குறுந்தொகையில் அமைந்த இரண்டு உவமைகள், சிந்தாமணியில் உவமைகளாக வரும் பாங்கினை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

குறுந்தொகைப் புலவரில் ஒருவர், வில்லக விரலினார். இப் புலவர்பெயர், அவருக்கு அவர் கூறிய உவமையால் வந்த பெயராகும். அந்த அளவிற்கு வில்லகவிரல் என்னும் சிறப்பான உவமையை இவர் ஆண்டுள்ளார். இவ் உவமை, தேவரின் நெஞ்சத்தையும் பிணித்ததுபோலும்.

பரத்தை ஒருத்தி, தலைவி தன்னைப் பற்றிக் குறை கூறினாள் என்பது கேட்டு, அத் தலைவிக்குப் பாங்காயினார் கேட்குமாறு கூறுவதாக, வில்லக விரலினார் பாடுகின்றார். தலைவனுடன் இருக்கும்போது ஈருடம்பாகவும் அவனுடன் துயிலும்போது ஒன்றியும், அவனைப் பிரிந்து தனியே இருக்கும்போது ஒருடலாகவும் இருக்கின்றேன் என்று அப்பரத்தை கூறுகின்றாள். அவள்,

தன் வாழ்வின் மூன்று நிலைகளைச் சுட்டுகின்றாள். இவற்றில், அவனோடு துயின்றால் மிகச்செறிந்து ஒன்றியிருக்கின்றேன் என்பதனைக் கூறுவதற்கு வில்லக விரல், உவமையாக வருகின்றது. "வில்லக விரலிற் பொருந்தி" என்பது (370) குறுந்தொகைத் தொடர். வில்லைப்பிடித்த விரல்கள் ஒன்றோடொன்று மிகச் செறிவாக இருக்கும். அவ்வாறு, கவவுக்கை நெகிழாமல் அணைத்து இன்பம் பெற்றமையை அவள் உணர்த்துகின்றாள். இவ்உவமை செறிவுக்கு வந்த உவமையாகும். தேவர், இதனைச் சீவகனை வரவேற்கும் இடத்தில் அமைக்கின்றார்.

வீட்டிடந்தோறும் வில்லக விரல்போற்
பொருந்திநின்று ஒருங்குஎதிர் கொள்கென--2110

இப்பாடலுக்கு உரையெழுதும் நச்சினார்க்கினியர், "வில்லகவிரலிற் பொருந்தி என்றார் பிறரும்" என்று குறுந்தொகையை எடுத்துக் காட்டுகின்றார். தேவரின் வில்லக விரலைப் படிக்கும்போது குறுந்தொகை நினைவுக்கு வருதல் இயல்பே. இவ் ஒப்புமையை மறவாமல் காட்டிய நச்சினார்க்கினியரின் திறம் போற்றுதற்குரியது.

குறுந்தொகையில் "ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சி போல" என்று ஓர் உவமை வருகின்றது.

எழுதரு மதியம் கடற்கண் டாஅங்கு
ஒழுகுவெள் அருவி ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன் தோழி
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே -- 315

தலைவன் ஞாயிற்றைப் போன்றவன். தலைவியின் தோள்கள், நெருஞ்சி மலர்களைப் போன்றன. நெருஞ்சி மலர்கள் ஞாயிற்றை நோக்குவனபோல், தலைவியின் தோள்கள், தலைவனையே நோக்கின என்பது இதன் குறிப்பாம். இவ் உவமையைத் தேவர், கோவிந்தையார் இலம்பகத்தில் அமைக்கின்றார். சீவகன், வேடரைவென்று ஆநிரையை மீட்டு நகர்த்தெருவில்வருகின்றான். அவனைக் காண்பதற்கு மங்கையர்கள் கூடிநின்றனர். சீவகன், தேரில் செல்கின்றான். அவன் தேர் இயங்குந்தோறும் இயங்கி, அவனையே மங்கையர் நோக்குகின்றனர். இதனைக் குறிப்பிடும் தேவர், அப்பெண்களின் கண்கள், நெருஞ்சிப்பூப் போன்றன என்று பாடுகின்றார்.

"........................................
அணிமலர்த் தடங்கண் எல்லாம்
நீள்சுடர் நெறியை நோக்கும்
நிரை இதழ் நெருஞ்சிப் பூப்போல்
காளைதன் தேர்பசல் வீதி
கலந்துடன் தொக்க அன்றே (461)

இங்கே சீவகனைக் காணும் மகளிரின் கண்கள், நெருஞ்சிப்பூப் போன்றன என்பது தேவர் கருத்தாம். சங்க இலக்கியம் கூறிய உவமையே, சீவகசிந்தாமணியில் அமைந்திருந்தாலும் மரபு மாறியிருக்கும் தன்மையை மறக்க இயலாது. குறுந்தொகையில் தலைவனை நோக்கிய தோள்கள், தலைவியின் தோள்கள். சிந்தா மணியில், தலைவனை நோக்கிய கண்கள், நகர மகளிர் கண்கள். இதனால் குறுந்தொகையில் கற்பு என்னும் திண்மை நன்கு பேணப்பட்டமையையும் தேவர் காலத்தில் அம்மரபு மாறியமை யையும் உணரலாம். காலத்தின் மாற்றங்கள், இத்தகைய கருத்து மாற்றங்களை ஏற்படுத்திய போதிலும், ஒருவன் உலா வரப் பலர் கண்டார் என்பது இன்பம் தரும் இலக்கியப்போக்காக இருந்தாலும் அறம் காட்டும் இலக்கியப் போக்கு ஆகாது என்பது நினைக்க வேண்டிய ஒன்றும். இதனால், சங்க இலக்கியம் அறத்தின்பாற் கொண்ட பற்றும், பிற்கால இலக்கியங்கள் இன்பத்தை விரித்துரைப்பதில்கொண்டநாட்டமும் பெறப்படும்.

புறநானூற்றில், வான்மீகியார் பாடிய பாடல் ஒன்று காணப் படுகின்றது. இப்பாடலுக்குரிய துறை, "மனையறம் துறவறம்" என்று குறிக்கப் பெற்றுள்ளது. இத்துறை இல்லறம் துறவறங்க ளின் வேறுபாட்டைக் கூறுவதாகும். துறவறமே சிறந்தது என்பது, இப்புலவர் கருத்து.

வையமும் தவமும் தூக்கின் தவத்துக்
கையவி அனைத்தும் ஆற்றா தாகலின்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅதோர் இவள் விடப்பட் டோரே – புறம். 358

இவ்வடிகளால், உலகியலாகிய இல்லறத்தையும் தவவாழ்வாகிய துறவறத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்தால், தவத்திற்கு வையம் சிறு கடுகளவும் ஒப்பாகாது; இதனை உணர்ந்தால் திருமகள்

நீங்காமல் இருப்பாள். இதனை உணராமல் இல்வாழ்வில் பற்றுக் கொண்டால் திருமகள் நீங்குவாள் என்னும் கருத்து வற்புறுத்தப் படுகின்றது. சங்கப் புலவர் வற்புறுத்தும் இத்துறவறக் கருத்து, தேவருக்கு — துறவுபாடும் தேவருக்கு, தித்திக்கும் அமுத மாகிறது. வான்மீகியார் பாடிய துறவுக் கருத்தை வேறு எங்கும் அமைக்காமல், திருத்தக்க தேவர், முத்தி இலம்பகத்தில் அமைக்கின்றார்.

நற்றவம் பரவை ஞாலம் நாமுடன் நிறுப்பின் வையம்
அற்றமில் தவத்திற்கு என்றும் ஐயவி யனைத்தும் ஆற்றாது
இற்றென வுணர்ந்து நிற்பின் திருமகள் என்றும் நீங்காள்
பற்றொடே நிற்பின் என்றும் திருமகள் பற்றல் செல்லாள்
— 2983

வான்மீகியார்; ஐந்து வரிகளில், ஆசிரியப்பாவில் பாடிய கருத்துக் களைத் திருத்தக்க தேவர், ஆசிரிய விருத்தத்தில் பாடியுள்ளார் என்பதனைத் தவிரக் கருத்தில் சிறிதும் மாறுபாடு இல்லாமை கருதத்தக்கதாம். திருத்தக்க தேவருக்கு எவ்வளவு சங்கப் பயிற்சி இருந்தால், இவ்வளவு நுட்பமாய்ப் பாடியிருக்க முடியும்!

திருத்தக்கதேவர் புறநானூற்றில், மிகத் தேர்ந்த புலமை யாளர் என்பதற்கு வேறொரு சான்றும் கூறலாம். புறநானூற் றில், பிசிராந்தையார் பாடிய பாடல் ஒன்று, பாண்டியன் அறிவுடை நம்பிக்குச் செவியறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. இப் பாட்டில், வரி வாங்கும் முறையினைப் பிசிராந்தையார் எடுத்துக் காட்டுகின்றார். பிசிராந்தையார் கருத்துக்கள், சிறந்த அரசியல் அறம் வாய்ந்தனவாகும். இவ்வறத்தை விளங்க வைப்பதற்கு யானைக்கு உணவு கொடுக்கும் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றார். இந்த அறக்கோட்பாட்டினை அறிந்த திருத்தக்க தேவர், சீவகன் கூற்றாகச் சீவகன், தன்மகன் சச்சந்தனுக்கு அரசுரிமையைக் கொடுக்கும் இடத்தில் அமைக் கின்றார்.

வாய்ப்படும் கேடும் இன்றாம்
வரிசையில் அரிந்து நாளும்

காய்த்த்நெல் கவளம் தீற்றில்
களிறுதான் கழனி மேயின்
வாய்ப்படல் இன்றிப் பொன்றும்
வல்லனாய் மன்னன் கொள்ளின்
நீத்தநீர் ஞாலம் எல்லாம்
நிதிநின்று சுரக்கும் அன்றே – 2907

இவ் விருத்தப்பாவைப் படிக்கும்போது, திருத்தக்க தேவரின் அரசியல் அறம் கண்டு வியக்கின்ற நாம், இக் கருத்தினை நல்கியது, புறப்பாடல் என்று அறியும்போது, பெருமிதம் அடைகின்றோம்.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை இல்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதவ எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே – (புறம். 184)

பிசிராந்தையார், பதினோரு அடிகளில் விரித்துச் சொல்லிய கருத்துக்கள், தேவரின் வாக்கில், நான்கு அடிகளில் அமைகின்றன. சிந்தாமணியைத் துறவு தந்த காப்பியம் என்று சொல்வதைக் காட்டிலும் சங்கம் தந்த காப்பியம் என்று சொல்லுதல் பொருந்தும் என்று கூறுமளவிற்குச் சங்கத் தமிழ், சிந்தாமணியில் அமைந்து சிறப்புச் செய்கின்றது. முன்னோர் பாடிய இலக்கியங்களைப் பின்னோர் எடுத்தாளுதல் இயல்பாக இருந்தாலும், கருத்தறிந்து ஏற்ற இடத்தில் எடுத்தாண்ட தேவரின் புலமை பாராட்டுக்கு உரியதாகும்.

## திருக்குறளும் திருத்தக்கதேவரும்

திருக்குறள், ஊருணி போலவும் நடுவூருள் பழுத்த நன்மரம் போலவும், தமிழ்ப் புலவர்களுக்குப் பயன் தரும் வள்ளல் இலக்கியம். திருக்குறளை அறியாதவர், தமிழ் இலக்கிய மரபினை அறியாதவர். ஒருவர் ஒரு நூல் இயற்றுகின்றார் என்றால், அந்நூல், திருக்குறள் வழிச் செல்கின்றதா? திருக்குறளின் சொல்லும் பொருளும் பெற அமைந்துள்ளதா? என நோக்கி, அந் நூலின் பெருமையை மதித்தல், அன்றும் இன்றும் இருந்து வரும் வழக்காகும். "பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" என, மணிமேகலையில் தெய்வம் கூறியதாகச் சீத்தலைச் சாத்தனாரும் பாடியிருப்பது நோக்கத் தக்கது. கற்பினை விளக்க வரும் சீத்தலைச் சாத்தனார், திருக்குறள் கூறும் கற்பினை எடுத்துக் காட்டுகின்றார். இதனால், திருக்குறள், சான்று நூலாக விளங்கும் உண்மையை அறியலாம். திருக்குறளினை எந்த அளவிற்கு நுட்பமும் திட்பமும் சுருக்கமும் விரிவும் பெற ஒருவர் எடுத்தாள்கின்றாரோ, அவ்வளவிற்கு அவர் பெருமையுடையவர். இம்முறையில், திருத்தக்க தேவர்,பெருமை மிக்கவராகத் திகழ்கின்றார். அவர் படைத்த சிந்தாமணிக் காப்பியம், பெருமை மிக்க காப்பியமாக விளங்குகின்றது

திருக்குறள் பாக்கள் பலவற்றிற்கு விளக்கவுரை போலவும், திருத்தக்கதேவர், பாடல்கள் பலவற்றையும் பாடியுள்ளார். இதனால், திருத்தக்க தேவரைக் குறளின் விளக்க உரையாசிரியர் என்று கூறலாம்.

> "இடுக்கண் வருங்கால் நகுக அதனை
> அடுத்தூர்வது அஃதொப்பது இல்" (621)

என்பது, இடுக்கண் அழியாமை என்னும் அதிகாரத்தில் வரும் திருக்குறள் ஆகும். "ஒருவன், விதியினால் தனக்கு இடுக்கண் வரும் போது, அதற்கு அழியாமல் மனம் மகிழ்க. அவ் விடுக்கணை அழிக்க வல்லது, அம் மகிழ்ச்சி போலப் பிறிது இல்லை" என்பது, இதன் பொருள். இடுக்கண் வருங்கால் என்பதற்கு, இவ்விடுக்கண் விதியால் வருவது என்றுபரிமேலழகர் உரை கூறியுள்ளார். இதுவே பொருத்தம் என்பதனைச் சிந்தா மணிப்பாடல் தெளிவுபடுத்துகின்றது.

சீதத்தன் என்பான், பொருள் ஈட்டிக்கொண்டு, தன் நாட்டிற்குக் கலத்தில் திரும்புகின்றான். அப்போது, கடலில் ஏற்பட்ட காற்றும், வானத்து இடியும் கலத்தில் இருந்தவர்களைக் கலக்கின. இங்கு ஏற்பட்ட இடுக்கண், விதியினால் ஏற்பட்ட இடுக்கண் ஆதலினால், இவ்விடுக்கண் கண்ட சீதத்தன் கலத்தில் இருந்தவர்களுக்கு ஆறுதல் கூறுகின்றான்.

> இடுக்கண் வந் துற்ற காலை யெரிகின்ற விளக்குப் போல
> நடுக்கமொன் றானு மின்றி நகுகதாம் நக்க போழ்தவ்
> விடுக்கணை யரியு மெஃகாம் இருந்தழுது யாவர் உய்ந்தார்
> வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறுங்க ளன்றே
> (509)

என்பது, சிந்தாமணிப் பாடல். இடுக்கண் வருங்கால் நகுக என்று மட்டும் வள்ளுவர் கூறினார். இடுக்கண் வரும்போது மகிழ்க என்றால் எவ்வாறு மகிழ்வது? இடுக்கணுக்கு மனம் நடுங்காமல் மகிழ்தல் வேண்டும். எனவேதான் திருத்தக்கதேவர் எரிகின்ற விளக்குப் போல நடுக்கம் ஒன்றானும் இன்றி மகிழ்க என்று விளக்கினார். வள்ளுவனார் அவ்வாறு மகிழும் மகிழ்ச்சி போல இடுக்கணை அழிக்கவல்லது மற்றொன்று இல்லை என்றும் கூறினார். இடுக்கணை அழிக்க வல்லது மகிழ்ச்சியாயின், அஃது ஓர் கருவியாதல் வேண்டும். எனவே, திருத்தக்கதேவர், இடுக்கணை அரியும் எஃகாம் என்று விரித்துரைத்தார். இவ்வாறு, குறளின் விரிவுரையாய் அமைந்த இடங்கள், திருக்குறளுக்குத் தேவர் பொருள் கொண்ட முறையைப் புலப்படுத்தும். இம்முறையில் சிந்தாமணிக் காப்பியம், காப்பியமாக மட்டும் நில்லாமல், ஓர் அறநூலின் விளக்க நூலாகவும் அமைந்திருக்கும் பெருமை பெற்றுள்ளது என்று குறிப்பிடலாம்.

கல்வியின் பெருமையைப் பற்றிச் சீவகன் கூறுவதாகத் திருத்தக்க தேவர், ஒரு பாடல் பாடியுள்ளார்.

> "கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின்
> கண்ணுமாகும்
> மெய்ப்பொருள் விளைக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர்
> துணையுமாகும்

பொய்ப்பொருள் பிறகள் பொன்றும் புகழுமாந் துணையியாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவது என்னை யென்றான் (1595)

இப்பாட்டினால், "கல்வியைக் கைப்பொருள் கொடுத்தும்; கற்க, அவ்வாறு கற்றால் கற்றபின் ஞானக்கண் உண்டாகும். அது, மெய்ப்பொருளைத் தரும்; துன்பத்திற்குத் துணையாகும்; ஆதலின், கல்வி ஒழிந்த பொருள்கள் பொருள்கள் அல்ல. இக் கல்விப் பொருளால் மீண்டும் பொருள்கள் உண்டாகும். புகழும் ஏற்படும்" என்னும் கருத்துக்கள் பெறப்படும். இவ் ஒரு பாட்டில் திருக்குறள் கருத்துக்கள் பல, செறிந்திருத்தல் காணலாம்.

"கற்றபின் கண்ணுமாகும்" என்பது,

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு (392)

என்னும் திருக்குறளில், "கண் என்ப" என்னும் கருத்தினைத் தழுவியதாம். மேலும் கண்ணும் ஆகும் என்பதற்குப் பொருள் கூறும் நச்சினார்க்கினியர், ஞானக்கண்ணும் உண்டாகும் என்று உரை எழுதுகின்றார். இங்கே.

கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர் (393)

என்னும் திருக்குறள் கருத்தினைத் தேவர் நயம்பெற அமைத்துள்ளார் என்பதனை அறியலாம். கண் என்பது, முகத்திலிருக்கும் ஊனக்கண்ணினை இங்கு உணர்த்தாது; எனவே கண்ணுடையர் என்பவர் கற்றோர் என்று திருவள்ளுவனார் கூறியதும், கண்ணும் ஆகும் என்று திருத்தக்கதேவர் கூறியதும் ஞானக்கண்ணினையே ஆகும். இந் நுண்மையினைத் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகரும், சிந்தாமணி உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் நன்கு உணர்ந்து வெளிப்படுத்துகின்றனர்.

"தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் உடைமையின், கற்றாரைக் கண்ணுடையர் என்பவர்" என்று கூறினார் எனப் பரிமேலழகர்

எழுதுவர். நச்சினார்க்கினியர், சிந்தாமணி உரையில் ''ஞானக் கண்ணும்" எனப் பொருள் கூறுவர். எனவே, கண்ணும் ஆகும் என்னும் சீவக சிந்தாமணித் தொடரில் இரண்டு குறட்பாக்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன என்று கூறலாம்.

திருத்தக்க தேவர், கல்வியை, நெஞ்சின் மெலிவிற்கோர் துணையும் ஆகும் என்பர். மனத்துன்பத்திற்குக் கல்வி துணை யாகும் என்பது, இதன் கருத்தாம். இக் கருத்தினைத் திருவள்ளுவனார், கல்வி என்னும் அதிகாரத்தில் கூறுவிட்டாலும், கல்வியுடன் தொடர்புடைய கேள்வி என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை (414)
இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல் (415)

என்னும் திருக்குறள் கருத்துக்களைப் பின்பற்றியே துன்பத் திற்குத் துணையாகும் என்று திருத்தக்கதேவர் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

திருத்தக்கதேவர், கல்வியே செல்வப்பொருளாம் மற்றை யவை பொய்ப்பொருள் என்னும் கருத்தில், ''பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் " என்று கூறுவர்.

இது, '' கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" (400)

என்னும் திருக்குறள் கருத்தைப் பின்பற்றியது என்பது தெளிவாம்.

சிந்தாமணியில் அமைந்த மற்றொரு பாடலிலும் திருக்குறள் பலவற்றின் கருத்துக்கள் அடங்கியுள்ளன.

செய்கபொருள் யாரும், செறுவாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லைஇருந் தேஉயிரும் உண்ணும்
ஐயமில்லை, இன்பம்அற னோடுவையும் ஆக்கும்
பொய்யில் பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே (497)

என்பது திருத்தக்கதேவர், பொருள்பற்றிக் கூறும் கருத்துரையாகும். இப்பாட்டில்,

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகு அதனிற் கூரியது இல் (759)

என்னும் திருக்குறள், பெரும்பாலும் சொல்லாலும் பொருளாலும் இடம் பெற்றிருத்தல் காணலாம்.

பொருள், இன்பத்தையும் அறத்தையும் உண்டாக்கும் என்பதனை "இன்பம் அறனோடு அவையும் ஆக்கும்" என்பர் திருத்தக்கதேவர். இக்கருத்து, திருவள்ளுவனரால்,

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு (760)

என்னும் திருக்குறளில் கூறப்பெற்ற கருத்தாகும். திருத்தக்கதேவர், இன்பம் அறனோடு அவையும் ஆக்கும் என்பதில், பொருள், இன்பத்தினையும் அறத்தினையும் உண்டாக்கும் என, இன்பத்தினை முதலில் கூறி, அறத்தினைப் பின்னே கூறியிருப்பது நோக்கத்தக்கது. திருத்தக்கதேவர், சமணர். அறத்தினை வலியுறுத்துவதே அவருடைய முதன்மை நோக்கம் ஆகும். ஆயினும், பொருளால் பெறக்கூடியனவற்றில், இன்பத்தினையே முதலில் கூறியுள்ளார். இதனால், திருத்தக்கதேவர் சமணராயினும் உலகியல்பு உணர்ந்தவர் என்பதனை அறியலாம். தொல்காப்பியர், "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடுபுணர்ந்த ஐந்திணை" என்பர். இம்முறை வைப்பிற்குக் காரணம் கூறும் இளம்பூரணர், இன்பம் காரணமாகப் பொருளீட்டலும், பொருள் காரணமாக அறம் செய்தலும் நடைபெறும் ஆதலால், இவ்வாறு கூறப்பெற்றது என்பர். எனவே பொருள், இன்பத்திற்கே முதலில் துணையாவது என்பதும், அதன்பின்னரே, அப்பொருள் அறத்திற்குத் துணையாகும் என்பதும் பெறப்படும். தொல்காப்பியரின் இக்கருத்தையும் உணர்ந்த திருத்தக்கதேவர், "எண் பொருள் ஏனையிரண்டும் ஒருங்கு" என்னும் குறளைத்தம் பாட்டில் அமைக்கும்போது, இன்பம் "அறனோடு அவையும் ஆக்கும்" என, "இரண்டு" என்று திருவள்ளுவனர் கூறியதனை விரித்துக் கூறுகின்றார்.

"பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிற பொருளே" என்பது

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்' (751)

என்னும் திருக்குறளை அடியொற்றியது.

இவ்வாறு, ஒருபாடலில், திருக்குறள் கருத்துக்கள் பல அமையுமாறு, திருத்தக்க தேவர், பல பாடல்கள் பாடியிருப்பதை நோக்கின், திருத்தக்கதேவரின் திருக்குறள் புலமை, நன்கு வெளிப்படும்.

திருக்குறளில், நட்பு என்னும் பொருள் பற்றிப் பதினேழு அதிகாரங்கள் உள்ளன. எனவே, சிலர், இப் பதினேழு அதிகாரங்களையும் நோக்கி, இவற்றை நட்பியல் என்று சிறப்பித்துக் கூறுவர். இதனால், நட்பின் இன்றியமையாமை பெறப்படும். நட்பு என்பது எல்லாருக்கும் உரியது ஆயினும், அரசனுக்கு மிகமிகச் சிறப்பானது. ஞாலம் காக்கும் காவலன், நட்பு ஆராய்ந்து கொள்ளும் ஆற்றல் பெற்றவனாகவும், இருத்தல் வேண்டும். திருக்குறளில், கூடா நட்பு என்னும் அதிகாரத்தில்

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னர்
அழுதகண்ணீரும் அனைத்து (822)

என, ஒரு குறள் உள்ளது. "தாம் நட்புடையார்போல் வரும் பகைவருடைய தொழுத கையின், அகத்தும் படைக்கலம்மறைந்திருக்கும். அப் பகைவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருத்தற்கு இடனாகும்" என்பது, இதன் பொருளாம். இதனால், பகைவர்கள், தம் தளர்ச்சியைக் காட்டித் தொழுதாலும் அழுதாலும் அப்புறச்செயல்கள் கண்டு, அவர்களை மதிப்பிடுதல் கூடாது. அவர்களின் குறிப்பறிந்து செயல்படவேண்டும். இத் திருக்குறள், கூடாநட்பு என்னும் அதிகாரத்தில் அமைந்தது ஆகும். கூடா நட்பு என்பது, பகைமையால், மனத்தில் நட்பில்லாமல் இருந்துகொண்டே தமக்குத் தீங்கு செய்ய வாய்ப்பு வரும் துணையும் புறத்தே, சொல் செயல்களால்கூடி ஒழுகும் நட்பாகும். இக்கூடா நட்புக் குறள், திருத்தக்கதேவர் எடுத்துக்கொண்ட கதை அமைப்பிற்குப் பெரிதும் பொருத்தமான குறள் ஆகும். சச்சந்தன், கட்டியங்காரனை நம்பி அழிந்த செயல், கூடாநட்பில்

விளைந்த செயலே. ஆனால் சச்சந்தனுக்கும் கட்டியங்காரனுக்கும் உறவும் பகையும் அமையும் நாமகள் இலம்பகத்தில், இத் திருக் குறள் கருத்தினை, திருத்தக்கதேவர், அமைக்கவில்லை. அங்கு அமைப்பதில் பயனும் இல்லை. ஏனெனில், கட்டியங்காரனிடம் அரசபாரம் முழுமையும் கொடுத்து நாட்டினைக் காக்க என்று சச்சந்தன் கூறியபோது, நிமித்திகன் என்னும் அமைச்சன், "நீ ஒருவன்மேல் கொற்றம் வைப்பின் நிலம் திருநீங்கும்" என்று உரைத்தான். ஆனால், சச்சந்தன், "கட்டியங்காரன் எனக்கு உயிரெனப் பட்டான்; என்னலால் பிறரை இல்லான்; எனக்காக முன்பு போர் பல வென்றான்; ஆதலால், யான் அவனுக்குச் செய் வன செய்தேன்: அவன் எனக்குச்செய்வனவற்றைச்செய்யட்டும்; நீ சிறிதும் இன்னாதனவற்றைக் கூறவேண்டாம்" என்று கூறி நிமித்திகன் என்னும் அமைச்சனை அடக்கிவிட்டான். ஆதலால், சச் சந்தனுக்குக் கூடா நட்பினை எடுத்துக்கூறுவதில் சிறிதும் பயன் இல்லை. ஆனால், கூடாநட்பால் சச்சந்தன் அழிந்தான் என்ற கதை, திருத்தக்கதேவரின் நெஞ்சினைவிட்டு நீங்கவில்லை. எனவே, சச்சந்தனின் மகனான சீவகனுக்கு இவ் அறிவுரையைக் கூற எண்ணிய திருத்தக்க தேவர், நந்தட்டன், சீவகனை, நன்கு காக்க வேண்டும் என்று பதுமுகனுக்குக் கூறும் இடத்தில், இத் திருக்குறள் கருத்தினை அமைக்கின்றார்.

தொழுததங் கையி னுள்ளும் துறுமுடி யகத்துஞ் சோர
அழுதகண் ணீரி னுள்ளும் அணிகலத் தகத்தும் ஆய்ந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்றது
ஒழிகயார் கண்ணுந் தேற்றந் தெளிகுற்றார் விளிகுற்றாரே
(1891)

திருவள்ளுவர், தொழுத கையிலும் அழுத கண்ணீரிலும் படை ஒடுங்கும் என்றார். திருத்தக்கதேவர், இவ்விரண்டுடன் மயிர் நெருங்கிய முடியிலும், அணிகலன்களிலும் படை ஒடுங் கும் என்று மேலும் இரண்டு இடங்களைச் சேர்த்துக் கூறு கின்றார். இப்பாட்டிற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர், கண் ணீரில் எவ்வாறு படை ஒடுங்கும் என்பதனை விளக்கும்போது, "ஒன்னார் அழுதகண்ணீரும் அனைத்து என்றார் தேவரும்" என்ற திருக்குறளை எடுத்துக்காட்டுகின்றார். மேலும் இச்சிந்தாமணிப் பாட்டிற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர், இத்திருக்குறளி னையும், இத்திருக்குறள் அமைந்த அதிகாரத்தையும் மனத் திற்கொண்டே உரை எழுதுகின்றார். சிந்தாமணியில் வரும்

"கன் அரிந்து" என்னும் சொற்களுக்கு, "கூடா நட்புடை யோரைத் தம்மிடத்துநின்று நீக்கி" என்று எழுதுதல் திருக்குறள் அதிகாரத்தை அடியொற்றியே ஆகும்.

திருத்தக்க தேவர், திருக்குறள் கருத்தினை எடுத்தாளும் போது கதை அமைப்பிற்கு ஏற்ப ஆளுகின்ற திறத்தினை, நோக்கினுல், அவருக்குத் திருக்குறளில் உள்ள பயிற்சி நன்கு வெளிப்படும்.

## திருத்தக்கத்தேவரும் பின்வந்தோரும்

காப்பியப்புலவர்களில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத பெரும் புலவராக விளங்குபவர் கம்பர். கம்பரின் பெருங்காப்பியத்திற்கு யாப்பினுலும் கருத்திலைும் உரம்தந்த கவிஞர் திருத்தக்க தேவர். திருத்தக்க தேவரின் காப்பிய மரபுகளும் கம்பரின் காப்பிய மரபுகளும் ஒப்பிட்டு ஆராயத்தக்கன.

தமிழுக்குக் "கதி" யாவார் இருவர் என்பர். ஒருவர் கம்பர். மற்றொருவர் திருவள்ளுவர். இங்கே "க" என்னும் எழுத்து கம்பரையும், "தி" என்னும் எழுத்து திருவள்ளுவரையும் குறிக்கும். சிலர், "கதி" யாவார் கம்பரும் திருத்தக்கதேவரும் என்று கூறலாம் என்பர். இவ்இருபுலவர்களும் தமிழுக்கு வளம் சேர்ந்தவர்கள். திருத்தக்கதேவரின் கருத்துக்கள்,கம்பர்பாடலில் நயம் பெறுகின்றன. மெருகு பெறுகின்றன.

நாட்டு வளத்தில், மழை வளம் பாடும் திருத்தக்க தேவர் மலைகளின் உச்சியில், மழைத்தாரைகள் வீழ்வதை அழகாகக் காட்டுகின்ருர்.

> "தேனிரைத்துயர் மொய்வரைச் சென்னியில்
> மேனிரைத்து விசும்புற வெள்ளிவெண்
> கோனிரைத்தன போற்கொழுந் தாரைகள்
> வானிரைத்து மணந்து சொரிந்தவே (33)

மேகங்கள், அடுக்கடுக்காகக் கூடின. அம்மேகங்கள், தேன் அடை நிறைந்து உயர்ந்த மலைகளின் உச்சியில்,வானிலிருந்து வெண்மையான வெள்ளிக் கம்பிகளை நிறைத்தாற் போல நீர்த் தாரைகளைச் சொரிந்தன என்று திருத்தக்க தேவர் கூறியுள்ளார். மழைநீர் சொரிதல், வெள்ளிக் கம்பிகளை வீழ்த்தியதுபோல் இருந்தது என்பது, இப் பாட்டில் அமைந்த உவமையும் நயமும்

ஆகும், இப் பாடலில் அமைந்த உவமையையும் இப்பாட்டின் போக்கையும் அறிந்த கம்பர், தம் காப்பியத்தில், ஆற்றுப் படலத்தில்,

'புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ள வெலாம்உவந் தீயும் அவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே".

என்று பாடியுள்ளார். "வெள்ளி வெண்கோல் நிரைத்தனபோல் கொழுந்தாரைகள்" என்னும் சிந்தாமணியின் சொற்கள், கம்பர் வாக்கில், ''வெள்ளி வீழிடை வீழ்த்தென" என அமைந்துள்ளது. ஆயினும் கம்பர், திருத்தக்கதேவரின் கருத்தினை அழகுபடுத்துகின்றார். பெரும் புலவர்கள், முன்னோர் பாடிய கருத்துக்களை நயம் கருதி எடுத்தாளும்போது, அவ்வாறே எடுத்தாளமாட்டார்கள். தம் புலமைதோன்ற அழகுற அமைத்துப் பாடுவார்கள். மலையில் வெள்ளிக் கோல்கள் சொரிந்தன என்றே தேவர் கூறினர். கம்பரோ மலையில் வெள்ளிக்கோல் சொரிவானேன் என எண்ணி, அம்மலையைப் பொன்மலை என்று குறிப்பிடுகின்றார். பொன்மலையாவது, இங்கே இமயமலை. எனவே, பொன்னுலகான வானுலகம், பொன்மலையான இமயமலை, மண்ணுலகில் இருத்தல் தகாது என்று கருதி, அம் மலையைப் பிணித்துக்கொள்வதற்காக, வெள்ளிக் கோல்களை வீழ்த்தின என்று பொருத்தம் காட்டுகின்றார் கம்பர்.

திருத்தக்கதேவர், உழவர்கள் வயலில் களையெடுக்கும் காட்சி ஒன்றினைக் கற்பனையுடன் காட்டுகின்றார். அவ் உழவர்கள் வயலில் களைபறிக்கின்றனர். அப்போது, குவளையையும் தாமரையையும் அவர்கள் களை என்று பறிக்கவில்லை. ஏனைய களைகளையெலலாம் பறித்துவிட்டனர். அவைகளை ஏன் பறிக்காது போயினர். குவளையும் தாமரையும் மலர்கள் என்பதற்காகவா பறிக்காது விட்டனர். மலர்கள் ஆயினும் அவைகள் களைகள் தாமே. இங்குத்தான் திருத்தக்கதேவர். தம் கற்பனைத்திறத்தைப் பயன்படுத்திப் பாடுகின்றார், குவளைமலர்கள், தம் காதலியர் கண்ணைப்போல் இருந்தனவாம். தாமரைமலர்கள், அக்காதலியர் முகம்போல் இருந்தனவாம். எனவே குவளை மலர்களையும்

தாமரை மலர்களையும் கண்ட அவ் உழவர்களுக்குத் தம் காதலியர்களின் நினைவு தோன்ற, அந் நினைவால் அக்களைகளைப் பறிக்காது விட்டனர். இதனைத் திருத்தக்கதேவர்,

கண்ணெனக் குவளையும் கட்டல் ஓம்பினார்
வண்ணவாள் முகமென மரையின் உள்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி இட்டனர்
தண்வயல் உழவர்தம் தன்மை இன்னதே (51)

என்று பாடியுள்ளார். திருத்தக்க தேவர் பாடிய இப்பாட்டின் கருத்தை உணர்ந்து இக் கருத்தினை மேலும் விரித்து, அதன் வாயிலாக ஓர் அறத்தினையும் கம்பர் காட்டுகின்றார்.

"பண்கள்வாய் மிழற்றும் இன்சொல்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வாய் ஒக்கும்
களையலால் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர்
களைகலா துலவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியர் பெற்றால்"

என்று கம்பர் கூறுகின்றார். திருத்தக்கதேவர், குவளையையும் தாமரையையும் கூறி, அவை, பெண்களின் கண்ணும் முகமும் போல இருந்தன என்று விளக்குவர். ஆனால் கம்பர், உழத்தியர் களின் கண், கை, கால், முகம், வாய் போலக் களைகள் இருந்தன என்று உவமையை மட்டும் கூறி, உவமிக்கப் படும் பொருளைக் கூருமல் களை என்று மட்டும் குறிப்பிடுவர். எனவே கம்பரின் நோக்கில், அவ் வயல்களில், குவளை, தாமரை, ஆம்பல் என்பன பூத்திருந்தன என்பது பெறப்படும். குவளைமலர்கள் கண்ணையும் தாமரை மலர்கள், கை, கால், முகம் ஆகியவற்றையும், ஆம்பல் மலர்கள், வாயையும் நினைப்பூட்டின. அவ்உழவர்கள், கட்குடித்தமையால் மயங்கியும் இருந்தனர்; எனவே, மலர்கள் என்று தெரிந்திருந்தாலும் கள் மயக்கம், அவர்களை மாற்றிவிட்டது. சிறியவர்கள், காமவயப்பட்டுப் பெண்கள்பால் நேயம் வைத்தால் பிழைக்க முடியுமா? எனக் கம்பர், திருத்தக்க தேவரின் கருத்தினைச் சுவை மிக அமைத்துக் காட்டுவர். இதனால்,

திருத்தக்கதேவரின் கருத்துக்கள், கம்பர் போன்ற பெருங் கவிகளுக்கும் அடிப்படை உணர்வுகள் தந்தன என்று கூறலாம். திருத்தக்க தேவரின் கருத்துக்கள், கம்பரால் மேலும் சுவை பெறுகின்றன என்றால், அது திருத்தக்க தேவருக்குப் பெருமையே.

திருத்தக்க தேவரின் கவிதை வளம், கம்பர் போன்ற பெரும் புலவர்களை ஆட்கொண்டுள்ளது. சேக்கிழாரரையும், ஈர்த்து உள்ளது. சேக்கிழார், பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியவர்; காதல் பாடும் இடத்தும் காமச்சுவை தோன்றாமல் அருள்பெருகப் பாடியவர். இக் கவிஞர் பெருமானும் மணநூல் என்று போற்றப் பெறும் சீவகசிந்தாமணியில் ஈடுபட்டுள்ளார்.

சீவகனைக் கண்ட தேசிகப்பாவை என்பவள், அயர்வுற்று நின்றாள். மயிலை ஊர்தியாக உடைய முருகப் பெருமானோ? சுறவுக் கொடியை உயர்த்திய காமனோ? என்று அறிவு கலங்கினாள்.

"கருஞ்சிறைப் பறவை ஊர்திக் காமரு காளை தான்கொல்
இருஞ்சுறவு உயர்த்த தோன்றல் ஏத்தரும் குருசில் தான் கொல்
அரும்பெறல் குமரன் என்றுங்கு அறிவயர் வுற்று நின்றாள்
திருந்திழை அணங்கு மென்றோள் தேசிகப் பாவை யன்னாள்—1261

இப்பாடல், சேக்கிழார் மனத்தைக் கவர்ந்தமையால், சுந்தரரைக் கண்ட பரவையார் கூற்றில் இப்பாடற் கருத்தினை அமைக்கின்றார்:

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ? பெருகொளி யால்
தன்னேரில் மாரனோ? தார்மார்பின் விஞ்சையனோ?
மின்னேர்செஞ் சடைஅண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ?
என்னே? என் மனம்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்?"—(144)

என்பது சேக்கிழார் வாக்கு. திருத்தக்கதேவர், முருகனோ? காமனோ? என இருவரை மட்டும் கூறச் சேக்கிழார்,

விஞ்சையனையும் சேர்த்துள்ளார். சிந்தாமணி, சமணச் சார்பு உடையது; அதனைப் படித்தல் கூடாது என அரசனை வலியுறுத்திய சேக்கிழாரே ஈடுபட்டார் எனின், அது திருத்தக்க தேவரின் கவிநலத்தைத்தான் காட்டும்.

"முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால் தன்னேரில் மாரனோ தார் மார்பின் விஞ்சையனோ" என்னும் பெரிய புராணத்தில், பெருகொளியால் என்பதனை ஆற்றொழுக்காகக் கொண்டு தன்னேரில் மாரனோ என்பதனோடு சேர்த்தால் பொருள் சிறவாது. அதனை முன்னே கூட்டிப் பெருகு ஒளியால் முன்னே வந்து எதிர்தோன்றும் முருகனோ என்று கொண்டால், பொருள் மிகவும் சிறக்கும். திருமுருகாற்றுப் படை யில் முருகப் பெருமானைப் பற்றிக் கூறும்போது "பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு, ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி" என்று குறிப்பிட்டிருப்பது, இங்கு நினைக்கத்தக்கது. இவ்வாறு உரை கொள்வதற்குச் சீவகசிந்தாமணிச் செய்யுள் ஒன்றில் உள்ள "மின்னின் நீள் கடம்பின் நெடுவேள்கொலோ" (1948) என்ற பகுதி வழிகாட்டுகின்றது. மின்னின் என்பதற்கு மேனியின் ஒளியினால் என்பது பொருள். மின் என்னும் இச்சொல், ஒளியினைக் குறிக்கும் பிற சொற்களைக் காட்டிலும் தெய்வத் திருமேனியின் ஒளி என நம்மை நினைக்கச் செய்யும் பொருட் சிறப்புடையது.

திருத்தக்கதேவர் சமணராக இருப்பினும், முருகப் பெருமானைப்பற்றிப் பல இடங்களில் கூறியுள்ளார். இத்தகைய இடங்கள் எல்லாம் முருகப்பெருமானின் ஆற்றலைக் காட்டுவன வாக உள்ளன.

### உரைத்திறன்

தமிழ் மொழியில் உள்ள ஐம்பெருங்காப்பியங்களில், பழைய உரையாசிரியர்களால் உரைவரையப் பெற்ற காப்பியங்கள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி என்னும் இரண்டே ஆகும். சிலப்பதிகாரத்திற்கு அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் உரைகண்டுள்ளனர். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர், உரை வரைந்துள்ளார். எனவே, இம் மூவரையும்

காப்பிய உரையாசிரியர்கள் என்று கூறலாம். இம்மூவரில், நச்சினார்க்கினியர், காப்பிய உரையாசிரியராக மட்டுமில்லாமல், சங்க இலக்கிய உரையாசிரியராகவும், தொல்காப்பிய உரை ஆசிரியராகவும் திகழ்கின்றார். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகையின் இறுதி இருபது பாடல்கள், சிந்தாமணி ஆகியவற்றிற்கு உரை வரைந்த பெரும்புலவர் இவர். "நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்" என்று இவரைப் புலவர்கள் பாராட்டினர். "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்றும் போற்றினர். சிவபெருமானுக்கு உரிய நச்சினார்க்கினியன் என்னும் பெயரைக் கொண்ட இவர், மதுரையில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் என்று அறிகின்றோம். இவருடைய இலக்கணப் புலமையும் இலக்கியப் புலமையும் அளவிடற்கு அரியன.

காப்பிய உரையாசிரியர் என்ற முறையில், இவர், பெரும் புகழுக்கு உரியவர். காப்பியம்பாடிப் பெருமை பெற்ற திருத்தக்க தேவருக்கு, இவர், உரையாசிரியராக வாய்த்தமையால், திருத்தக்க தேவரின் புகழ் மிகுந்தது எனலாம். திருக்குறளின் பெருமை பரிமேலழகரால் மேலும் மிகுந்தது என்று கூறுவது போலச் சிந்தாமணியின் பெருமை, நச்சினார்க்கினியரால் மேலும் மிகுந்தது என்று கூறலாம்.

பத்துப்பாட்டில், உரைச்சிறப்புப் பாயிரம் ஒன்று காணப் பெறுகின்றது. இப்பாயிரத்தில், சீவகசிந்தாமணியின் உரைச் சிறப்பை,

> "திருத்தகு முனிவன் கருத்துஇது என்னப்
> பருப்பொருள் கடிந்து பொருள்தொடர் படுத்தும்
> வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்"

என்னும் அடிகள் காட்டுகின்றன. திருத்தக்க தேவரின் கருத்து இது என்று காட்டினார். பொருளைத் தொடர்புபடுத்தி எழுதினார்; வினைச்சொற்களை முடித்துக்காட்டி உரைவரைந்தார் என்பன, இப்பாயிர அடிகளால் அறியப்படும் சிறப்புக்கள். "புனையுரை உரைத்தும்"என்பதனால், அழகிய உரைதந்தார் என்னும் கருத்து வெளிப்படும். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரைவரைந்த

திறம், எத்தகையது என்பதனை, மேற்காட்டிய உரைச்சிறப்புப் பாயிர அடிகள் வெளிப்படுத்தியிருப்பது, முற்றிலும் உண்மை ஆகும்.

நச்சினார்க்கினியர், சிந்தாமணிக் காப்பியத்தில் தோய்ந்து தோய்ந்து உரையெழுதியிருக்கின்றார். நச்சினார்க்கினியரைப்பற்றிக் கூறும் செவிவழிச்செய்தி, இக்கருத்தை வெளிப்படுத்தும். சமணக் காப்பியமாகிய சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் உரை யெழுதியவுடன், அவர், அக்காலத்தில் புகழ்பெற்ற சமணப் புலவர்கள் சிலரிடம் காட்டினார். அவர்கள், மற்ற பகுதிகள் போலத் தங்கள் சமயக்கொள்கைகள், முறையறிந்து எழுதப் படவில்லை என்றுகூறி அவ்வுரையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எனவே, நச்சினார்க்கினியர், ஆருகதநூல்கள் பலவற்றையும் வல்லாரிடம் முறையாகக் கேட்டறிந்து ஆராய்ந்து, இரண்டாம் முறை உரை எழுதி, மீண்டும் அவர்களிடம் காட்டினார். அவர்கள், மகிழ்ந்து பாராட்டினர் என்பதே செவிவழிச்செய்தி ஆகும். இச் செவிவழிச்செய்தி, உண்மையாக இருக்கலாம் எனச் சீவகசிந்தாமணியினைப்பதிப்பித்த உ.வே.சாமிநாதையர் அவர்கள் கருதுவர். நச்சினார்க்கினியர் உரை எழுதத் தொடங்கிய நூல் களில், முதல் முதல் உரை எழுதிய நூல், சிந்தாமணியாகும். தொல்காப்பிய உரையில் ''சிந்தாமணியுள் யாம் கூறிய உரைகள் பலவற்றாலும் உணர்க" என்று நச்சினார்க்கினியர் எழுதியிருப் பதை நோக்கினால், சிந்தாமணிக்கு முதலில் உரை எழுதியிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படும். ஆனால் சிந்தாமணியின் உரையில், '' என்னும் சூத்திரத்தில் கூறினாம்" என்று வரும் பகுதிகளை நோக்கினால், தொல்காப்பியத்திற்கே முதலில் உரை எழுதினார் என்னும் கருத்துத் தோன்றும். இவ்வாறு இருவகைப் பட்ட கருத்துக்கள் தோன்றும் நிலையில், உ. வே. சாமிநாதையர் அவர்கள், நச்சினார்க்கினியர், சிந்தாமணிக்கு உரை வரைந்தது பற்றி வழங்கப் பெறும் செவிவழிச் செய்தி கொண்டு அமைதி காட்டுகின்றார்கள். சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் முத லில் உரை எழுதும் போது, தொல்காப்பியத்திற்கு அவர் உரை எழுதவில்லை. இரண்டாம் முறை சிந்தாமணிக்கு உரை எழுதும் போது, தொல்காப்பியத்திற்கு உரை எழுதி முடித்தார். இதனால், நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு எழுதிய முதல் உரைக்கும்,

இரண்டாம் உரைக்கும் இடைப்பட்ட காலத்தில் தொல்காப்பியத்திற்கு உரைஎழுதினர் என்னும் கருத்துப் பெறப்படும் என்பது, ஐயர் அவர்கள் கருத்து. இது, நன்கு ஆராய வேண்டிய ஒன்றாகும்.

தனிப்பாடலுக்கு உரை எழுதுவதற்கும், காப்பியத்திற்கு உரை எழுதுவதற்கும் நிறைந்த வேறுபாடு உண்டு. தனிப்பாடல் உரையில், சொற்பொருளும் சொல் நயமும் பொருள் விளக்கமும் காட்டினால் போதும். காப்பிய உரையில், இவற்றிற்கு மேல், காப்பியக் கதையுடன் தொடர்பு படுத்தியும் உரை வரைதல் வேண்டும். இவ்வகையில் தனிச் செய்யுள் பாடும் புலவருக்கும், காப்பியம் பாடும் புலவருக்கும் எவ்வளவு வேறுபாடு உண்டோ, அவ்வளவு வேறுபாடு, தனிச்செய்யுள் உரையாசிரியருக்கும் காப்பிய உரையாசிரியருக்கும் உண்டு.

நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு உரை எழுதும் போது, குறிப்பிடத்தக்க சில நினைவுகளை மனத்தில் பதித்துக் கொண்டு உரை வரைகின்றார். கி. பி. 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கணங்களை நன்கு அறிந்திருக்கவே வேண்டும். ஆயினும் நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திலும் சங்கஇலக்கியத்திலுமே ஆழ்ந்த மனமுடையவர் ஆதலின், தொல்காப்பிய நெறியே தமிழ் நெறி என்று கொண்டு உரை வரைகின்றார். இதனால் தொல்காப்பியர் கூறிய இலக்கணமே சிந்தாமணிக்குக் கூறிய இலக்கணம் என்று அறுதியிடுகின்றார். சிந்தாமணிப் பாடல்கள் பலவற்றின் உரையில், தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்துக் காட்டியிருப்பது இதற்குச் சான்றுகள் ஆகும்.

தொல்காப்பிய நெறியை நச்சினார்க்கினியர் எவ்வளவு மதித்தாரோ அவ்வளவிற்குச் சங்கத் தமிழின் மரபையும் மதித்தார் என்பது சிந்தாமணி உரையால், வெளியாகின்றது. சிந்தாமணியில் "குரவிர்" (393) என்னும் சொல் விளிவேற்றுமையாக வருகின்றது. ஆனால், இச்சொல், "குரவீர்" என்று விளி வடிவத்தை ஏற்காமல் இயல்பாக நிற்கின்றது. இதற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் "குரவீர்—இயல்பாய் நின்றது" என உரை எழுதியிருந்தால் போதும். ஆனால், "இர் ஈறு கேளிச்

வாழியோ (குறுந்தொகை 280) என நின்றாற் போல இயல்பாய் நின்றது" என்று உரை வரைகின்றார். இவ் உரை, நச்சினார்க்கினியருக்குள்ள சங்க நூற் பயிற்சியைக் காட்டினாலும், திருத்தக்கதேவர் சங்க இலக்கியத்தை எழுத்து எண்ணிப் படித்தார் என்னும் எண்ணத்தையும் நச்சினார்க்கினியர் கொண்டிருந்தார் என்பதனையும் காட்டுகின்றது.

நச்சினார்க்கினியர், காப்பியத் தலைவன், தன்னிகரில்லாத் தலைவனாக இருக்க வேண்டும் என்ற காப்பிய மரபை நன்கு அறிந்து எழுதுகின்றார். அம்மரபுக்கு எங்கேனும் இழுக்கு வருமோ என்று ஐயப்படும் இடங்களில், அது வாராமல் எழுதுகின்றார். பதிகத்தில் முதற் பாடலிலேயே திருத்தக்க தேவர், சீவகனை ஏன் முற் கூறினார் என்பதனை எடுத்துக் கொண்டு, கதைக்கு நாயகன் ஆதலால் இவ்வாறு கூறினார் எனக் குறிப்பிடுகின்றார். இதனால், தலைவனுக்குத் தலைமைப் பண்பு தருதல் வேண்டும் என்னும் காப்பியக் கருத்தை அறியலாம். சிலப்பதிகாரத்திலும் தலைமைப் பாத்திரங்களை அறிமுகப் படுத்தும் இடத்தில் கண்ணகியே முதலில் அறிமுகப்படுத்தப்படுகின்றாள் என்பது நினைக்கத்தக்கது. சிலம்பை அறிந்த திருத்தக்கதேவர், சீவகனை முற்கூற, அதன் திறம் தெரிந்த நச்சினார்க்கினியர், அதனை வலியுறுத்தி எழுதுகின்றார்.

சீவகன் காந்தருவதத்தையை யாழிசையில் வென்றான் என்பது கதை. ஆனால், திருத்தக்க தேவர், சீவகன் காந்தருவதத்தையை வென்றான் என்று பாடவில்லை. பெண்ணை வென்றான் என்றால், அது, தலைவனுக்குப் பெருமையாகாது. ஆதலால், திருத்தத்தக்க தேவர் காந்தருவத்தை தோற்றாள் என்றே பாடுகின்றார்.

"விஞ்சைக்கு இறைவன்மகள்
வீணையில் தோற்றவாறும் (11)
மாதர் இசை தோற்றிருந்தனளே (735)

என்பன, திருத்தக்கதேவர் கூற்றுக்கள். இதனையறிந்த நச்சினார்க்கினியர், "ஒரு மகளை வென்றான் என்றல், இவன் தலைமைக்கு

இழிவென்று அவன் செய்தியாகக் கூறினர்" (11) என உரை வரைகின்றார், இவ் உரையால், பாத்திர இயல்பறிந்து உரை எழுதும் திறத்தைக் காணலாம்.

சீவகனின் தலைமைப் பண்பை எடுத்துக் காட்டுவது போலவே, கட்டியங்காரனின் இழிந்த பண்புகளையும் நச்சினார்க்கினியர் வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் எடுத்துக் காட்டுகின்றார். கோவிந்தையார் இலம்பகத்தில், ஆநிரைகளை வேடர்கள் பற்றிச் செல்கின்றனர். அதனை வாயிற் காப்போன் கட்டியங்காரனுக்குக் கூறுகின்றான். அப்போது கட்டியங்காரன் இருந்த நிலையினைத் திருத்தக்கதேவர், மிக அழகாகப் பாடுகின்றார்.

"செங்கண் புன்மயிர்த் தோல்திரை செம்முக
வெங்கண் நோக்கின் குப்பாயமிலேச்சனைச்
செங்கண் தீவிழி யாத்தெழித் தான்கையுள்
அங்கட் போதுபி சைந்தடு கூற்றனன்" 431

வாயிற் காப்போன் கூறியதும், கட்டியங்காரன் மிகுசினம் கொண்டான் என்பது இப்பாட்டால் தெரிகின்றது. நிகழ்ந்த செய்தியைக் கூறிய வாயிற் காப்பாளனை அரசன் சினத்தல், அரச தருமம் அன்று. ஆனால், கட்டியங்காரன் சினக்கின்றான் இது ஏன்? காப்பிய ஆசிரியர், இதனை விளக்க இயலாது. உரையாசிரியரே இதற்கு உரியவர். எனவே நச்சினார்க்கினியர் "அவன் அரசன் அன்மையின் கோபம் எளியார் மேற்றாயிற்று" என்று குறிப்புரை வரைகின்றார். கட்டியங்காரன் முதலில் அமைச்சனாய் இருந்து, அரசனாகிய சச்சந்தனைக் கொன்று, ஆட்சியைப் பெற்றவன் ஆதலால், அவன் அரசன் அல்லன்; ஆதலின், அவனுக்கு அரச தருமம் தெரியவில்லை; எனவேதான் அவன் கோபம் எளியார் மேல் சென்றது என்னும் கருத்துத் தோன்ற விளக்குகின்றார். இச்சிறு குறிப்பினால், கதை நிகழ்ச்சியும், கட்டியங்காரன் என்னும் பாத்திரத்தின் இயல்பும் வெளிப்படுமாறு செய்கின்ற திறம் அறியலாம். இத்தகைய இடங்கள் சீவகசிந்தாமணியில் காப்பிய வளத்தை மிகுவிக்கின்றன.

அநங்கமாவீணை என்பவள் பவதத்தனின் மனைவி. பவதத்தனும் 'அநங்கமாவீணையும் காட்டுவழியே செல்லும்போது, அநங்கமாவீணை, நீர்வேட்கையால் வருந்தினாள். பவதத்தன், நீர் கொண்டு வருவதற்காகப் பிரிந்தான். அப்போது, அநங்கமாவீணை, அக்காட்டில் இருந்த வனசரிதன் மீது காமுற்றாள்.

கேமசரியைப் பிரிந்து செல்லும் சீவகன், ஒரு வனகிரியை அடைந்து, அங்குள்ள சோலையொன்றில் தங்கினான். இச் செய்தியைக் கூறியபின் அமையும் பாடல்,

> "கானகத்தின் ஏகு கின்றான் கடிபொழிற் கவின்கண்டு எய்தித்
> தானத்தில் இருத்த லோடும் தையலாள் ஒருத்தி தானே
> வானத்தில் இழிந்து வந்த வானவர் மகளும் ஒப்பாள்
> நானமும் பூவும் சாந்தும் நாறவந் தருகு நின்றாள் (1567)

என்பதாம். இப்பாடலுக்குப் பொருள் கூறும் சிலர், கானகத்தில் ஏகுகின்ற சீவகனைக் கண்டு, அநங்கமாவீணை காமுற்றாள் என்று பொருள் கூறுவர். ஆனால், நச்சினார்க்கினியர், சீவகன் அச் சோலையில் தங்கியிருந்தபோது, அநங்கமாவீணை என்னும் தையலாள், அம் முனிவர் உறையும் இடத்திலிருந்த வனசரிதன் ஒருவனைக் கண்டு காமுற்றாள் என்று எழுதுகின்றார். பாட்டில், சீவகன் என்பதற்கோ வனசரிதன் என்பதற்கோ நேரான சொல் இல்லை. அவ்வாறிருந்தும் வனசரிதன் என்று நச்சினார்க்கினியர் எழுதுவானேன்? என்னும் வினா எழலாம்.

அநங்கமாவீணையைக் கண்டவனின் ஆவியைப் பிளக்குமாறு காமனுக்கு உரிய ஐந்து மலர் அம்புகளையும் அவ் அநங்கமாவீணை எய்தாள். இதனைத் திருத்தக்கதேவர், "அறியுநர் ஆவி போழும் அம்பு" என்று கூறுவர். இதனால், அவளைக் கண்டவனின் நெஞ்சம், தன் தன்மையில் சிறிது திரிந்தது என்பது பெறப்படும். அவ்வாறு திரிந்தமையாலேயே அவன், தன் நெஞ்சினை விளித்துக் கூறுவதாக, ஐந்து பாடல்கள் உள்ளன. இவ்வாறு திருத்தக்க தேவர், நிகழ்ச்சியைப் பாடியுள்ளார். இந் நிகழ்ச்சிகளை நச்சினார்க்கினியர் சிந்திக்கின்றார். சீவகன் அநங்கமாவீணையைக் கண்டு நெஞ்சு சிறிது திரிந்தான்

என்ருல், அது, சீவகனின் தலைமைக்கு இழுக்கு என்று கருது கின்ருர். எனவே, ''கானகத்தில் ஏகுகின்ருன்" என்னும் பாட்டில் கானகத்தில் ஏகுகின்ருன் என்பது பெயர்ச்சொல். அது, வனசரிதன் என்னும் வட மொழிப்பெயரின் ஆக்கம் என்று கொள்கின்ருர். இவ்வாறு கொண்டபின், அவர் எழுதும் விளக்க உரை, தலைமைப் பாத்திரப்பண்பைக் காப்பதாய் அமைந்துள்ளது.

''இங்ஙனம் கூருது, சீவகன் கவினைக் கண்டு அவள் எய்தினுள் என்று கூறின், மேல் இவற்கு இவள் வேட்கை விளைத்தலின், இவன் நெஞ்சு தன் தன்மை திரிந்ததனை இவன் தேற்றினுன் என்று கூறுவர். அங்ஙனம் கூறவே, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினுல், செய்து கொள்ளும் பாவங்களில் சிறந்த, மனத்தால் செய்து கொள்ளும் பாவமும் சீவகற்கு எய்திற் ரும், ஆதலானும், உழுவல் அன்போடு தோன்றிய மகளிரிடத்து அல்லது இவற்கு வேட்கை நிகழாது என்பது, இத்தொடர்நிலைச் செய்யுட்குக் கருத்து ஆதலானும். அது, மாறுபடக் கூறிற்ரும் என்று உணர்க" என்று நச்சினுர்க்கினியர் எழுதியுள்ளார். இவ் உரையை நோக்கினுல், சீவகனைத் 'திரிகரணசுத்தி" உள்ளவ னுகக் காட்ட வேண்டும் என்னும் நச்சினுர்க்கினியரின் உள்ளக் கிடக்கை வெளிப்படும். மேலும், சீவகன் எண்மரை மணந்தான் என்பதால், அவனைக் காமுகன் என்று கருதி விடுவாரோ என நினைத்து, உழுவல் அன்போடு தோன்றியவர்களிடத்துத்தான் அவனுக்கு வேட்கை நிகழும் என்பதனையும் காட்டிச் சீவகன் தன்னிகரில் தலைவன் என்று நிறுவுகின்ருர். இது போன்ற இடங்களில், திருத்தக்கதேவரின் கவிமனத்தையும் காப்பியப் போக்கையும் எடுத்து காட்டும் நச்சினுர்க்கினியரால் திருத்தக்க தேவரின் புகழ் மிகுகின்றது.